
இது ஒரு ★★★★★ இதழ்
குடும்ப நாவல்
ஜூன் - 16, 2011
ரூ.15
தன்னம்பிக்கை அன்னை
அனுராதா ரமணன்
முதலாமாண்டு நினைவஞ்சலி மலர்
அனுராதா ரமணன்
வரலாமா உன்னோடு? - முழு நாவல்
கரு! - குறுநாவல்



## அனும்மாவைத் தேடி...

**அ**னுராதா ரமணன் என்ற அந்த அதிசயப் பெண்மணி கண்மூடி அதற்குள் ஓராண்டா...? நம்பவே முடியவில்லை.

அட்டைப் படத்தை ஒருமுறை பாருங்கள்.

என்ன ஒரு ஏகாந்தம்!

கள்ளம்கபடமற்ற சிரிப்பு - ரசனைக்கு ஏற்ற புடவை; முக அலங்காரம்.

இருபத்தி ஐந்து ஆண்டு நட்பை மறக்க முடியுமா...?

நன்மதிப்பில் இறந்தவர்கள் இறைவனாகிறார்கள்.

வணக்கம் செய்து சந்தித்த சினேகிதியை வணங்கத் தொடங்கிவிட்டேன்.

இந்த இதழில் இடம்பெற்றுள்ள '**கரு**' என்ற குறுநாவலை பலமுறை அனும்மா என்னிடம் கேட்டுள்ளார். 'பாக்கெட் நாவ'லின் எந்த இதழில் வந்தது எனத் தெரியாமல் இருந்தேன்.

அண்மையில் எனது வணக்கத்திற்குரிய வீர.அருணாசலம் அவர்களின் துணைவியார் இந்திராணி ஆச்சி, அவரின் சேகரிப்பில் இருந்தது என எனக்குக் கொடுத்து விட்டார். அவர் மூலம் எனக்குக் கிடைத்த அந்த 'கரு' என்ற குறுநாவலை இப்போது அப்படியே தந்துள்ளேன்.

நாங்கள் அனும்மாவை ரொம்பவே தவற விட்டு விட்டோம்.

அனுராதா ரமணனின் நாவல்களை 'குடும்ப நாவ'லில் மறுபிரசுரம் செய்ய அவரின் மகள்களிடம் அனுமதி பெற்றுக் கொடுத்த அனும்மாவின் சகோதரி ஜெயந்தி சுரேஷுக்கு நன்றி.

- **ஜீயே.**



-குறுநாவல்

# 'கரு'

1

**நா**கு, உள்ளே அழுது கொண்டிருக்கிறாள்.

நாலு நாட்களுக்கு முன் - ஒரு விடிகாலைப் பொழுதில் ஜனித்த அழுகை அது. இன்னும் ஓயவில்லை.

இந்த நேரத்தில், வீட்டுக்குள் போக - மாதையனுக்கு விருப்பமில்லை.

நாகு அழுவதைப் பார்த்தால் அவனுக்கு மனசு தாங்காது. திருமணமாகி, ஒரு வருஷம் வரையில் - நாகு சிரித்துக் கொண்டு தான் இருந்தாள்.

மாநிறமான, களையான முகம் அவளுடையது. சிரித்தால், தேங்காயைக் கீற்று போட்டு வைத்தாற் போல இருக்கும். மனைவி, சிரித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே, அவன் ஏதாவது ஜோக் சொல்லுவான்.

சினிமாவில் பார்த்தது, பத்திரிகைகளில் படித்தது இதெல்லாம் தவிர அவன் வேலை பார்க்கும் மருத்துவக் கல்லூரி மாணவர்களிடமிருந்து அவ்வப்பொழுது கிடைக்கும் 'ஏ' ஜோக்குகளையும் வீட்டுக்கு எடுத்து வந்து, மனைவியிடம் கொட்டி முழக்குவான். அவள் சிரிப்பதைப் பார்த்து, தன்னையே மறந்து, மணிக்கணக்கில் உட்கார்ந்தும் விடுவான்.

அதெல்லாம் ஒரு காலம். மூத்த குழந்தையை அவள் வயிற்றில் சுமக்கும் வரையில்தான் - அந்த சிரிப்பின் சுகத்தை மாதையன்

**அனுராதா ரமணன்**

அனுபவிக்க முடிந்தது.

முதல் முறை - நாகுவுக்கு அறுபது நாளில் குறைப் பிரசவமாகிறது.

கண்களில் நீர் திரையிட, கூடத்துப் பாயோடு சுருண்டு கிடந்தவளை, அள்ளி மடிமீது வைத்து ஆறுதல் சொன்னவன் அவன் தான்.

''இப்ப என்ன... நீயும் நானும் கிழமாயிட்டோமா... இங்கே பாரு.... போன வருசம்தானே நமக்கு கல்யாணமாச்சு? நீ முழுகாம இருக்கறதா சொன்ன அப்ப 'அதுக்குள்ளார என்னா அவசர'மின்னு... மனசு போலவே ஆயிருச்சு. 'அட சரிதான்'னு விடுவியா... இதுக்குப் போய் பச்சை புள்ளயாட்டம் அழுதுகிட்டு.''

இப்படி சொன்ன மாதையன், சுற்று வட்டாரத்தில் கண்ணுக்கெட்டிய வரையில், தன் மாமியார் இல்லையென்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு, நாகுவின் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, அழுந்த முத்தமிட்டான்.

''அடடா.... இன்னும் என்ன அழுகை... சிரி பார்க்கலாம்.''

அவள், கிள்ளிப் போட்ட நகத்தின் அளவுக்கு சிரித்தாள்.

''இல்லை, தலைச்சன் ஒழுங்காப் பொறந்தாத்தான் அடுத்ததும் ஒழுங்காப் பொறக்குமாம். முதல் தடவை தட்டினா - மூணு தடவை தட்டும்னு எங்க அம்மா சொன்னாங்க.''

''முதல்லே, உங்க அம்மாவை பார்சல் பண்ணி ஊருக்கு அனுப்பு சொல்றேன். சின்னப் பொண்ணுக்கு தைரியம் சொல்றதை விட்டுட்டு, ஒரு அம்மா பேசற பேச்சாடி இது...''

மாதையன், பொய்யாய் கோபித்தான். ஆனால் அதற்குப் பிறகோ...

முதலுக்குப் பிறகு மூன்று தரமில்லை. கிட்டத்தட்ட ஆறோ, ஏழோ ஆகி விட்டது.

எல்லாமே - வயிற்றில் ஜனித்த ஆறாம் மாசத்துக்குள் தப்பினால் ஏழாம் மாசத்துக்குள் - அவசரக் குடுக்கைகளாகப் பிறந்து,ஒருநாள் கூட, உலகத்தில் உள்ள சுக துக்கங்களை அனுபவிக்காமல் கண்களை மூட....

நாகுவின் முகத்தில் சிரிப்பே அஸ்தமித்து விட்டது. கணவனுடன் பேசுவதும், சாப்பாடு பரிமாறுவதும், ஏன் - அவனுடன் படுப்பதும் கூட யந்திர கதியில்....

மாதையன், இவள் ஆசைப்படும் ஒரு குழந்தைக்காக பார்க்காத வைத்தியமில்லை.

கடைசியில், சென்ற வருஷம் - இவள் மறுபடியும் இரண்டு மாதக் கருவைச் சுமந்த போது - மருத்துவக் கல்லூரி புரபஸர் சந்திரமணியின் ஆலோசனையுடன், மனைவியை ஏகமாய் பராமரித்தான். படுக்கையிலேயே வைத்து, டானிக்குகளையும், மருந்துகளையும் வாங்கிக் கொடுத்து, ராஜ மரியாதைகளுடன் பிறந்தவன்தான் குப்பன்.

எத்தனையோ நல்ல பெயர்கள் இருக்க நாகு, குழந்தைக்கு 'குப்பன்' எனப் பெயர் வைத்தது, மாதையனுக்கு சங்கடமாகத்தான் இருந்தது.

''உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. குப்பன்னு பேரு வச்சு, குப்பையில



போட்டு எடுத்தா, அந்தப் பிள்ளை தீர்க்காயுசா இருக்குமாம். பேருல என்ன இருக்குதாம். பையன் நல்லாயிருந்தா சரிதான்.''

வெகு நாட்களுக்குப் பிறகு - அன்றுதான் நாகு சிரித்தாள்.

ஆனால்....

குப்பன் பிறந்த பிறகு - மாதையனுக்குத்தான் சிரிப்பே அற்றுப் போய் விட்டது.

குழந்தை - குழந்தையாகவா வளர்ந்தது?

பிறந்ததிலிருந்து - இதோ, நாலு நாள் முன்பு வரையில் துணிச்சுருளில்தான் கிடந்தான் குப்பன். எட்டு மாதக் குழந்தை - 'தத்தக்கா - புத்தக்கா' வென நடை பயில வேண்டியது போக - போட்ட இடத்தில் போட்டபடி கிடந்தான். தலை, கழுத்தில் நிற்கவேயில்லை.

எப்பொழுதுமே ஏந்தும் குழந்தைதான்.

கொடுக்கிற ஆகாரமெல்லாம் மண்டை ஓட்டுக்கே போய் விடுகிற மாதிரி... தலைதான் பெருத்துக் கொண்டே வந்ததே தவிர - உடம்பு தேறவே இல்லை.

குழந்தை பிறந்த மூன்றாம் மாதத்திலிருந்தே மறுபடியும் டாக்டர்களைத் தேடிப் படையெடுத்தான் மாதையன்.

ஒரு டாக்டராவது, குழந்தை பிழைக்குமென்றே சொல்லவில்லை.

மாதையன் அலுத்து சோர்ந்தாலும், நாகு அலுக்கவில்லை. மருந்து, மாத்திரை கைவிட்ட போதும் - மந்திரம், தாயத்து என்று தேடித் தேடி ஓடினாள்.

இன்று, சுத்தமாய் தேடல் எல்லாம் நின்று விட்ட நிலை.

மாதையன், வீட்டுக்குள் எட்டிப் பார்த்து விட்டு, தனது வேலைக்குப் புறப்படுகிறான்.

இவளைப் போல - இவன் துக்கம் கொண்டாடிக் கொண்டு, வீட்டோடு இருக்க முடியுமா...?

துக்கமா....?

குழந்தை போனதில் மாதையனுக்கு கடுகளவாவது துக்கம் இருந்ததோ....?

சொல்லப் போனால் இத்தனை நாளும் இருந்த சுமை நீங்கி, நெஞ்சு 'பளிச்'செனத் துடைத்து விட்டாற் போல இருக்கிறது.

'அப்பாடா... சனி ஒழிந்தது.'

மனதார, செத்துப் போன குப்பனைத் திட்டிக் கொண்டே கல்லூரிக்குள் நுழைகிறான் அவன்.

இந்த எட்டு மாதங்களாய், அவனுக்குத்தான் எத்தனை செலவு.

டாக்டர், மருந்து, இவைகள் சலுகையில் கிடைத்தாலும், குழந்தையையும், நாகுவையும் அழைத்துக் கொண்டு, சிகிச்சைக்காக ஆட்டோவில் அலைந்த அந்தப் பணத்தை சேர்த்து வைத்திருந்தால் கூட, உருப்படியாய் வீட்டு வாடகைச் செலவையும், மளிகைக் கடனையும் சமாளித்திருக்கலாம்.

காசு - தண்ணீர் பட்ட பாடாக அல்லவா இருந்தது?

முதல் நாள் இரவு, நாகு விசும்பிக் கொண்டிருந்த போது கூட, மாதையன் எரிச்சலை அடக்கிக் கொண்டு கூறினான்.

''இந்தா. அது ஏதோ கடனை வசூலிக்க வந்திச்சு. வந்த வேலை முடிஞ்சதும் போயிருச்சு. அது எப்பவாவது சிரிச்சிருக்கா? வாயைத் திறந்து 'ஆ, ஊ' -ன்னு சத்தம் போட்டிச்சா? பார்க்கப் போனா, நம்ம வீட்டுக்கு யாராச்சும் வந்தா, இதோட பனங்கா மண்டைய பார்த்துட்டு கேலி பண்ணப் போறாங்களேயின்னு பிள்ளைய ஒளிச்சு வைக்கத்தான் நமக்கு நேரம் சரியா இருந்தது. சரிதான்னு விடுவியா...

முந்தி பொறந்ததெல்லாம்... வயித்துக்குள்ளார எட்டு மாசம் வரைக்கும் வளர்ந்து அதிர்ஷ்டமில்லாமப் போச்சு. இது பொறந்து, எட்டு மாசம் வளர்ந்து போச்சு. அவ்வளவு தான். நமக்கு குழந்தையே வேண்டாம்.''

அவள், எல்லாவற்றுக்கும் மௌனமாய் இருந்து விட்டு, இரவு பத்து மணிக்கு மேல், நினைத்துக் கொண்டு கேட்டாள்.

''ஏங்க, நேத்து பாலு ஊத்தினீங்களா - பிள்ளைய புதைச்ச எடத்துல...?''

'திக்'கென்றாகியது மாதையனுக்கு.

''ஓ... ஊத்தினேன் நாகு. இப்ப நீ பேசாமத் தூங்கு.''

''இல்லே.... குப்பன் பாலுக்காக அழற மாதிரி இருக்குங்க.''

''அதெல்லாம் வெறும் பிரமை. நீ இப்படியே - போனதை நினைச்சு அழுதுட்டேயிருந்தா ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் பைத்தியமா அலைய வேண்டியதுதான்.''

அவனது வார்த்தைகளில் தொனித்த எரிச்சல் அவளை வாய் மூட வைத்தது.

ஆனால், அவனுக்குள் சின்னதாய் ஒரு உறுத்தல்.

'நிஜமாவே, குப்பன் தனக்கு பால் ஊத்தலைங்கற விஷயத்தை, ஆவியா வந்து - அவனோட அம்மாகிட்ட சொல்லியிருப்பானோ?'

'சே... சே... ஆவியாவது இன்னொன்னாவது... நான் போய், இதையெல்லாம் நம்பறேனே...'

இதற்குப்பின், அவ்வன் நிம்மதியாய் தூங்கினான். காலையில், துக்க வீட்டில் வயிற்றுக்கு எதுவும் கிடைக்காது என்று தோன்றினபடியால் தனது யூனிஃபாரத்தை எடுத்து மாட்டிக் கொண்டு கல்லூரிக்கு கிளம்பி விட்டான்.

கல்லூரி, சிற்றுண்டி சாலையிலே காலை காபி, டிபன் எல்லாம்.

கல்லூரிக்கு சொந்தமான மியூஸியத்தில்தான் இவன் வாட்ச்மேனாக இருந்து வருகிறான்.

சின்ன வயசில், படித்து டாக்டராக வேண்டும் என்கிற ஆசை மாதையனுக்கு நிறைய. வசதியில்லை. இவன் வேலை பார்த்து மற்ற தம்பி தங்கைகளைக் காப்பாற்ற வேண்டிய நிலை.

ஒரு காலத்தில் தான் ஒரு டாக்டராக ஆக முடியாவிட்டாலும், குறைந்தபட்சம்



ஒரு கம்பவுண்டராகக் கூட ஆளாக முடியவில்லையே என்று வருத்தப்பட்டவனுக்கு இந்த மருத்துவக் கல்லூரி பொருட்காட்சி சாலையில் உத்தியோகம் கிடைத்தது ரொம்பவும் சந்தோஷமாகத்தான் இருந்தது.

இங்கே - மியூஸியத்தைப் பார்வையிட வரும் மாணவர்களுடன் தமாஷாய் பேசி, மருத்துவர்கள் காலால் இட்ட பணியை தலையால் செய்து...

மாதையன் என்றாலே, கல்லூரியிலுள்ள அத்தனை பேருக்கும் தனி பிரியம்.

மூன்று நாட்களாய், அவன் வேலைக்கு வராததால் ஒவ்வொருத்தராய் அவனை நிறுத்தி வைத்து விசாரிக்கிறார்கள்.

''என்ன மாதையா... உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. வீட்டுல ஒரு அசம்பாவிதம்... என்னோட குழந்தை செத்துப் போச்சு.''

''அடப் பாவமே! என்னப்பா உடம்புக்கு?''

''பொறந்தது முதலே 'இது சரிப்பட்டு வராது'-ன்னு எல்லா டாக்டர்களும் கைய விரிச்ச கேசுதாங்க. எப்பவோ போயிருக்க வேண்டியது.''

''வருத்தப்படாதே மாது. இந்த மாதிரி கேசுங்க, இருக்கறதைவிட, போறது எத்தனையோ மேல்.''

''நானும் அப்படித்தாங்க நினைக்கறேன்.''

ஒவ்வொரு முகமாய் பார்த்து, சிரித்து, பதட்டப்படாமல் பதிலளித்து, அவன் - மியூஸியத்தின் நீண்ட ஹாலின் வாசற்பக்கமாய் ஸ்டூலில் போய் அமருகிறான்.

டாக்டர் சந்திரமணி வந்தபோது வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறான்.

''எப்படியிருக்கா உன் சம்சாரம்?''

''அது அழுதிட்டுதாங்க இருக்கு...''

''அவளுக்கு இந்த விஷயம் தெரியுமோ?''

சந்திரமணி, பொருட்காட்சி சாலையின் அகன்ற மேஜை மீது, வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணாடி ஜாடிகளில், ஒரு ஜாடியை சுட்டிக் காட்டியபடி கேட்கிறாள்.

''நான் இதெல்லாம் அதுங்கிட்ட சொல்றதே இல்லீங்க. பொம்பிளை மனசு, அத்தனை தைரியம் போதாது. செத்ததுக்கு அப்புறம், இந்த உடம்பை யாருக்கும் உதவாமப் புதைக்கறதைவிட - நாலு ஸ்டூடண்ட்ஸுக்கு வியாதி என்னான்னு புரிஞ்சுக்க உதவட்டுமேயின்னு நான் நினைக்கிறேன். அது நினைக்காதுங்க. நேத்து ராவே 'புதைச்ச எடத்துல பால் ஊத்தினியா'-ன்னு கேட்டு அழுதது.''

''த்ச்... பாவம்.''

''ஏதோ தலையெழுத்து. நான் அதிகம் வசதியில்லாதவன். இந்த மட்டுக்கும் இத்தோட போச்சேயின்னு சந்தோஷப் படறேன். அவளுக்கும் நாளடைவுல சோறும் நீரும் உள்ளே எறங்க, எறங்க - துக்கம் குறையும்னு நினைக்கறேன்.''

டாக்டரம்மாவிடம் இவன், இவ்வளவு பேசியதே அதிகம்.

'சட்'டென ஏதோ உரிமையில் தான் நிறையப் பேசுகிறோமோ என்கிற

உறுத்தல் எழ, அவன் வாயை இறுக மூடி, இரு கைகளையும் மார்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டு - டாக்டரம்மா உள்ளே செல்வதற்கு வழி விட்டு, ஒதுங்கி நிற்கிறான்.

டாக்டர் சந்திரமணியின் பின்னாலேயே பட்டாம்பூச்சி கூட்டம் போல மாணவ மாணவிகள்...

''ஹேய்... முன்னாலே போ மேன்.''

எவளோ ஒரு மாணவி, தன் முதுகை முகர்ந்தபடி வரும் மாணவனிடம் பொய்யாய் சிணுங்குகிறாள்.

அதற்கு, அவன் என்ன சொன்னானோ.... சாக்லேட் காகிதங்களை உரசுவது போல - கசமுசவென சிரிப்பொலி...

மாதையன் அவர்களையே ஒரு கணம் - கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நாகு, தலைச்சனை வயிற்றில் தரித்த போதே - மாதையன் பேச்சுவாக்கில் அவளிடம் தன் ஆசையை சொல்லியிருக்கிறான்.

'பொறக்கறது பொண்ணோ, பிள்ளையோ அதை டாக்டருக்குப் படிக்க வைக்கணும் நாகு. எங்க காலேஜ்ல படிக்க வர்ற பசங்களைப் பார்க்கறப்போ எல்லாம் நான் இதைத்தான் நினைச்சுப்பேன். என் குழந்தையும் வெள்ளைக் கோட்டை மாட்டிட்டு, சட்டைப் பையில, 'ஸ்டெதாஸ்கோப்'பை திணிச்சுட்டு மியூஸியத்துல இருக்கற ஸாம்பிள்ளை பார்க்க வரணும். நான் எழுந்து நின்னு, 'குட்மார்னிங் டாக்டர்'னு சல்யூட் அடிக்கணும்.''

நாகு, அவனது கன்னத்தில் செல்லமாய் இடித்து சிரித்தாள்.

''ஐய, போதுமே... உங்க குழந்தைக்கே, நீங்க 'குட்மார்னிங்' சொல்ற லட்சணம்.''

''சொன்னா என்னடி.... என் பிள்ளையானாலும், அந்த வெள்ளை கோட்டுக்கும், ஸ்டெதாஸ்கோப்புக்கும் தனி கௌரவம் உண்டுடி. அது என்னா வேலை... ஒவ்வொரு உசிருக்காகவும் எமனோட போராடற வேலை.''

மாதையன் நீண்ட பெருமூச்சுடன் முள்ளடர்ந்த முகவாயைத் தேய்த்து விட்டுக் கொள்கிறான்.

அவனது பார்வை - மேஜையின் மீது புதிதாய் முளைத்திருந்த கண்ணாடி ஜாடியின் மீது பதிகிறது. ஏதோ ஒரு திரவத்தில் மிதந்து கொண்டிருக்கிறான் குப்பன்.

சுருண்டு படுத்த நிலையில்...

வாசற்புறத்திலிருந்து பார்க்கையில் - ஜாடி வெகு தொலைவில் இருந்தாலும் குழந்தையின் முகம் நன்றாகத் தெரிகிறது.

பாதி விழிகள் மூடி - உதடுகள் லேசாகப் பிரிந்து சிரிப்பது போல...

மாதையன், ஏதோ ஒரு காட்சிப் பொருளைப் பார்ப்பது போல, அதை ஒருகணம் வெறித்து விட்டு அதே வரிசையில் சற்று தள்ளியிருந்த மற்ற ஐந்தாறு ஜாடிகளைப் பார்க்கிறான்.



எல்லாமே அவனுடைய வாரிசுகள் தான்.

டாக்டருக்குப் படித்து, ஸ்டெதஸ்கோப்பும் கையுமாய் மியூசியத்துக்குள் கம்பீரமாய் நுழைய வேண்டிய அவனது வாரிசுகள் தாங்களே காட்சிப் பொருளாய் - கண்ணாடி ஜாடிக்குள் இருந்தபடி, தங்களெதிரே அணிவகுத்துப் போகும் எதிர்கால மருத்துவர்களைக் காணப் பிடிக்காதவைகள் போல, கண்மூடி ஆழ்துயிலில்....

நாகுவின் முதல் கருவை தவிர - மற்றவை எல்லாமே இங்கேதான்.

பலப்பல விதங்களில்.. பலப்பல தோற்றங்களில்...

மாதையன், விரல் விட்டு எண்ணுகிறான்.

ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு... குப்பனை சேர்த்தா ஏழா?

முதல் முறை, நாகுவிற்கு வீட்டிலேயே குறைப் பிரசவமாயிற்று.

அதற்குப்பின் ஒவ்வொரு முறையும், வயிற்றுப் பிள்ளையைத் தங்க வைக்க - அவன் டாக்டர் சந்திரமணியின் தனி நர்ஸிங் ஹோமுக்குத்தான், மனைவியை அழைத்துக் கொண்டு ஓடி வருவான்.

இரண்டாவது - பெண் கரு... மூன்று மாதம் முடிவதற்குள்...

குறைப் பிரசவத்தினால் மனம் வெதும்பி, அழுது கொண்டிருந்த மனைவியை சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் நர்ஸிங் ஹோமின் வெராந்தாவில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்த போது டாக்டர் சந்திரமணி தனது அறைக்கு அவனை அழைத்துப் போனாள்.

''மாதையா, நாளைக்கு இந்தக் கண்ணாடி ஜாடியைக் கொண்டு மியூஸியத்துல வச்சுடு... ஸ்டூடண்ட்ஸுக்கு இதைப் பத்தி டீடெயிலா விளக்கணும்.''

மாதையன் - அறையின் ஒதுக்குப்புறமாய், கண் மறைவாய் இருந்த ஜாடியைப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறே.... உன் குழந்தைதான். பொண்ணு...''

அவனது விழிகள், அளவற்ற ஆச்சரியத்தில் விரிந்தன.

''பொண்ணா, பிள்ளையான்னு தொண்ணூறு நாளுலேயே தெரியுமா?''

''அம்பது நாளுலேயே தெரியும். மாதையா... ஒரு விஷயம்.

சாதாரணமா, இதுமாதிரி ஸாம்பிள்ளை நாங்க பிரிஸர்வ் பண்ணி வைக்கறதை, குழந்தையோட பெத்தவங்ககிட்ட சொல்ல மாட்டோம். ஆனா மியூஸியத்தை கவனிச்சுக்கற உன்கிட்ட இதைச் சொல்றதை தப்பா நினைக்கலே நான். இப்பக்கூட ஒண்ணும் மோசமில்லை. உனக்கு இதுல இஷ்டமில்லையின்னா வேண்டாம். ஹாஸ்பிட்டல்ல அபார்ஷன் கேசுங்களுக்குப் பஞ்சமில்லை.... இதைத் தூக்கிப் போட்டுடறேன். ஆனா, நாளைக்கு கிளாஸ் நடத்த வேற ஸாம்பிள் வேணும்.''

மாதையன், ஏதோ செத்துப் போன பல்லியைப் பார்ப்பது போல, ஜாடிக்குள் திரவத்தில் மிதக்கும் கருவைப் பார்த்தான்.

''ஏதோ ஸ்டூடண்ட்ஸுக்கு இப்படியாவது உதவ முடியறதேயின்னு

சந்தோஷப்படறேங்க. நீங்க செஞ்சதுதாங்க சரி. மியூஸியத்துல இத்தனை வருஷமா இருக்கேன். எனக்கு இந்த மாதிரியான கண்மூடித்தனமான பாசமெல்லாம் எதுவும் கிடையாதுங்க. ஆனா, என் பெண்டாட்டிக்கு மட்டும் இந்த விஷயம் தெரிய வேண்டாம்.''

சந்திரமணி அவனைப் பரிவுடன் பார்த்தாள்.

''நிஜமாவே நீ ரொம்பவும் பிராக்டிகல் மேன். மாதையன்... உன்னோட அறிவுபூர்வமான பதில் எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. ஏன்னா, படிச்சவங்களாலேயே இத்தனை விவேகமாப் பேச முடியாது.''

அடுத்த நாள் -

அவனே, கண்ணாடி, ஜாடியை மியூஸியத்துக்கு எடுத்துச் சென்றான்.

மூன்றாவதும், நாலாவதும் பிள்ளைக் குழந்தைகள், ஆறுமாத வளர்ச்சியும், ஆறங்குல உயரமுமாய் சின்ன பால் பவுடர் டின்னுக்குள் போட்டு மூடி வைத்து விடலாம் போல...

ஐந்தாவது பெண்...

ஏழு மாதத்தில் உயிருடன் பிறந்து, ஒரு மணி நேரத்துக்குள்ளேயே இறந்தது. செக்கச் செவேலென்று முகத்திலும் உடம்பிலும் சுருக்கங்கள் முழுதும் நீங்காத நிலையில்...

வலது கை சுண்டு விரலுக்குப் பககத்தில் முழு துவரம் பருப்பு அளவில்... அது மருவா... இல்லை... ஆறாவது விரலா... சரிவரத் தெரியவில்லை.

ஆறாவது பிள்ளை.

இதுவும் ஏழுமாத வளர்ச்சிதான். ...... முன்னதைவிட சற்று புஷ்டியாக - உடம்பு முழுக்க மொசமொசவெனப் பொன்னிற வெல்வெட் மாதிரி ரோமம் - பின் முதுகில் பச்சையாய் அடர்ந்த மச்சம்.

இப்பொழுது குப்பன்.

இவன் பிறந்து எட்டுமாத வளர்ச்சியில் உடம்பு வளரா விட்டாலும், தலை மாத்திரம் பெரிய முற்றின முழுத் தேங்காய் மாதிரி.

இவனுக்குக் கொஞ்சம் பெரிய ஜாடி வேண்டியிருந்தது. இவனை, டாக்டரிடம் கொண்டு சேர்த்ததே மாதையன்தான்.

பிள்ளையைத் தூளி கட்டி, தூக்கிக் கொண்டு இடுகாட்டுக்குப் போக மாதையன் மறுத்து விட்டான்.

''சும்மா கூட்டம் கூட்டாதே நாகு. நானே எடுத்திட்டுப் போய், எங்க ஆஸ்பத்திரி மயானத்துலேயே புதைச்சிடறேன்.''

''பிள்ளையே போயாச்சு. இனிமே நீங்க எந்த மயானத்துக்கு எடுத்திட்டுப் போனாத்தான் என்ன... நானா கூட வரப் போறேன்?''

நாகு, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.



குழந்தையின் உள் உறுப்புகளை அகற்றி, நார்வைத்து தைத்து, அமிலத்துக்குள் டாக்டர் சந்திரமணி போட, மாதையன் சொன்னான்.

''இதுமாதிரி மண்டை வீங்கின குழந்தைங்க எதனால பொறக்கறது, ஏன் பொறக்கறதுன்னு - நம்ம காலேஜ் பசங்களுக்கு விளக்கி சொல்லுங்க டாக்டர். பின்னாலே உபயோகமா இருக்கும்.''

மாதையன் கொலு பொம்மைகளை அடுக்குவது போல எல்லாவற்றையும் வரிசைப்படுத்தி வைக்கிறான்.

ஒரு காலத்தில் அவனது தாய் கண்ணாடி புட்டிக்குள் மெல்லிய கம்பிகளில் பாசி மணிகளுடன் ஸெலூலாயிட் பறவை, பொம்மை இவைகளை அலங்காரமாய் நுழைத்து வைத்திருந்ததுதான் நினைவுக்கு வந்தது அவனுக்கு.

தனது வாரிசுகளுக்கு அவன் விளையாட்டாய் பெயர்கூட சூட்டியிருக்கிறான்.

பிரபா.... ரவி... பாபு... கல்பனா... குமார்...

நாகுதான் கடைசிப் பிள்ளைக்கு குப்பன் என்று அசிங்கமாய்...

'பரவாயில்லே... இருக்கட்டும்.... செத்துப் போன பிள்ளைக்கு ஏதோ ஒரு பேரு.'

மாதையன் நாகுவின் நினைவில் தோய்ந்து போகிறான்.

'அவளை சாயந்திரமா பீச்சுக்காவது அழைச்சிட்டுப் போகணும். இப்படியே விட்டா மூளை கலங்கிப் போயிடும்.'




''என்னை எங்கேயும் கூப்பிடாதீங்க. வெளி மனுஷங்களைப் பார்க்கவே பிடிக்கலே எனக்கு.''

நாகு, சுவரோரமாய் சுருண்டு படுக்கிறாள். அவள் பக்கத்திலேயே குப்பனின் பால் புட்டி.

சும்மா சொல்லக் கூடாது. தன் குழந்தை கொழு கொழுவென வளர வேண்டும் என்பதற்காக - விளம்பரத்தில் கண்ட விலையுயர்வான பால் பவுடரைத்தான் வாங்கிக் கரைத்துப் புகட்டினாள் நாகு.

இதுதவிர, சின்னதும் பெரிசுமாய் டானிக் புட்டிகள் வேறு.

அன்று மாதையன் அத்தனை மருந்து புட்டிகளையும் தூக்கி, குப்பைத் தொட்டியில் போடுகிறான்.

''இந்தா நாகு. அந்த பால் புட்டியைக் கொடு.''

நாகு, மிரட்சியுடன் அவனைப் பார்க்கிறாள்.

''எதுக்குங்க?''

''கண்டிப்பா இதை நான் குப்பைத் தொட்டியில போட மாட்டேன்.

கண்மறைவா வச்சிடறேன். இதைப் பார்க்கப் பார்க்க உனக்கு இன்னும் துக்கம் பொங்கிட்டுத்தான் வர்றதே தவிர....''

நாகு. அவனை உறுத்துப் பார்க்கிறாள்.

''பிள்ளை போன துக்கம், உங்களுக்கு மட்டும் இல்லையா என்ன?''

''அது.... அது வந்து நாகு. இது இப்படித்தான் என்னிக்கோ ஒரு நாளைக்கு அல்பாயுசுல போயிடப் போறதுன்னு டாக்டரம்மா என்கிட்ட சொல்லிட்டாங்களா... அதான், நான் அதுங்கிட்ட அதிகமாக நெருங்காம இருந்திட்டேன்.''

''உங்களாலே முடிஞ்சது... ஆனா, என்னாலே முடியல்லையே. நீங்க அவன் குடிச்ச பால் புட்டிய வேணா எடுத்து மறைச்சு வைக்கலாம். ரெண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை பால் கரைக்க நேரமாச்சேயின்னு பதறிட்டு எழுந்திருக்கிறேனே.... அந்த நினைப்பை எங்கே கொண்டு ஒளிச்சு வைக்க முடியும். சொல்லுங்க...''

குப்பன் பிறப்பதற்கு முன்பாவது, நாகு தன் புருஷனாயிற்றே என்கிற அக்கறையின் காரணமாகவோ அல்லது - தாலி கட்டிக் கொண்ட தோஷத்துக்கு இந்த கடமையாவது செய்தே ஆக வேண்டும் என்கிற மரியாதையின் காரணமாகவோ மாதையனுக்கு வேளாவேளைக்கு சோறு போட, பக்கத்தில் வந்து உட்காருவாள், துணிகளைத் துவைத்துப் போடுவாள். அவனோடு எப்பொழுதாவது சினிமாவுக்கு வருவாள். இரவில் அவன், அடித் தொண்டையில் 'நாகு...' என்றழைத்தால் 'குடிக்க தண்ணி தலைமாட்டுல வச்சிருக்கேனே... அப்புறமென்ன நாகு...' இப்படி அலுத்துக் கொண்டேயாவது பக்கத்தில் வந்து படுப்பாள்.

குப்பன் பிறந்த பிறகு - மாதையன் கிட்டத்தட்ட தனித் தீவாக ஒதுக்கப்பட்டான் என்றே சொல்ல வேண்டும். நாகு, அவனை லட்சியம் செய்வதே இல்லை.

லட்சியம் செய்யக் கூடாது என்கிற எண்ணம் எதுவுமில்லை. பிறக்காத பிள்ளை பிறந்ததில் புருஷன்கூட அவளுக்கு இரண்டாம் பட்சமாகப் போய் விட்டான். அத்தனைதான்.

மாதையன் சாப்பிட உட்காரும் நேரத்தில் குப்பன் அழத் தொடங்குவான்.

அழுகையென்றால் - சராசரி குழந்தையின் அழுகையில்லை அது.

காகம் அடித் தொண்டையில் க்ராவ் க்ராவ் என்று சில சமயம் கர்ரிக்குமே... அது போல...

நாலு காலும் மூங்கில் கழியில் கட்டப்பட்டு தலைகீழாக தொங்குகிற நிலையில் இரண்டு மனிதர்களின் தோளில் சவாரி செய்தபடி, மரண பயத்துடன் பன்றி குரல் கொடுக்குமே.... அதுபோல...

கல்லடிபட்ட நாய், வாலை பின்னங்கால்களுக்கிடையில் சுருட்டிக் கொண்டு தீனமாய் ஓலமிடுமே.... அதுபோல...



''முதல்ல அதும் வாயை அடை....''

மாதையன் எரிச்சலுடன் தட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு, தானே பரிமாறிக் கொள்வான்.

அப்படியும் பாதிச் சாப்பாட்டில்தான் குடிக்க தண்ணீர் எடுத்து வைத்துக் கொள்ளாதது நினைவுக்கு வரும். அவன் சற்று முன் மனைவியிடமும் கடுத்துக் கொண்டதை மறந்து குரல் கொடுப்பான்.

''நாகு... ஒரு தம்ளர் தண்ணி...''

''ஏங்க... எடுத்து வச்சிட்டு உட்காரக் கூடாதா... குழந்தைக்கு பால் புகட்டிட்டி..... பாதியில விட்டுட்டு எப்படி வர்றது...''

''புட்டிப் பாலுதாண்டி? தாய்ப் பாலா தட்டுகெட்டுப போவுது... வாயில புட்டிய செருகி, ஒருக்களிச்ச மாதிரி வச்சிட்டு... நான் ஒரு மடையன்.... திருப்பித் திருப்பி உன்கிட்ட வந்து கேட்கறேன் பாரு. என்னை செருப்பாலே அடிச்சுக்கணும்.''

மாதையனே, பொறுமையிழந்து கத்தியபடி, சோற்றுக் கையை உதறி விட்டு எழுந்திருப்பான்.

''என்னாமோ, ஊருலே இல்லாத அதிசயமா - இவதான் பிள்ளையப் பெத்துட்டாப்பலே ரொம்பத்தான் அலட்டிக்கறா.''

இதைச் சொல்லி விட்டால் மட்டும் நாகுவிற்கு கண்கள் சுரந்து விடும்.

''சொன்னாலும் சொல்லாட்டாலும் இவன் - எனக்கு மட்டுமில்லே பார்க்கறவங்களுக்கே அதிசயமாத்தானே இருக்கான். எல்லாப் பிள்ளைங்களையும் மாதிரி இருந்தா நான் எதுக்கு இப்படி - ஊர்லே இருக்கற எல்லா சாமிங்களையும் வேரோடக் கிள்ளறேன்...''

இதற்கு மேல் அவன் பேச மாட்டான்.

தனக்கும் தன் அன்பு மனைவிக்கும் இடையில் குறுக்குச் சுவராய் குப்பனின் பெரிய தலையே விஸ்வரூபமெடுத்து நிற்பது போல -

இந்த நினைப்பே அவனைக் குழந்தையிடம் ஒட்ட விடாமல் செய்தது.

''சும்மாத்தானே இருக்கீங்க. குழந்தைகிட்ட வந்து விளையாட்டு காமியுங்களேன்.''

நாகு என்றாவது ஒரு நாள் இப்படிக் குரல் கொடுப்பாள். அவளுக்கு குழந்தையின் மீது புருஷனுக்கு அவ்வளவாகப் பற்றில்லை - என்பதில் ஏகக் குறை. எப்படியாவது .... ஐந்து நிமிஷமாவது அவன் - தன் மகனைத் தூக்கி மடி மீது வைத்துக் கொள்ள வேண்டும் என அவளும் ஆன மட்டும் முயற்சிகள் செய்து பார்த்தாள் தான்.

மாதையன் அதற்கெல்லாம் மசிந்து வருபவனாக இல்லை.

''இந்தா... அதுக்கு கழுத்து கூட நிக்கமாட்டேங்கறது. என்னைத் தூக்க சொல்லாதே. உருப்படியாப் பெறந்த குழந்தைங்களத் தூக்கவே நான் பயப்படுவேன். எங்கேயாவது உரம் கிரம் விழுந்துடுச்சுன்னா என்னா பண்றது? இது நமக்கு சரிப்பட்டு வராது. நீயே தூக்கு.''

''அப்ப இவன் உங்களுக்கும் மகனில்லையா. எனக்குத் தெரிஞ்சு என் குடும்பத்துல யாருக்கும் இப்படியொரு பிள்ளை இல்லே. உங்க குடும்பத்துல யாரு. என்ன பாவம் பண்ணினாங்களோ... இன்னிக்கு என் குழந்தை அனுபவிக்கிறான்.''

நாகு. அவனிடம் ஆக்ரோஷமாக இப்படி சொல்லும் போது மாதையன் பதிலுக்கு கத்த மாட்டான். தலைகுனிந்தபடி நகர்ந்து விடுவான்.

இதுமாதிரி பெற்று பெற்று பறிகொடுத்த பெண் - யாராயிருந்தாலும் இப்படித்தான் பொருமுவாள் என்பது அவன் அறிந்ததுதான்.

தன்னால் குப்பனைக் கொஞ்ச முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் - மனைவியின் நினைப்புகளுக்காவது மதிப்பு கொடுக்க வேண்டுமென அவன் ஒதுங்கியே இருந்தான்.

நாகு. தினமும் அந்தக் குழந்தையை கால் மீது போட்டு குளிப்பாட்டுவாள். பவுடர் பூசி, மையிட்டு அழகு பார்ப்பாள். சின்னச் சின்னதாய் சட்டை வாங்கி மாட்டுவாள். பக்கத்து வீட்டு செட்டியாரின் மனைவியிடம் சொல்லி வைத்து, காரைக்குடியின் பெயர் போன பறங்கிக்காய் தண்டை வாங்கிப் போட்டாள். கழுத்துக்கு இரண்டு பவுனில் சங்கிலி. கைக்கு காப்பு.

இவன் பிறந்ததிலிருந்து நாகு. படுக்கையைப் பிரித்துப் போட்டாள். வாரத்தில் குறைந்தது ஆறு நாட்களுக்காவது விரதமிருந்தாள். இவனது ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு, ஊரிலிருக்கிற எல்லா ஜோஸியர்களையும் போய் பார்த்து விட்டு வந்தாள்.

''பையனுக்கு நல்ல யோக ஜாதகமாம்.''

''....''

''உங்ககிட்டத்தானே சொல்றேன்.''

''என்ன...''

''பையனுக்கு நல்ல யோக ஜாதகமாம்னேன்.''

''அதான் பார்த்தாலே தெரியுதே.''

''இந்த மாதிரி எடக்கா பேசினீங்கன்னா, நான் பேசவே மாட்டேன்.''

''சேச்சே... ஏதோ பையனை ஒரு சாக்கா வச்சிட்டாவது என்கிட்டப் பேசறியேன்னு நான் சந்தோஷப்பட்டுட்டிருக்கேன். சொல்லு... சொல்லு.''

அவள், இறங்கின சுருதியில் சொல்வாள்.

''நம்ம குப்பன் பொறந்த வேளை நல்லாத்தான் இருக்குதாம். நம்ம கல்யாணத்தும் போது - எவளோ - அது உங்க வீட்டை சேர்ந்தவளோ, இல்லே - எங்க வீட்டை சேர்ந்தவளோ - தீட்டோட வந்து கலந்துட்டாளாம். அதான், பொறக்கற குழந்தைங்க எதுவுமே தங்கலையாம். குப்பன், நல்ல 'நேரத்துல பொறந்திருக்கிறதாலே எமனுக்கும் அவனுக்கும் தினமும் போராட்டம் நடந்துக்கிட்டே இருக்காம்.''

''எத்தனை ரூபாய்க்கு சாந்தி சொல்லியிருக்காரு ஜோசியர்?''



''பார்த்தீங்களா, பார்த்தீங்களா... எத்தனை ரூபாய்க்கு சாந்தியின்னுதான் கேட்கறீங்களே தவிர, என்ன சாந்தி, நாம என்ன பண்ணணும்னு கேட்கறீங்களா... உங்களுக்குப் பணம் தான் பெரிசு.''

அவள் பிள்ளையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு அழத் தொடங்குவாள்.

தனக்கும், தன் மனைவிக்கும் இடையில் தினமும் சச்சரவை வளர்த்த குப்பனை அவனுக்குப் பிடிக்காமலே போனதில் வியப்பில்லைதான்.

'சனியன், சாகவும் மாட்டாம இருக்கவும் மாட்டாம மனுஷன் கழுத்தை அறுக்கறது.'

தன் அப்பாவின் சங்கடம் புரிந்துதானோ என்னவோ நாலைந்து நாட்களுக்கு முன் ஒரு விடிகாலைப் பொழுதில் கண்ணை மூடி விட்டான் குப்பன்.

அன்றிலிருந்து இன்று வரை நாகுதான் மகனுக்காகப் புலம்பி அழுது கொண்டிருக்கிறாள்.

''ஏங்க, குழந்தையை ஒரு போட்டோவாவது எடுத்து வச்சிருக்கலாம்.''

''என்னத்துக்கு... பார்த்து, பார்த்து அழறதுக்கா... பேசாமப் படு நாகு.''

மாதையன் புரண்டு படுக்கிறான். மனக்கண் முன் - குப்பன் கண்ணாடி ஜாடிக்குள் தன் உடம்பைக் குறுக்கி, சுருட்டியபடி....

வீட்டிலிருந்த போது. குழந்தையின் முகத்தை, ஒரு நிமிஷம்கூட சேர்ந்தாற்போலப் பார்க்கப் பிடிக்காத தான், இப்பொழுது தொடர்ந்து சில நாட்களாய் குப்பனின் முகத்தை ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்துக்கு குறையாது பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிற நினைப்பே வியப்பிற்குரிய விஷயமாய்...

''உடம்புதான் வளரலையே தவிர - நம்ம குப்பன் முகம் அழகுங்க. மையிட்டு பொட்டிட்டா சுப்பிரமணிய சாமி மாதிரி இருக்கும்.''

- ஒரு நாள் நாகு இப்படிப் புலம்புகிறாள்.

''இவனைவிட முன்னாடி ரெண்டு - ஏழு மாசத்துல பொறந்து செத்ததே... அதுங்கதான் நல்ல லட்சணம்...''

நாகு அவனை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்.

''எட்டு மாசமா.... இதோ, இந்தக் கூடத்துல கிடந்த குழந்தையையே நீங்க சரியாப் பார்த்ததில்லே... பொறந்து பொசுக்குனு கண்ணை மூடின குழந்தைங்க முகத்தைதான் நீங்க ஞாபகம் வச்சிட்டிருக்கீங்களாக்கும்.''

மாதையன், தன் தவறை உணர்ந்தாலும், உடனே சமாளித்துக் கொள்வதாய் நினைத்து மேலும் உளறுகிறான்.

''நினைப்புல வச்சிக்கிறது என்ன... அதான் கண் முன்னாடியே...''

தான் என்ன பேசுகிறோம் என்பதை உணர்ந்தவுடன் 'சட்'டெனப் பேச்சை மாற்றுகிறான்.

''உன்னைப் போல என்னால வாய்விட்டுச் சொல்ல முடியல்லைன்னாலும்

மனசுக்குள்ள குழந்தைங்க முகமெல்லாம் அழுத்தமா பதிஞ்சுப் போயிருக்கு நாகு. அப்பப்ப கனவுல வரும்.''

நாகு, நெகிழ்ந்து போய் - கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.

இத்தனை நாளும், குழந்தைக்காக அவன் வருத்தப்படவில்லையே என்று புலம்பியது போக, இன்று அவன் சொன்ன ஒரு வார்த்தையிலேயே உடைந்து போய் - கணவனைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்குகிறாள்.

''என் ராஜா.... உங்க மனசு தெரியாம ஏதேதோ பேசிட்டேன். என்னயிருந்தாலும் நீங்க ஆம்பிளையில்லையா... துக்கத்தை அடக்கிட்டு வளைய வரப் பழகிட்டீங்க. நான்தான் புலம்பி, புலம்பி உங்களையும் நோகடிச்சிட்டேன். போதும்... நீங்க இனிமே குழந்தைங்களைப் பத்தி எதுவுமே பேசாதீங்க. பொசுப்பு இருந்தா நம்ம மகன் நம்மகிட்டேயே ஆரோக்கியமான குழந்தையா திரும்பி வருவான்.''

மாதையன், அவளது அணைப்பில் வெகு நாட்களுக்குப் பிறகு சிக்குண்டு கிடக்கிறான்.

மனைவியின் அன்பான பேச்சும், அரவணைப்பும் கிடைக்கவில்லையே என்று அதுநாள்வரை ஏங்கிக் கொண்டிருந்தவனுக்கு அன்று எல்லாம் கிடைத்தும் ஏதோ ஒரு உறுத்தல்.

தனக்கு உரிமையில்லாத பொருளை அனுபவிப்பது போல...

**ம**றுநாள் காலையில் வேலைக்குப் போனதும் கண்ணில்பட்ட கண்ணாடி ஜாடியை ஏறிட்டுப் பார்க்க முடியாதவனாய் தலையைக் குனிந்து கொள்கிறான்.

பகல் நேரம் முழுக்க - மியூஸியத்தின் உட்புறம் பார்க்கப் பிடிக்காமல் - எதிரில் கிடக்கும் பச்சைப் புல் வெளியையும், கல்வாழைப் பூக்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''க்ராவ்... க்ராவ்...''

அவன் குலுங்கி நிமிருகிறான்.

'யாரது.... குப்பனா...'

''குப்பனா... இல்லே காக்காவா...?''

அவன், சடாரென உட்பக்கம் திரும்பிப் பார்க்கிறான். குப்பன் அதே நிலையில்...

அரைக் கண்களை மூடி, சின்ன வாயைச் சற்றே திறந்தபடி...

''கூப்பிட்டியா குப்பா...''

மாதையன், எழுந்து போய் ஜாடியின் அருகில் நின்று மெள்ள ஜாடியைத் தொட்டுப் பார்க்கிறான்.

யாராவது வந்து பார்த்தால், தவறாக எண்ணிவிடப் போகிறார்களே என்கிற



பதற்றம், கையை பின்னுக்கு இழுக்கிறது.

மாணவ மாணவிகள், அங்குள்ள கண்ணாடி ஜாடிகளைத் தொடாமல் பார்க்கும்படி எச்சரிப்பதே அவன்தான்...

இன்று அவனே...

சேச்சே... இது என்ன மூடத்தனமான பாசம்.

'இதுலே இருக்கிறது குப்பன் இல்லே... ஏழெட்டு மாசமா, இந்தப் பாறாங்கல்லு மண்டையும், குச்சி கை காலுமான சரீரத்துக்குள்ள இருந்த உசிர் பறந்து போயிடுச்சு. இது வெறும் கூடுதான். நத்தை ஓடு, ஆமை ஓடு, பாம்பு சட்டை, இதுங்க மாதிரி...'

அவன், 'சட்'டென ஜாடி மீதிருந்த கரத்தை எடுக்கிறான். அதற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்காதவனாய் நகர்ந்து - மற்ற காட்சிப் பொருள்களைப் பார்த்துக் கொண்டே கூடத்தை வலம் வருகிறான்.

பிரபா, ரவி, பாபு, கல்பனா, குமார்....

ஒவ்வொரு ஜாடியிலுள்ள கருவையும் நின்று நிதானித்துப் பார்த்தபடி...

பிரபா.... மூன்று மாதக் கருவானதினால், முகத்தில் கண், மூக்கு என தனித்தனியாக அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. டாக்டர் சந்திரமணி, அது பெண் கரு என்று சொன்னதினால் அவன் அதற்கு மானசீகமாய் பிரபா என்று பெயர் வைத்தான்.

இந்த மருத்துவக் கல்லூரியில் கூட, பிரபா என்றொரு மாணவி இருந்தாள். ரொம்பவும் சுறுசுறுப்பு... சிவப்பாய், கொஞ்சம் பழுப்பு கலந்த கண்களுடன் - ஒரு இடத்தில் நிற்காமல் அலைந்து கொண்டிருப்பாள்.

தனக்கு ஒரு பெண் பிறந்தால் - இத்தனை சிவப்பாக இல்லாவிட்டாலும் இப்படித்தான் ஐந்தடி உயரத்துக்கு உள்ளங்கைகளுக்குள் முழு உருவத்தையும் அடக்கி விடலாம் போல இருப்பாள் என்று மாதையன் நினைத்துக் கொள்வான்.

நாகுவிற்கு அபார்ஷன் ஆவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் அந்த பிரபா ஸ்கூட்டர் விபத்தில் போய் விட்டாள். இது யாரை பாதித்ததோ இல்லையோ - மாதையனை அதிகம் பாதித்தது.

''ச்சே... என்ன கொடுமை பாருங்க...''

அவன், சக ஊழியர்களிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்.

''அந்தப் பொண்ணு புத்திசாலிதான். ஆனா, வேகம் ஜாஸ்தி. மாடிப்படியிலே ஏறப்பவே நாலு படிக்கு ஒரு காலாத்தான் தாவும்... அதோட அவசர புத்தியே - அதுக்கு எமனாப் போச்சு.''

- டாக்டர் சந்திரமணியின் வார்த்தைகள்.

மாதையன் தனது மூன்று மாத வாரிசை - பார்மாலின் திரவத்துக்குள் மிதக்கும் கருவை எடுத்து வந்து மியூஸியத்தில் வைத்த போது கூட - அந்தப் பெண் பிரபாவின் நினைவுதான்.

'அவசரக் குடுக்கை... இதுவும் அந்தப் பொண்ணு பிரபா மாதிரியே...

'என்னடி, ஒழுங்காப் பொறந்திருந்தா உனக்கு நான் பிரபான்னு பேரு வச்சிருப்பேனில்லே.'

'இப்பத்தான் என்ன... உன் பேரும் பிரபாதான். போ... நான் உட்கார வைக்கிற இடத்துல உட்கார்ந்துட்டு போறவங்க வர்றவங்களையெல்லாம் பார்த்துட்டு இரு. எந்த ஸ்டூடண்டாவது கியூவுல முட்டி மோதிட்டு முன்னாடி ஓடினாக்க, நிறுத்தி வச்சு, செத்துப் போனாளே... அந்த பிரபா கதைய சொல்லு.

என்ன சொல்லுவே? அவசரப் படாதீங்கடா முண்டங்களா... உங்களை மாதிரி அவசரப்பட்ட பொண்ணு கதைய சொல்றேன் கேளுங்க'ன்னு சொல்லு.

'உன்கிட்ட வந்து சொல்றேன் பாரு.... நீ, அவளைவிட அவசரக் குடுக்கை...'

அவன் சிரித்தபடி நகருவான்.

ரவி, பாபு, கல்பனா, குமார் எல்லாம் கூட அவனுக்குத் தெரிந்த நண்பர்களின் பிடித்த பெயர்கள்தான்.

கல்பனா - அவனது பதினெட்டாவது வயசில் காதலித்த ஒரு பெண்ணின் பெயர்... காதல் கடிதம் கூட எழுதியதாக ஞாபகம். இப்பொழுது அதையெல்லாம் நினைத்தால் சிரிப்புத்தான் வரும்.

குப்பன்...

இவனை விடவும், இத்தனை வருடங்களில் இவனுக்கு முன் ஜனித்த இவனது சகோதரர்களிடம்தான் மாதையனுக்கு பரிச்சயம் அதிகம்.

இவன்தான் அமமா கோதண்டராமனாக இருந்தானே...

அப்பப்பா... சாகிற வரையில் அவள் மடியை விட்டு இறங்கவேயில்லையே இவன்.

நாகுவின் மடியில் - குப்பன் படுத்திருந்த மடியில், முதல் நாள் தான் படுத்திருந்த காட்சி .... கண்ணெதிரே...

எத்தனை நாளாச்சு அவ மடியில படுத்து... இவன்தான் குத்தகைக்கு எடுத்தாப்பல ஆக்கிரமிச்சுட்டானே....

மாதையனையும் அறியாமல், அவனது கண்கள் மறுபடியும் குப்பனின் பக்கம்...

அரை செருகலான கண்களில் ஏதோ ஒரு ஏக்கம் படர்ந்திருப்பது போல...

'என்னடா?'

அவன், சற்று எட்ட இருந்தபடியே குப்பனை உறுத்துப் பார்க்கிறான்.

'எங்க அம்மா மடியில நீ படுத்துக்கறியா... இரு... இரு.'

'ஹ... என்னடா செய்வ?'

'நான் என்ன செய்ய முடியும். என்னைத்தான் ஜாடிக்குள்ள போட்டு மூடி வச்சிட்டியே. அழத்தான் முடியும்.'

மாதையன் தலையைக் குலுக்கிக் கொள்கிறான்.

'க்ராவ்... க்ராவ்'



'ம்மா... இந்த அப்பா கிட்டப் பேசாதேம்மா. டூ விட்டுடு. ஆனை மேல குதிரை மேல... அம்பாரி மேல டூ...'

'க்ராவ்... க்ராவ்...'

'என்னை வந்து தூக்கிக்கோம்மா... இந்த எடம் எனக்குப் பிடிக்கவே இல்லை. இங்கே பாரு. என் மூக்குல, வாயில, காதுக்குள்ள எல்லாம் தண்ணீ. எடுத்து துடைச்சு விடும்மா. பவுடர் போட்டு. சொக்காப் போட்டு. உன் நெஞ்சோட சேர்த்துக் கட்டிக்கோயேன்.'

'இங்கே நிறைய பேர் என்னைப் பார்க்க வர்றாங்க பாரு. சட்டையே இல்லாம தண்ணிக்குள்ளே இருக்கேன். ஒவ்வொருத்தரும் எம் மண்டையப் பார்த்து பார்த்து என்னென்னவோ பேசிக்கிறாங்க. எம் மண்டையப் பார்த்து யாரு கேலி செஞ்சாலும் நீ படபடன்னு கையை முறிச்சு, 'இரக்கமற்ற பாவிங்க.'ன்னு திட்டுவியே. இந்த அப்பா அப்படி திட்டவே மாட்டேங்கறாரும்மா.'

மாதையன் - குப்பனுக்கு முதுகைக் காட்டியபடி உட்கார்ந்ததுமல்லாமல் தன் கையிலிருந்த பெரிய, சதுரமான கைக்குட்டையால் காதைச் சுற்றி மப்ளர் மாதிரி கட்டிக் கொள்கிறான்.

''என்னடா இது வெய்யில்லே...''

இப்படி யாரோ கேட்டதற்கு தலைவலி என்று ஒற்றை வார்த்தையில் பதிலளிக்கிறான்.

மாலையில் மியூஸியத்தைப் பூட்டும் பொழுதுதான் செத்துப்போன மகனிடம் இத்தனைப் பாராமுகமாய் இருப்பது அநியாயம் என்கிற எண்ணத்துடன் குப்பனின் எதிரில் வந்து நிற்கிறான்.

'குப்பா...'

'.....'

'கோவமா?'

'.....'

'கோவிச்சுக்காதேடா... நான் வேணுமானா உங்க அம்மா மடியில இனிமே படுக்கலே. சரிதானே...'

'.....'

'எங்கே, சிரி பார்க்கலாம்... சிரிடா...'

தன்னையறியாமல் கல்லாய் நின்றவனை தொட்டு எழுப்பியவன் இவனைப் போன்ற இன்னொரு ஊழியன் தான்.

''வீட்டுக்குக் கிளம்பலையா அண்ணே... இங்கே நின்னுட்டு என்ன செஞ்சிட்டிருக்கே...''

''இதோ...''

மாதையன், மியூஸியத்தின் கதவை வழக்கம் போல அறைந்து சாத்தப் போனவன் பின் என்ன காரணத்தினாலோ மெதுவாய் ஓசையெழாமல் சாத்துகிறான்.




இரவு முழுக்க தூக்கமே இல்லை மாதையனுக்கு... சிறிது நேரம், இவனது அவஸ்தையையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நாகு, எழுந்து வந்து, அவன் கழுத்தைச் சுற்றிக் கரங்களைப் போட்டுக் கொள்கிறாள்.

''என்னங்க... தூக்கம் வரல்லியா?''

''உம்... ஒரே தலைவலி... ஜுரம் வரும் போல இருக்கு.''

நாகு, பதட்டத்துடன் அவனது நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறாள்.

''காய்ச்சல் எதுவும் இருக்காப்பல தெரியல்லையே... நாளைக்கு வேணுமானா லீவு போட்டுடுங்களேன்.''

''ஐயய்யோ... குழந்தைங்க என்னைப் பார்க்காம தவிச்சுப் போயிடும்.''

''குழந்தைங்களா..?''

நாகு, கணவனைக் குழப்பத்துடன் கேட்கிறாள். அவன், அவளது முகத்தை நேருக்கு நேர் சந்திக்க முடியாதவனாய், ஒருக்களித்துப் படுத்தபடி சொல்கிறான்.

''காலேஜ்ல படிக்கிற அத்தனைப் பசங்களுமே என் குழந்தைங்கதான் நாகு...''

நாகுவின் அடிவயிற்றிலிருந்து நீண்ட பெருமூச்சு கிளம்புகிறது.

''உங்களுக்குப் பரவாயில்லே. எனக்குத்தான் இந்த வீட்டுல எந்தப் பக்கம் திரும்பினாலும் குப்பன் நினைப்பாவே இருக்குது. கண்ணை மூடினா - அவன்தான் வந்து நிக்கறான்.''

''என்னால கண்ணையே மூட முடியல்லே நாகு... கண் முன்னாலேயே...''

''த்சு... த்சு...''

நாகு, அவசரமாய் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, அவனைப் பார்த்து வலுவில் வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் சொல்கிறாள்.

''இந்தப் பேச்சையே ஆரம்பிக்கக் கூடாதுன்னு இருந்தேன். சுத்திச்சுத்தி இதுலேயே.... என்னங்க நீங்க... ஆள் பார்க்கத்தான் தைரியசாலி மாதிரி இருக்கீங்களே தவிர - மனசு ஆனாலும் பூஞ்சை... இத்தனைப் பாசத்தை வச்சுட்டு, குழந்தையைத் தொடாம எப்படித்தான்... சரி... சரி... தலையைத் தூக்கி, என் மடியில் வச்சுக்குங்க.''

அவள் அவனது தலையைத் தூக்க முயற்சிக்க...

'க்ராவ்... க்ராவ்...'

மாதையன் தன் தலைக்குள்ளே குப்பன் உட்கார்ந்து அழுவது போல உணருகிறான்.

''வேண்டாம் நாகு. நீ போய் படு. காலையில சுருக்க எழுந்து, தண்ணி பிடிக்க வேண்டியிருக்கில்லே...''

அவன் தலையணையிலேயே முகம் புதைத்துக் கொள்கிறான்.



மறுநாள் பொழுது ஒரு பக்கம் விடியும் முன்பே வேலைக்குக் கிளம்ப பறக்கிறான்.

''என்னங்க இது - இவ்வளவு சீக்கிரமா...''

''இல்லே நாகு... மியூசியத்தை துடைச்சு, ஒட்டடை அடிக்க வேண்டிய வேலை எல்லாம் இருக்கு. ஆளுங்க பார்த்துப்பாங்கன்னாலும், யாருக்கும் அத்தனை சாமர்த்தியம் போதாது.... எதையாவது தட்டி விட்டுடுவாங்க.''

ஒரு நாள், இரண்டு நாள் இல்லை... கிட்டத்தட்ட பத்துப்பதினைந்து நாட்களாக, மாதையன் ஏதோ ஒரு சாக்கு சொல்லி விட்டுச் சீக்கிரம் கிளம்பி விடுகிறான்.

''டாக்டர் வர சொன்னாங்க நாகு...''

''என் சினேகிதன் வீட்டுல ஒரு சடங்கு... போகணும்...''

''வீட்டுல இருந்து என்ன பண்ணப் போறேன் நாகு... அங்கே போனா, நாலு பேரோட பேசிட்டாவது இருக்கலாம்.''

இப்படி எதையாவது சொல்லிவிட்டு, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல, நேரே மியூஸியத்திற்கு வந்து விடுவான்.

கதவைத் திறந்ததும் - குப்பனின் எதிரில்தான் வந்து நிற்பான்.

''குட்மார்னிங் குப்பா...''

இப்படிச் சொல்லி, ஒரு கணம் அவனை உற்றுப் பார்க்கத் தொடங்குவான்.

டாக்டர் சந்திரமணி, தனது மாணவர்களுக்கு - குப்பனைக் காட்டி விளக்கம் தரும் பொழுது மட்டும் அங்கேயும் இங்கேயும் போவது போல நடந்தபடி, அவள் சொல்வதைக் கூர்மையாகச் செவிமடுப்பான்.

''இந்த கேஸ் **ஹைட்ரோசெபாலஸ்...**''

''பொறக்கறப்பவே தலை இவ்வளவு பெரிசா இருக்குமா டாக்டர்...?''

''நோ... நோ... இது பொறந்து எட்டு மாசத்துக்கு அப்புறம்தான் செத்தது. சாதாரணமா பொறக்கறச்சை தலை இவ்வளவு பெரிசா இருக்காது. ஆனாலும் குழந்தையோட உடம்போட ஒப்பிட்டுப் பாக்கறப்ப தலை பெரிசாத்தான் இருக்கும்.''

''இதை க்யூர் பண்ணவே முடியாதா...?''

''இம்பாஸிபிள்... அனேகமா இப்படிப்பட்ட கேசுங்க பொறந்த கொஞ்ச நாள்லேயே செத்துப் போயிடும். இது ரேர் கேஸ். எட்டு மாசம் வரைக்கும் இருந்திருக்கு. வளர்ந்தாலும் பேச்சு வராது. புத்திசாலித்தனமே துளிகூட இல்லாத களிமண்ணாத்தான் இருக்கும்.''

இதைக் கேட்கும் போது மாத்திரம் - மாதையனின் தொண்டையில் துக்கம் பந்தாக இம்சிக்கும். டாக்டர் சந்திரமணியின் மீது கோபம் கோபமாக வரும்.

'குழந்தைக்கு எதிர்த்தாப்பலேயே என்ன பேச்சு பேசறாங்க இவங்க. களிமண்ணாமே, களிமண்ணு.'

'இந்தக் களிமண்ணு, நல்லபடியா வளரணும்னு, என் பெண்டாட்டி

உப்பில்லாமே விரதம் இருந்திருக்கா தெரியுமா டாக்டர். வெறுந்தரையில் தண்ணிய தெளிச்சு அது மேல சோத்தை வச்சுட்டு சாப்பிட்டிருக்கா. உங்களுக்கெல்லாம் தெரியுமா பசங்களா... சினிமாவுல இந்த காட்சியப் பார்த்தா 'ஆஹா ஓஹோ' ம்பீங்க... அவ நிசமாலும் செஞ்சிருக்கா... களிமண்ணாமே களிமண்ணு. இந்த வார்த்தைய என் பெண்டாட்டி மாத்திரம் கேட்டிருந்தா உங்களை சும்மா விட்டிருப்பாளா....'

அவன் கண்களில் வழியும் நீரை யாரும் பார்க்காத வண்ணம் சுண்டி விடுவான்.

தூக்கம் வராத இரவுகளில், நாகு எட்டு மாதம் வரையில் பொம்மை போலக் கிடந்த குப்பனைப் பற்றிப் பேசுவதை, மௌனமாய் கேட்டுக் கொண்டிருப்பான்.

''கழுத்துதான் நிக்கலையே தவிர, குப்பனுக்கு சூசனை அதிகம்ங்க.... என்னோட மெட்டி சத்தம் கேட்டா, அழுகைய - ரேடியோ பட்டனைத் தட்டி விட்டா மாதிரி நிறுத்திருவான்.''

''அவனுக்கு சாத்துக்குடி ஜூஸ்தாங்க ரொம்பப் பிடிக்கும். தக்காளி ஜூஸ்ன்னா உதட்டைச் சுழிச்சுக்குவான்.''

''என் மடியில இருந்தா 'கம்'முன்னு இருப்பாங்க. வேற யார் மடிக்கு மாத்தினாலும் அழுது தீர்த்திருவான்...''

மாதையனுக்கு இதெல்லாம் புது விஷயமாக இருக்கிறது. 'ஒரு விளையாட்டுமில்லாமல், ரப்பர் ஷீட்டோடு கிடந்த குப்பனிடம் இத்தனை சமர்த்து இருந்ததா...

பின்னே, டாக்டர் சந்திரமணி ஏன், அடிக்கடி அவனைக் 'களிமண்' என்கிறான்.

ரொம்பவும் படித்தவர்களுக்குக்கூட, புத்தி சில சமயம் பேதலித்துப் போய் விடும் போல இருக்கிறது.'

**கா**லையிலேயே மாணவர்கள் கூட்டம் மியூஸியத்தை நோக்கிப் படையெடுக்கிறது.

சாதாரணமாகவே - மருத்துவக் கல்லூரியின் மூன்றாவது ஆண்டில், ஒரு பிரிவில் படிக்கும் மாணவர்கள், கொஞ்சம் மிதமிஞ்சிய விளையாட்டுப் போக்காகவே இருப்பார்கள்.

புரபஸர் எதை செய்யக்கூடாது என்கிறாரோ அதைத்தான் செய்வார்கள்.

இவர்கள் மியூஸியத்திற்குள் வந்தால் - மாதையன் வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டேயிருக்க வேண்டும்.

''தம்பீ... மேஜைய ஆட்டாதீங்கப்பா...''

''வரிசையா போங்களேன். என்னத்துக்காக முட்டி மோதறீங்க. எல்லாரும் போய் டேபிளை சூழ்ந்துகிட்டா என்னத்தைப் பார்க்க முடியும். முன்னாலே நிக்கறவங்க முதுகைதான் பார்க்க முடியும்.''



''என்னது... இதைப் பார்த்தாப் போதுமா? யாரது... டாக்டர் கேசவனோட மகனா... சொல்லுவேப்பா. ஏன் சொல்ல மாட்டே. முன்னாடி நிக்கறது யாரு. ...... அம்மா ரதி... கொஞ்சம் நகரு தாயே... இல்லாட்டி, உன் பின்னாடி நிக்கறவரு உன் முதுகை கண்ணாலேயே எக்ஸ்ரே எடுத்து மாட்டினாலும் மாட்டிடுவாரு.''

மாதையன் ஒலிபெருக்கி இல்லாத குறையாக அலறிக் கொண்டேயிருப்பான்.

இதுவே, பெரிய டாக்டர்கள் இருக்கும் சமயத்தில் இதுமாதிரி கேலி பேச்சையெல்லாம் சுத்தமாய் மறந்து விட்டு, காரியத்திலேயே கண்ணாக இருப்பான்.

''கொஞ்சம் தள்ளி வாங்க சார். மேடம், இப்படி வாங்க.''

மாணவர்களும், தனிமையில்தான் - தங்களின் அட்டகாசங்களை அரங்கேற்றுவார்கள்.

இப்பொழுதும் அப்படித்தான்.

ஒரு மாணவன் - டாக்டர் சந்திரமணி கூறும் விளக்கத்தைக் கேட்காமல் தனது சினேகிதியின் காதில் ஏதோ விமரிசித்துக் கொண்டே இருக்கிறான்.

டாக்டர் சந்திரமணி நிற்பது - மாதையனின் மூத்த செல்வங்களின் பக்கம்....

''இங்கே கவனிங்க.... கரு உற்பத்தியான எட்டு வாரங்களிலேயே கை, கால், விரல்கள், முதுகெலும்பு எல்லாம் ஃபார்ம் ஆக ஆரம்பிச்சுடும். தலை பெரிசா இருக்கும்.... கரு இப்ப ஒரு அங்குல நீளத்துக்கு குறையாம.... ஷ்... அங்கே என்ன...''

சந்திரமணி நிமிர்ந்து பார்த்த போது - மாணவர்கள் மிக அக்கறையுடன், அவள் சொல்வதையே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாதையனும் பார்க்கிறான்.

கடைசியில் நின்ற மாணவன், தனது கையிலிருந்த பேனா முனையினால் - தனது சினேகிதியின் முதுகில் ஏதோ எழுதுகிறான்.

''என்னது... பி.... ஓ... ஆர்.... இ.... யா...''

''மக்கு... மக்கு... திரும்ப எழுதறேன் கவனி.''

''நோ... நோ... ஸ்வீட்டி... அங்கே என்ன பார்வை. தினமும் ஒரே மாதிரியேதான் அலறிட்டிருக்காங்க அவங்க. இதைக்கவனி.''

டாக்டர் சந்திரமணி, மாணவர்களைப் பார்வையால் சலித்து விட்டு மீண்டும் தொடருகிறாள்.

''எங்கே விட்டேன்... இந்த ஸ்டேஜ்லே பேபி ஒன் இஞ்ச் லெங்த் இருக்கும். தெரியுதா... சின்ன பல்லி மாதிரி இதயத்துடிப்பு கூட இந்த நிலையில ஆரம்பிச்சிடும். உடம்புல ரத்தம் பாயத் தொடங்கிவிடும்.''

பேனா முனை, தன் முதுகில் வழுவழுவென ஓடும் நிலையில் அந்த மாணவியும், இதயத்துடிப்பு அதிகரிக்க, ரத்தம், தலைக்கே பாய நின்று கொண்டிருக்கிறாள். தப்பு, நிலையாய் நிற்க முடியாமல் நெளிந்து கொண்டிருக்கிறாள்.

மாதையனும் நெஞ்சு படபடக்க நிற்கிறான்.

'அந்தப் பெண் ஒவ்வொரு முறை நெளியும் பொழுதும், குப்பன் இருக்கும் மேஜை அவளது துள்ளலுக்கு ஏற்ப, முன்னும் பின்னுமாய் ஆடுகிறதே...'

''ப்ளீஸ்.... டேபிளை விட்டு தள்ளி நில்லுங்க.''

அவன், ஒருமுறை அவர்கள் அருகில் வந்து சொல்லி விட்டுப் போனான். அவர்கள் கேட்கிற மாதிரியில்லை.

''இப்ப சொல்லு.''

''எல்..ஓ...வி..இ....ச்சீய்...''

அந்தப் பெண், ஒரேயடியாய் துள்ளிக் குதிக்க - அடுத்த கணம் -

'டமால்' என்கிற சத்தத்தில் கட்டிடமே அதிருகிறது. நெருக்கியடித்துக் கொண்டு நின்ற மாணவர்கள் அத்தனை பேருமே நிமிஷமாய் விலகுகிறார்கள்.

''ஐயய்யோ...''

மாதையன், ஒரே பாய்ச்சலில் ஓடி வருகிறான்.

கண்ணாடி ஜாடிதான் சத்தம் போட்டதேயன்றி - குப்பன் ஓசையின்றி தரையில் விழுந்து கிடக்கிறான். தரை முழுதும் ஜாடியினுள்ளிருந்த திரவம் சிதறி, கண்ணாடிச் சில்லுகள் வாரியிறைக்கப்பட்டு....

கீழே விழுந்து தெறித்த திரவம் கண்ணில்பட, சிலர் எரிச்சல் தாளாமல் கண்களைக் கசக்கி கொண்டிருந்த அதே நேரத்தில் -

மாதையன் கிறுக்கல் மாணவனின் சட்டையைப் பிடித்து உலுக்குகிறான்.

''டேபிள் மேல மோதாதே, மோதாதேயின்னு சொன்னேனே... கேட்டியா... படிக்க ஆசையில்லையின்னா எதுக்கு காலேஜுக்கு வர்றீங்க...''

மாதையனின் ஆங்காரமான குரல் - இதுவரைக்கும் அறிமுகமே இல்லாததால் மாணவர்கள் விக்கித்து நிற்கிறார்கள்.

''மாதையா...''

டாக்டர் சந்திரமணிதான் அதட்டுகிறாள்.

அவன் சட்டென தன்நிலைக்கு வருகிறான்.

''நடந்தது நடந்து போச்சு... எதுக்காக ரகளை... உம்? ஸ்பெஸிமெனை, வேற ஜார்ல போட்டு வச்சுட்டு, இடத்தை சுத்தம் பண்ணு.''

''ஸாரி, ஏதோ பதட்டத்துல...''

மாதையன் சொல்லி முடிப்பதற்குள், சந்திரமணி, அந்த இடத்தைவிட்டு நகருகிறாள். கூடவே மாணவர்களும். எல்.ஒ.வி.இ.யை முதுகில் சுமந்த, அந்த மாணவி மட்டும், கண்களில் அச்சம் மிளிர, இவனைத் திரும்பிப் பார்த்தபடியே, கூட்டத்தோடு நடக்கிறாள்.

மாதையன், மண்டியிட்டு அமர்ந்து குப்பனை தன் கையில் எடுத்துக் கொள்கிறான்.

'வலிக்குதாடா மகனே...'

உதட்டுக்குள் முணுமுணுத்தபடி, அவனது பெரிய தலையைப் புரட்டிப்புரட்டிப் பார்க்கிறான்.

'அடிகிடி பட்டிருக்குமோ...'

'ரத்தம் வருதா...'

'சேச்சே... எப்பவோ போயிட்டானே குப்பன்... இப்ப எப்படி ரத்தம் வரும்.'

மாதையன் குப்பனைத் தடவியபடி உட்கார்ந்திருக்க - ஆங்காங்கே சிதறிக் கிடந்த கண்ணாடித் துகள்களைப் பெருக்கி அள்ள வந்த சிப்பந்தி அவனை எழுப்புகிறான்.

''நகருய்யா... பெருக்கணும்.''

அன்று மாலைக்குள், வேறொரு கண்ணாடி ஜாடியில் திரவத்தில் மிதக்கிறான் குப்பன்.

ஆனால்...

மாதையனுக்குத்தான் தனது இருக்கையில் அமரப் பிடிக்கவில்லை.

எழுந்து போய் குப்பனை பார்த்துவிட்டு மறுபடியும், தன்னிடத்தில் அமர்ந்து...

'வலிக்குமோ...'

- இந்த நினைப்பு தோன்றிய பொழுதெல்லாம் திரும்ப எழுந்து போய், ஜாடியருகே நின்று...

கீழே விழுந்ததிலிருந்து, குழந்தையின் முகமே மாறி விட்டதுபோல - ஒரு உணர்வு.

புருவத்தில் சின்ன சுருக்கமும், பாதி மூடிய விழிகளில் வேதனையும், சற்றே திறந்தபடி - கொஞ்சமே கொஞ்சம் சிரிக்கும் பாவனையில் இருந்த உதடுகளில் அழுகை எட்டிப் பார்ப்பது மாதிரியும்....

'க்ராவ், க்ராவ்...'

'என்னடா கண்ணா.... ஐயோ... குரல் கூட கம்மிப் போயிட்ட மாதிரியிருக்கே. என்னடா பண்ணுது?'

அவன் முகவாயைச் சொறிந்தபடி ஜாடியையே சுற்றிச் சுற்றி வருகிறான்.

'இவனுக்கு உடம்பை வலிச்சா நாகு, என்ன மருந்தைக் கொடுப்பா...'

உற்றுப் பார்க்கையில் - குழந்தையின் பின் மண்டை சற்று புடைத்திருப்பது போலக்கூட ஒருவித பிரமை அவனுக்கு.

மாலையில் வீடு திரும்பவே இஷ்டமில்லை.

டாக்டர் சந்திரமணிதான், வகுப்பு முடிந்ததும் நேரே இவனைப் பார்க்க வருகிறாள்.

''இங்கே என்ன செய்யறே மாதையா...?''

''....''

அவன், குப்பன் இருந்த ஜாடியைப் பார்த்துவிட்டு அவனைத் திரும்பிப் பார்க்கிறான்.

''இந்த ஸ்பெஸிமனை, இங்கேயிருந்து எடுத்துடச் சொல்லட்டுமா மாது...''

''ஐயோ... ஏங்க...?''
''இல்லே... அதனால உனக்கு ரொம்பத் தொந்திரவுன்னு நினைக்கிறேன்.''
''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க...''
''அப்ப வீட்டுக்கு கிளம்பு... உன் பெண்டாட்டி காத்திட்டிருப்பா இல்லே...''
அவள் அதட்டும் குரலில் சொல்ல, தயங்கியபடியே நகருகிறான் அவன்.

**வீ**ட்டில் -

நாகுவைப் பார்க்கையிலேயே துக்கம் பொங்கிப் பொங்கி வருகிறது. காரணமில்லாமல் அழுகிறான். நாகுவோ, கலங்கிப் போகிறாள்.
''என்னங்க இது.... பச்சைக் குழந்தையாட்டம்.''
''அடி பட்டுடுச்சு நாகு...''
''ஐய்யய்யோ, எங்கேங்க...''
''எனக்கில்லே நாகு - நம்ம. 'நம்ம...''
''நம்ம?''
''....''
''என்ன சொல்ல வர்றீங்க.... சொன்னாத்தானே எனக்கும் தெரியும்.''
''குழந்தைக்கு அடி பட்டுடுச்சு நாகு...''
''எந்தக் குழந்தைக்கு.... எப்ப?''
அவன் இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், முழங்காலில் முகம் புதைத்து உட்கார்ந்து விட்டான்.
அவள், அவனது நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறாள். உடம்பு மழுவாய் கொதிக்கிறது.
''பேசாமப் படுங்க. காலைல டாக்டரம்மாவைக் கேட்டு மருந்து வாங்கி சாப்பிடுவீங்களாம்.''
''டாக்டரம்மா ஒரு ராட்சஸி நாகு. குழந்தைக்கு அடிபட்டப்ப கூட பேசாம நிக்கிற அரக்கி.''
அவன், இரவு முழுக்கப் புலம்பிக் கொண்டிருக்கிறான். நாகுவோ, செய்வதறியாமல் கைகளைப் பிசைகிறாள்.

**வி**டிகாலையில் -

வீட்டில் கிடைத்த வலி நிவாரணத் தைலங்களையும், மாத்திரைகளையும் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு - நாகு என்ன சொல்லியும் கேட்காமல் கிளம்பி விட்டான் அவன்...
''உடம்பு கொதிக்குதுங்க... இப்ப வேலைக்குப் போகலைன்னா என்ன...''
''நான் தாங்கிப்பேன் நாகு. குழந்தை, ராத்திரி முழுக்க வலி தாளாம முனகிட்டேயிருந்தான். விடு... பார்த்து, மருந்து தடவிட்டு வந்திடறேன்.''
''குழந்தை... குழந்தையின்னா யார் குழந்தைங்க...?''



நாகுவின் கேள்விக்கு மௌனத்தையே பதிலாய் அளித்துவிட்டு, கல்லூரிக்கு சிட்டாய் பறக்கிறான் மாதையன்.

**வ**ழக்கம்போல, வகுப்புகள் துவங்கின போது.... சந்திரமணி, தனது மாணவர்களுடன் மியூஸியத்தின் பக்கம் வர...
அந்தக் காட்சியைக் கண்டு, உறைந்து போய் நின்று விட்டாள்.
மாதையன்...
கண்ணாடி ஜாடியிலிருந்த குப்பனை எடுத்து, மடியில் போட்டுக் கொண்டு, அவன் தலையிலும், முதுகிலும் தைலத்தைத் தடவிக் கொண்டிருக்கிறான்.
''மாதையா... என்ன இது?''
''ராத்திரி முழுக்க குப்பன் தூங்கவே இல்லீங்க. வலி வலியின்னு... இங்கே பாருங்க. நெத்தி புடைச்சு போச்சு.''
மாதையன், குப்பனை மார்புற சேர்த்து அணைத்தபடி, குலுங்கி அழ - டாக்டர் சந்திரமணி மெதுவே - குப்பனை அவனிடமிருந்து பிடுங்க முயற்சிக்க -
யாருமே எதிர்பாராத விதத்தில் மாதையன் டாக்டரை ஓங்கி அறைகிறான்.
''திஸ் ஈஸ் டூ மச்...''
மாணவர்கள், மாதையனின் இருகரங்களையும் இழுத்துப் பிடிக்க முயற்சிக்கிறார்கள்.
வேறொரு ஆள் - இந்த விஷயத்தை மாதையனின் மனைவியிடம் சொல்வதற்காக ஓடுகிறான்.

**வீ**ட்டில் -

நாகு - தன் துக்கங்களை மனசோடு புதைத்து, சீவி, பவுடர் பூசி, பொட்டிட்டு தன் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கிறாள்.
'சாமி... இனிமே எனக்குக் குழந்தையே வேணாம். என் புருஷனே ஒரு குழந்தை மாதிரி. அவரு சந்தோஷமா இருந்தாப் போதும்.''
ஒரு கருவைச் சுமந்தவள் - எட்டாவதாய் தன் கணவனையே உட்கார வைத்து, சோறூட்டி, குளிப்பாட்டி - குழந்தையாய் சீராட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் தான் உள்ளதை அறியாதவளாய் நிற்கிறாள்.








## 1

## "வா!"

வாசல் திண்ணையில் அமர்ந்திருந்த ரங்கு மாமா, தங்களை வரவேற்ற தொனியிலிருந்து புரிந்து கொண்டு விட்டான் ராஜா. இலேசாகத் திரும்பி அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவளது முகம் சுட்ட கத்திரிக்காயை விடவும் மோசமானதாய் ஆயிற்று.

கணவரின் குரல் கேட்டு எட்டிப் பார்த்த பங்கஜம், வெடுக்கென முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டே திரும்பிப் போய் விட்டாள்.

இல்லாதவர்கள் - இன்னொரு இல்லாதவர்களின் வீட்டுக்குப் போனால் - அதுவும், ஸ்திரமாகத் தங்கப் போனால் வரவேற்பு இப்படித்தான் இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

ரொம்ப நாட்களாக இரு குடும்பத்தாருக்கும் இடையே போக்குவரத்துக் கிடையாது. எப்பொழுதாவது ரங்கு மாமா அவர்கள் இருந்த கிராமத்துக்கு வருவார். அவர்களுக்குச் சொந்தமாக இருந்த கையகல நிலத்தையும் வில்லை வில்லையாகக் கீறி விற்றுப் பணத்தை மடித்துக் கண்ணாடிக் கூடுக்குள் வைத்துக் கொண்டு நடையைக் கட்டுவார்.

போகும் பொழுதும், வரும் பொழுதும் இவருக்கு ராஜா மறக்காமல் நமஸ்காரம் செய்வான்.

தடித்த மூக்குக் கண்ணாடியின் வழியே பிதுங்கும் கோலிக் குண்டு கண்களால் இவனை மேலும் கீழுமாய் பார்த்தபடி, 'உம்...' எனத் தொண்டையைச் செருமிக் கொள்வதன் மூலம் தனது ஆசீர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்வார் ரங்கு.

இவர் அதிகமாய்ப் பேசி அவன் பார்த்ததில்லை. அதனால், இன்று, இவரது 'வா' என்கிற ஒற்றைச் சொல் வரவேற்பே, பெரிசுதான் எனத் தன்னைத் தானே திருப்திபடுத்திக் கொள்ள வேண்டிய நிலைமை.

''இந்தாடா... அந்த டிரங்குப் பெட்டியைச் சுவத்தோரமா வை. பையில் இருக்கிற சம்புடத்தை எடு.''

ராஜாவின் தாய் விசாலம், இந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளால் பாதிக்கப்படாதவள் போல முகத்தை வைத்துக் கொண்டு மகனிடம் சொல்ல, ராஜா தயங்கித் தயங்கி தன் கைப் பையிலிருந்த பித்தளைச் சம்புடத்தை எடுத்து அம்மாவிடம் கொடுக்க, அவள் விசுக், விசுக்கென்று சமையலறையை நோக்கி நடையைக் கட்ட, அடுத்தாற் போல அத்தனூண்டு கூடத்தில் தரை முழுக்க இறைந்து கிடந்த மாமாவின் புத்திர ரத்தினங்களுக்கு மத்தியில் எங்கே உட்காருவது எனப் புரியாமல் ராஜா சற்றுத் தடுமாற - விழிகள் தரையில் கிடக்கும் சரீரங்களின் மீது பட்டுப் பட்டுத் தெறித்தது.

'அடேங்கப்பா! மாமாவுக்குத்தான் எத்தனை குழந்தைங்க! ஒண்ணு... ரெண்டு... மூணு.... அஞ்சு... ஆறு.... ஆறா இல்லே இன்னும் இருக்கா?'

இவன் இப்படி நின்றபடி ஸென்ஸஸ் எடுத்துக் கொண்டிருக்கும் போது ரங்கு திண்ணையிலிருந்தபடியே கூடத்தை எட்டிப் பார்த்தார். ''அங்கே நின்னுட்டு என்ன பண்றே? இப்படி வந்து உட்காரு.''

ரங்குவுக்குத தன் மருமகன் நிற்கிறானே என்பதை விடவும், கூடத்தில் மேல்துணி போனது கூடத் தெரியாமல், காடாந்தரகமாய் தூங்கும், தனது வயசுப் பெண்களின் மீது இவனது பார்வை எச்சில் படிந்துவிடப் போகிறதே என்கிற பயமே அதிகம்.

'இனிமே ஜாக்கிரதையா இருக்கச் சொல்லணும் இதுங்களை....' - மனசுக்குள் நினைத்துக் கொண்டார்.

ராஜா, இவர் அமர்ந்திருந்த திண்ணைக்கு எதிர்த் திண்ணையில் வந்து அமர்ந்தான்.

''உம்... ஊருல எல்லாத்தையும் காலி பண்ணியாச்சா?''

''ஆச்சு மாமா...''

''சாமான் எல்லாத்தையும் என்ன பண்ணினே?''

இதற்கு என்ன பதிலைச் சொல்வது எனப் புரியாமல் ஒரு கணம் திகைத்துப் போனான் அவன்.

'சாமான்... என்ன பெரிய சாமான்? இரும்பு பீரோவா, கட்டிலா? ஒரேயொரு நாடாக் கட்டில்.... அப்பா அதுலேயே நாலஞ்சு வருஷமாப் படுத்துப் படுத்து அப்பாவோட வியாதி, கட்டிலுக்குக் தொத்திக்கிட்ட மாதிரி, லொட லொடன்னு ஆடிப் போய்... அம்மாவுக்கு அதை யாருக்கும் கொடுக்க மனசே வரலைங்கறதைவிட, அந்தச் சனியனைக் காசு கொடுத்து வாங்க யாருக்குமே மனசு வரலையிங்கறதுதான் நிஜம். கடைசி கடைசியா முந்தா நாள் சமையலுக்கு



விறகு இல்லாதப்ப, அந்தக் கட்டில்தான் உதவினது... நாலு காலையும், சட்டத்தையும் நான்தான் 'மளுக்'குனு ஒடைச்சு, அணைஞ்சு போக இருந்த அடுப்புல வச்சேன்.'

'வேற என்ன சாமான்? அதான் அப்பா சாகறப்ப ஒண்ணு பாக்கி விடாம, எல்லாத்தையும் வித்து மருந்தாவும், டானிக்காவும், தன் வயித்துக்குள்ள அடக்கம் பண்ணிட்டுப் போய்ச் சேர்ந்துட்டாரே. ரெண்டு வெங்கலப் பானை.... நாலஞ்சு எவர்சில்வர் பாத்திரம், ஒரு காது மூளியாய் போன வாணலி ஒண்ணு, ஒரேயொரு பித்தளைச் சம்புடம், பிய்ஞ்சு போன விசிறி - இதானே மிச்சம்?'

'மாமாகிட்ட சொல்லிவிடலாமா, கடைசிக் கடைசியா இந்தப் பித்தளைச் சம்புடத்தைத் தவிர, மிச்ச எல்லாத்தையும் வித்துட்டுத்தான் புறப்பட்டு வர ரயில் டிக்கெட் வாங்கினோம்னு? அம்மா எவர்சில்வர் பாத்திரங்களை வித்து, என்னை விட்டு வேர்க்கடலையும், வெல்லமும் வாங்கிட்டு வரச் சொல்லி, கடலை உருண்டை பிடிச்சு, இந்தப் பித்தளைச் சம்புடத்துலே போட்டு எடுத்துட்டு வந்திருக்கான்னு? செலவெல்லாம் போக, இதோ, இப்ப என் சட்டைப் பையில அஞ்சு ரூபா, எழுபத்தஞ்சு காசுதான் மீதி இருக்குன்னு இவர்கிட்ட சொல்லி விடலாமா?'

இவன், அவரையே பார்த்தபடி கல்லுப் பிள்ளையார் கணக்காக உட்கார்ந்திருக்க, ரங்கு இவனது மௌனத்திலிருந்தே எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பெருமூச்செறிந்தார்.

''என்ன படிச்சிருக்கே?''

''எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சுட்டேன் மாமா.''

ரங்கு அவனை ஏறிட்டு நோக்கிப் புன்னகைத்தார். அவனது 'முடிச்சுட்டேன்' என்கிற வார்த்தையிலிருந்தே, அதில் தொனித்த பெருமையிலிருந்தே எஸ்.எஸ்.எல்.சி. முடிப்பது என்பதை எத்தனை பெரிய விஷயமாய் இவன் நினைத்திருக்கிறான் என்பதை அவர் புரிந்து கொண்ட சிரிப்பு அது.

''எப்ப முடிச்சே?''

''ரெண்டு வருஷமாறது.''

''வேற... மேல படிக்கலையா?''

''படிப்பு நமக்கெல்லாம் சரிப்பட்டு வரலை மாமா. ஊருல மளிகைக்கடை ஒண்ணுல அஸிஸ்டெண்டா வேலை பார்த்தேன். எனக்கு இங்கிலீஷ், ஹிஸ்டரிய விடவும் இந்த மிஷினடி வேலை.... அதான் மாமா, பாலிடெக்னிக் படிப்பு - இது ரொம்பப் பிடிச்சிருந்தது. அப்பா உடம்பு ரொம்ப மோசமாய் போனதுல என் படிப்பு நின்னு போச்சு.''

இதைச் சொல்லிவிட்டு, மாமாவின் முகத்தை ஆவலோடு பார்த்தான் ராஜா.

சாதாரணமாய் சினிமாக்களிலோ, கதைகளிலோ மாமனிடம் ஒரு மருமகன் இந்த வார்த்தைகளைச் சொன்னால், 'நீ கவலைப்படாதே ராஜா. இனிமே உன்னைப் படிக்க வச்சு, ஆளாக்க வேண்டியது என் பொறுப்பு. நீ என் மருமகன் இல்லே; மகன்' என்று மாமாக்காரர் உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் மல்கக் கூறுவதாக அவன் பார்த்திருக்கிறான், படித்திருக்கிறான்.

ஆனால், இந்த மாமா அப்படி எதுவும் கன்னா பின்னாவென உளறி, வாய் கொடுத்து மாட்டிக் கொள்ளாமல், சமர்த்தாக உட்கார்ந்திருப்பதே பெரும் வியப்புக்குரிய விஷயமாய் இருந்தது அவனுக்கு.

அவனுக்குத் தெரியுமா, ரங்குவின் சிரமங்கள்? இப்பொழுதுதானே இந்த வீட்டு வாசலை மிதித்திருக்கிறான். இனிமேல்தானே தெரிந்து கொள்ள வேண்டும்?

ரங்குவின் சொந்தத் தமக்கைதான் விசாலம். பார்க்கப் போனால், இருவருக்கும் ஒருவரை விட்டால் மற்றவருக்கு வேறு நாதி இல்லை என்கிற நிலை. விசாலத்துக்குப் புகுந்த வீடு எத்தனையோ ஒசத்தியாக ஒரு காலத்தில் இருந்தது. அந்தக் காலங்களில் அவள் தனது தம்பியையோ, தம்பி மனைவியையோ லட்சியமே செய்ததில்லை. தனது ஒரே பிரசவத்துக்குக் கூடப் பிறந்த வீட்டுப் பக்கம் வர அவள் விரும்பவில்லை.

''அங்கே பிரசவத்தை வச்சுட்டா அத்தனை வசதிப்படாதுன்னு அவர் சொல்லிட்டார். வேணும்னா பங்கஜத்தை இங்கே அனுப்பி வை. பிரசவம் முடியற மட்டும் ஒத்தாசையாக இருக்கட்டும்.''

விசாலத்தின் மிதப்பான வார்த்தைகளுக்கு, நறுக்கெனப் பதில் கொடுத்தாள் பங்கஜம்.

''இங்கே என்ன, அவ அவளுக்கு வேற வேலை வெட்டி இல்லையா? எனக்கும் கையில் குழந்தை, வயித்துல மெய்யோ, பொய்யோன்னு வேற. அவ வந்து இங்கே இருந்தா, வஞ்சனையில்லாம செய்யறேன். மத்தபடி, என் வீடு வாசலை விட்டுட்டு வேற இடத்துல போய் மாசக்கணக்கா உட்கார முடியாது. எங்க அம்மா என்னை இதுக்காகப் பெத்துப் போடலை.''

விசாலத்தை விடவும், பங்கஜம் பல மடங்கு ரோஷமுள்ளவள். பணக்கார நாத்தியுடன் முகம் கொடுத்துப் பேசுவதுகூடத் தனது தன்மானத்துக்குப் பங்கம் என்று நினைத்தாள் அவள்.

விசாலம் தன்னிடம் இரண்டு காசு இருந்த திமிரில் நிறையவேதான் தம்பி மனைவியின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறாள்.

ராஜா பிறக்கும் வரையில்தான் விசாலத்தின் கொட்டமெல்லாம். விசாலத்தின் மாமனார் பங்கு போட்டிருந்த நிறுவனங்கள் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் மாதிரி ஒரேயடியாக, நீள நெடுகப் பள்ளி கொண்டதும் - இத்தனை நாள் செல்வாக்காக



வாழ்ந்த குடும்பம் பழைய ஜபர்தஸ்தையும் விட முடியாமல், புதிய ஏழ்மைக் கோலத்தையும் ஏற்க முடியாமல் திண்டாடித் தெருவில் நிற்காத குறையாக லோல்பட்டது.

இருக்கிற அற்ப சொற்ப நிலத்துடன் கிராமத்தோடு போய்த் தங்கினாள் விசாலம்.

நடுவில் ஓரிரு முறை ராஜாவின் ஆண்டு நிறைவுக்கு, விசாலத்தின் மாமனார் 'சிவலோகப் பிராப்தி' அடைந்ததற்கு பங்கஜம் தலையைக் காட்டிவிட்டுப் போக வந்திருந்தாள்.

விசாலம், தன் நிலையிலிருந்து இறங்கி வந்து பேசாதது மட்டுமல்ல; தனக்குப் பிறந்த வீடு சரியில்லை என்றும், மற்றவர்களிடம் பேசித் தீர்த்தாள். தன் மகளுக்குக் கால் சவரனில் காதுத் தொங்கட்டான் செய்து போடக்கூடத் தனது தம்பிக்கு வக்கில்லை என்று ஏசித் தீர்த்தாள். 'ஊரார் முன் இவர்களைத் தனது பிறந்த வீட்டு மனிதர்கள் என்று பறைசாற்றிக் கொள்வதைவிடவும் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விடலாம்,' என்றாள்.

இவ்வளவு போதாதா? பங்கஜம் இதற்குப்பின் நாத்தியின் எந்த ஒரு சுக துக்கத்துக்கும் எட்டிக்கூடப் பார்க்க விரும்பவில்லை.

ரங்கு மாத்திரம் போவார், வருவார். அதுவும் எப்பொழுதாவது அதிசயமாய் அவர் போய் வந்த காட்சிகளை விரல் விட்டு எண்ணி விடலாம்.

கிராமத்தில் தனக்கென்று வைத்திருந்த நிலத்தில் ஒரு பாகத்தை மூத்தவள் கல்யாணியின் திருமணத்துக்காக விற்க வந்திருந்தார். அப்பொழுது ராஜா பத்து வயதுச் சிறுவன். முதன்முதலாக மாமாவை அப்பொழுதுதான் பார்த்தான்.

அடுத்த முறை வந்த பொழுதும் நிலத்தை விற்கத்தான். இந்தத் தடவை கல்யாணமில்லை. கல்யாணியின் புருஷன் இன்னும் கொஞ்சம் சீர் வந்தால்தான் கதவைத் திறப்பேன் என்று மனைவியை விரட்டி விட்டதால், அத்தனை பணத்துக்கு வேறு வழி தெரியாததால் வந்திருந்தார். அப்பொழுது ராஜாவுக்குப் பதின்மூன்று வயசு.

மூன்றாம் முறை, மிச்சமிருந்ததையும் விற்றுத் துடைத்துக் காலி செய்ய அவர் வந்ததன் காரணம் கல்யாணிக்கு அடுத்தவனான குமாருக்குக் கல்லூரியில் சேரப் பணம் தேவையென்று. ராஜா அப்பொழுது பள்ளி இறுதியாண்டில் கால் வைத்திருந்தான்.

கடைசியாய் அவனது அப்பா இறந்த போது துக்கம் விசாரிக்க வந்துவிட்டுப் போனவர்தான். திரும்பவும் ஒரு வருஷ கால இடைவெளிக்குப் பிறகு இன்றுதான் பார்க்கிறான் ராஜா.

விசாலத்துக்கு இங்கு வருவதில் துளிக்கூட விருப்பமேயில்லை. என்ன

செய்வது? கையில் நயா பைசா இல்லாத போது கோபத்தையும், ரோஷத்தையும் பார்த்தால் முடியுமா?

தான் ஒரே மகனுடன் படு சமர்த்தாய்க் குடும்பநலத் திட்டத்தை ஆதரிப்பதையும், தன் தம்பி மனைவி மகா அசடாய் வருஷத்துக்கு ஒன்றாய்ப் பெற்றுப் போட்டுக் கொண்டே போவதையும் சொல்லிச் சொல்லி எள்ளி நகைத்தவள், இன்று, அந்த ஒரு பிள்ளையை வைத்துச் சோறு போடக்கூடச் சக்தியில்லாமல் இங்கு வந்து நிற்க வேண்டிய அடிமை நிலை.

உள்ளே அம்மாவும் மாமியும் பேசும் குரல் திண்ணையில் அமர்ந்திருப்பவனின் செவிகளில் காய்ச்சிய ஈயமாய் விழுந்தது.

''என்னதான் என்மேல கோபம் இருந்தாலும், ராஜாவோட அப்பா போனப்ப நீ ஒரு நடை வந்துட்டுப் போயிருந்திருக்கலாம் பங்கஜம். வாழ்வுக்கு வரலைன்னாலும் சாவுக்கு விட்டுக் கொடுக்கப்படாதும்மா.''

''ஆமா... யாருக்குத்தான் சாவு வரலை? நான் கூடத்தான் கல்லு மாதிரிப் பிள்ளையைப் பறிகொடுத்துட்டு நின்றேன். அப்ப யாரு வந்தா எனக்கு? இன்னிக்குத் தெரியற ஞானம் அன்னிக்கே தெரிஞ்சிருக்கணும். எப்பவும் எல்லோருமே பல்லக்குல போயிட்டிருக்க முடியாது. கீழே இறங்கித்தான் ஆகணும்.''

''ரொம்பவும் பேசாதேடி. நான் ஏகமா நொந்து போய் வந்திருக்கேன். உன்னோட வார்த்தை ஒவ்வொண்ணும் நெஞ்சுல சூட்டைக் காய்ச்சி இழுக்கறாப்பலே...''

''எப்ப சூடு போடணும்னு, எங்கே சூடு போட்டா மரண வேதனையா இருக்கும்னு சொல்லித் தந்ததே நீங்கதானே?''

பங்கஜம் இரைந்து கொண்டே ஒரு தம்ளர் காப்பியுடன் வாசலுக்கு வந்தாள். தன் கணவரின் எதிரில் தம்ளரை ணக்கென வைத்துவிட்டு அதே வேகத்தில் உள்ளே திரும்பினாள்.

''டேய் குமார், எழுந்திருடா. கல்யாணி, மளமளன்னு எழுந்து வேலையைப் பாரு. குழந்தையைப் பாரு. எங்கியோ உருண்டு கிடக்கான். அடியே விமலி, எழுந்திருடி. பொழுது விடிஞ்சது கூடத் தெரியாம அப்படி என்ன தூக்கம்? ரவி, ராகவா! சோம்பேறிக் கழுதைகளா! தடி முண்டங்களா! ஒருத்தனுக்காவது பொறுப்பே கிடையாது. படிச்சு, நல்ல வேலைக்குப் போகணும்கற அக்கறை கிடையாது. ஒருத்தர் சம்பாத்தியத்துல இத்தனை பெரிய குடும்பம் வாழறது எங்கே? இருக்கிறவங்களுக்கே இங்கே முழு வயித்துக்குச் சோறைக் காணோம். இதுல, இன்னும் ரெண்டு தண்டச் சோறு...''

பங்கஜம் கூடத்தில் படுத்துக் கிடந்த ஒவ்வொருவரையும் புரட்டிப் புரட்டி எழுப்ப, திண்ணையில் அமர்ந்திருந்த ராஜா, கூசி, குன்றிப் போய் விட்டான்.



சமையலறையில் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்திருந்த விசாலமும்தான்.

இத்தனை நாள் எரிச்சலைப் பங்கஜம் கொட்டிக் கொள்கிறாள். எதிர்த்துப் பேச இவர்களிடம் தெம்பில்லை. பொதி சுமக்கும் கழுதைகளைப் போல வார்த்தைகளைச் சுமந்து தீர வேண்டிய நிலைமை.

கூடத்தில் ஒவ்வொருவராய்ச் சோம்பல் முறித்தபடி எழ, ஒருத்தி மட்டும், தலையோடு கால் இழுத்துப் போர்த்தியபடி படுத்திருக்க, மற்றவர்களை விரட்டி விரட்டி எழுப்பிய மாமி, இவளை மட்டும் கண்டு கொள்ளாமல் விட்டுச் சென்ற காரணம் என்னவென்று புரியாமல் திகைத்தான்.

துணி மூட்டையாய்ச் சுருண்டு கிடந்தாள் அவள்.

''தாத்தாவ்...'' தத்தித் தத்தி வாசலுக்கு வந்து, ரங்குவின் மடி மீது ஏற முயன்ற மழலை ஒன்றைத் தூக்கி வைத்துக் கொண்டு பங்கஜம் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காப்பியில் அரைத் தம்ளர் காப்பியைக் குழந்தைக்குப் புகட்டினார் அவர்.

''கல்யாணி... அதான், என் மூத்த பொண்ணு... அவளோட பிள்ளை. இந்த வீட்டுல எனக்கும், என் ரெண்டாவது பெண் சாருவுக்கும்தான் காப்பி. ஏன்னா அவதான் குடும்பத்துக்காக சம்பாதிச்சுப் போடற ஒரே மனுஷி. நான் வயசான கிழவன். உங்க மாமி சமைச்சுப் போடற மட்டும் பசி தாங்காது எனக்கு.''

ரங்கு தன் பாட்டுக்குச் சொல்ல அவன் மௌனமாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இந்த மாமாதான் எத்தனை புத்திசாலி! உனக்குக் காப்பி வராதுடா மடையா. அனாவசியமா எதிர்பார்த்து ஏமாந்து போகாதே'ங்கறதை எத்தனை சூசகமா எடுத்துச் சொல்கிறார்.

அவன், அதற்கு மேலும் அவர் எதிரில் அமர்ந்து அவரைக் காப்பி குடிக்க விடாமல், முறைத்துப் பார்ப்பது தவறு என்கிற எண்ணத்துடன் எழுந்து நின்றான்.

''என்ன?''

''ஒண்ணுமில்லே. பல் தேய்ச்சுட்டு, அப்படியே குளிச்சுட்டு வந்துடறேன்.''

''உம், எல்லாத்தையும் சுருக்க முடிச்சுக்கோ. நேரே உள்ளே போனா கிணத்தடி வரும். தண்ணி இழுத்துக்கோ. பக்கத்துல தட்டி மறைச்சு, பாத்ரூம்னு பேர் பண்ணி வச்சிருக்கான் வீட்டுக்காரன். அதுல பூந்துடாதே. கிணத்தடியிலே குளியலை முடிச்சுக்கோ. ஆச்சு, இப்ப சாரு எழுந்துட்டா அமர்க்களம் பண்ணிடுவா. அவ குளிக்கப் போகிற சமயத்துல, பாத்ரூம் காலியா இல்லைன்னா கோபத்துல பெரிசா சத்தம் போடுவா. ஆபீசுக்கு நேரமாச்சுன்னு எண்ணெயில விழுந்த அப்பளம் மாதிரி குதிப்பா. சம்பாதிக்கறா இல்லையா?''

ராஜா, மாமாவின் வார்த்தைகளைக் காதில் வாங்கியபடியே கூடத்துத் துணிச் சுருளையே உற்றுப் பார்த்தான். அடிவயிற்றில் மெல்லியதான பயம்.

இன்னவென்று சொல்ல முடியாததொரு பீதி. ஒரே க்ஷணத்தில் நெஞ்சம் முழுக்க 'கப்'பென்று பரவிய ஏக்கம்.

'சம்பாதிக்கறாளாமே, வீட்டு ஆம்பிளைங்க சும்மா உட்கார்ந்து இருக்கறப்ப, ஒரு பொம்பளை சம்பாதிச்சுப் போடறான்னா அது பெரிய விஷயமில்லையா? என்ன படிச்சிருப்பா இவ? வயசு எவ்வளவு இருக்கும்? குறைஞ்சது ஐந்நூறு ரூபாயாவது வருமானம் வருமா? இருக்கும். அதுகூட இல்லைன்னா, இத்தனை பெரிய குடும்பம் குப்பை கொட்டறது எப்படி?'

அவன் ஓசையெழுப்பாமல் புழக்கடைப் பக்கம் போக, சமையற்கட்டிலே தன் தாய் பத்து வயதுப் பையன் ஒருவனைப் பலவந்தமாய் இழுத்துவைத்துக் கொஞ்சும் முயற்சியில் இருப்பதை ஓரக் கண்ணால் பார்த்தபடி நகர்ந்தான்.

''வாடா கண்ணா. நான் உன்னோட அத்தைடா...''

''அதெல்லாம் அவனுக்குத் திடீர்னு சொல்லித் தந்து வந்துடாது. இத்தனை வருஷமா எந்த அத்தைய அவன் பார்த்திருக்கான்?''

ராஜா கிணற்றடிக்குப் போக, உள்ளங்கையில் கரித்தூளை வைத்தபடி ஆள்காட்டி விரலால் கரித்தூளைப் பற்களில் அழுந்தத் தேய்த்துக் கொண்டிருந்த இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க தீவட்டித் தடியன் ஒருத்தன் பல் தேய்த்தபடியே ராஜாவை ஒரு முறை பிரதட்சிணம் வந்தான்.

''நீதான் ராஜாவா?''

''உம்...''

''முழுப்பேரு என்ன?''

''ராஜாராமன்.''

''என்ன படிச்சிருக்கே?''

''எஸ்.எஸ்.எல்.சி.''

''வயசு என்ன?''

''இருபது.''

''இத்தனை நாள் சம்பாதிக்கலையா?''

''கிராமத்துல படிப்புக்கேத்த வேலை இல்லே!''

''ஆமா... இவரு பெரிய ஐ.ஏ.எஸ். படிப்புப் படிச்சிருக்காரு. படிப்புக்கேத்த வேலை இல்லையாம்! சொல்ல வந்துட்டாரு. ஏய், நான் என்ன படிச்சிருக்கேன் தெரியுமா?''

''தெரியாது.''

''பி.ஏ. பி.ஏ.டா. வயது என்ன தெரியுமா? இருபத்தி அஞ்சு முடியப் போகிறது. படிச்சதுல ஒரு எழவுகூட நினைவுல இல்லே. இந்த மெட்ராஸிலே எனக்கு நிரந்தரமா ஒரு வேலை கிடைக்கல்லே. பொட்டச்சி சம்பாதிச்சுப் போடற



பணத்துல, இந்த அஞ்சு வருஷமா மான ரோஷம் இல்லாம தின்னுட்டு இருக்கேன்.''

''அப்ப, என் படிப்புக்கெல்லாம் இங்கே வேலை கிடைக்காதுன்னு சொல்றயா?''

''பல்லைத் தட்டிக் கையில கொடுப்பேன். படவா ராஸ்கல். மரியாதை கொடுத்துப் பேசு. வேலை தான் இல்லையே தவிர, நான் உன்னைவிடப் பெரியவன் உன்னைவிடப் படிச்சவன்.''

''ஸாரி...''

''என்ன கேட்டே? உன் படிப்புக்கெல்லாம் இங்கே வேலை கிடைக்காதான்னுதானே கேட்டே? ஒரு கம்பெனியிலே ஸ்வீப்பர் வேலை காலியா இருக்குன்னு நேத்து பேப்பர்லே விளம்பரம் வந்திருக்கு. இரு... இரு... அவசரப்படாதே. நான் அப்ளை பண்ணியிருக்கேன். முன் அனுபவம் ஏதாவது இருக்கான்னு கேட்டிருக்கான் மடையன். அஞ்சு வருஷமா என் வீட்டையும், கக்கூஸையும் நான்தான் தேய்ச்சு துடைப்பத்தைத் தூக்கி சுத்தம் பண்றேன்னு எழுதியிருக்கேன். வீட்டுல இருக்க வேண்டிய பொட்டைக் கழுதைங்க எல்லாம் வேலைக்குப் போனா இதையெல்லாம் வேற யார் செய்யறது?''

அவன், வாய் கொப்புளித்துவிட்டு, ராஜாவைத் திரும்பியே பாராமல் உள்ளே போனான்.

அவனது வார்த்தைகள் அத்தனையும் மிக நியாயமானதாய் ராஜாவின் இதயத்தை வாள் கொண்டு அறுப்பதாய் இருந்தன.

ராஜா சற்று நேரம் திகைத்து நின்றான்.

கரிப் பொடியைத் தேடி எடுத்துப் பல் துலக்கியவன், தனது சட்டையைச் சுற்றிப் புழக்கடை ரேழியில் ஒரு பக்கமாய்ச் சுருட்டி வைத்துவிட்டுக் கிணற்று நீரை வாளியால் இறைத்துத் தன் தலையில் கொட்டிக் கொண்டான்.

கிணற்று நீரின் தணதணென்ற குளிர்ச்சி மட்டுமே, இவனது மனசுக்கு இதமாய் இருந்தது.

குளித்து முடித்தவன் ஈர வேட்டியைப் பிழிந்து, உதறிய சமயத்தில்...

''சித்தூ...!''

முதுகில் 'பச்'சென ஒட்டிக் கொண்ட எச்சில் ஆண் பிள்ளையான அவனை, திடுக்கிட்டு நிமிர வைத்தது.

கையில் பிரஷ்ஷுடன் நின்று கொண்டிருந்தாள் அவள்.

சற்று அலட்சியமாய், தனக்கு நிகர் யாருமே இல்லை என்பது போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவள் நின்றிருந்த தோரணை....

அவன், இமைக்காமல் அவளையே பார்த்தான்.

'இவள்தான் சாருவா?'

# 2

**சா**ரு அப்படி ஒன்றும் பிரமாத அழகியில்லை. மாநிறம்தான், சின்னதாய், கைக்கடக்கமான தேக்கு மரச் சிற்பம் போல இருந்தாள். பாவாடை, தாவணி - பதினேழு வயசுக்கு மேல் மதிப்பிட முடியாதபடி - 'இவள்.... இவளா ஆபீசுக்குப் போய், சம்பாதித்துக் குடும்பத்தைத் தாங்குகிறாள்.' என அதிசயிக்க வைக்கும் தோற்றம்.

'ஒரு வேளை, இவ என்னைக் கவனிக்காம எச்சிலைத் துப்பியிருப்பா....' ராஜா தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்து, சினேகிதமான சிரிப்பைச் சிதற விட்டான்.

''ஹி.... ஹி.... பரவாயில்லே, நான் தண்ணி விட்டு அலம்பிக்கறேன்.''

''அலம்பாம அப்படியே வச்சுக்கறதானாலும் வச்சுக்கலாம்.'' - நறுக்கென்று தெறித்து வந்தது பதில்.

ஸ்தம்பித்து நின்று விட்டான் ராஜா.

அவள் இவனது அதிர்ச்சியைப் பொருட்படுத்தாமல், வாய் கொப்புளித்து, முகத்தைச் சோப்புப் போட்டுத் தேய்த்துத் தேய்த்துக் கழுவிக் கொண்டாள். பின் கழுத்தில் சோப்புத் தேய்ப்பதற்கு இடைஞ்சலாய் இருந்த தாவணியை எடுத்து மாாபுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டாள்.

முனைப்பாய் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தவள் 'விருட்'டென பாம்பு போல் தலையை உயர்த்திக் காட்டமாய் அவனைப் பார்த்தாள்.

'பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்க்கறாப்பல என்னடா பார்வை?' அவளது விழிகளே, அவனைப் பார்த்து அசிங்கமாய்த் திட்ட, தலையைத் தொங்கப் போட்டபடி, அங்கிருந்து மெள்ள நகர்ந்தான் ராஜா. மனசுக்குள் ஆயிரம் வசவுகள்.

'இவ பெரிய மகாராணி! எச்சிலை மேல துப்பிட்டு, என்ன ஒரு திமிரு பாரு... இவ எச்சில் என்ன சந்தனக்காப்பா அப்படியே வச்சிருக்க?'

'இருக்கட்டும், இருக்கட்டும். ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் இவளுக்குச் சரியான பாடம் சொல்லித் தரலை.... என் பேரு ராஜாராமன் இல்லே. எங்க அப்பா பேரு சீனிவாசன் இல்லே.'

நெஞ்சுக்குள் புகையாய்ச் சூழும் கோபம். அதே சமயத்தில் இப்பேர்ப்பட்ட - ஒருத்தியுடன் இதே வீட்டில் என்னமாய்த்தான் இருக்கப் போகிறோமோ என்கிற பயம்.

உடம்பைத் துடைத்தபடி ரேழி வரை வந்தவன், சுருட்டி வைத்திருந்த



சட்டையை மிக மிக நிதானமாய், ஜாக்கிரதையாய் அணிந்து கொண்டவன் வழக்கம் போல, சட்டைப் பையைத் தொட்டுப் பார்க்க, தேள் கொட்டினாற் போலத் துள்ளி நிமிர்ந்தான்.

பையிலிருந்த ஐந்து ரூபாய் எழுபத்தைந்து பைசாவைக் காணோம்.!

அவன் பரபரப்பாய் இருட்டு ரேழியின் மூலை முடுக்கெல்லாம் தேடினான். மறுபடியும் சட்டைப் பையை ஆராய்ந்து பார்த்தான்.

'ஓட்டை ஏதாவது இருக்கோ?'

ஊஹூம்... பை ஒழுங்காகத்தான் இருக்கிறது. பணத்தைத்தான் காணவில்லை.

யார் எடுத்திருப்பார்கள்?

யாரிடம் போய்க் கேட்க முடியும்?

ஊரிலிருந்து வந்திறங்கி, சில மணி நேரங்களே ஆகிறது. இதற்குள் இப்படி ஓர் நஷ்டமா?

தான் கிணற்றடியில் குளிக்க வந்த போது, யார் யார் வந்தார்கள் என மூளையைக் கசக்கிப் பார்த்தான்.

நினைவில் நின்றது குமாரும் சாருவும்தான்.

சாரு ஆபீசுக்குப் போய்ச் சம்பாதிக்கிற பெண். எடுத்திருந்தால் குமார்தான் எடுத்திருக்க வேண்டும்.

'ஆமா, அவன்தானே வேலை வெட்டியில்லாம, காசுக்காக வீங்கிக் கிடக்கான். இவனெல்லாம் ஒரு பி.ஏ. பிச்சைக்காரனை ஏழரை நாட்டுச் சனி பிடிச்சாப்பல..'

எரிச்சலும், ஆத்திரமும் பீறிட, தன்னைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு கூடத்துக்கு வந்தான்.

சாரு, சம்பிரதமாகத் தரையில் அமர்ந்து காப்பியை ஆற்றிக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா, காப்பி கறுப்பா இருக்கு?''

''கறுப்பாவா இருக்கு? சமையக்கட்டு இருட்டுல கண்ணே தெரியலே.''

''இன்னும் கொஞ்சம் பால் விடு.''

பங்கஜம், ஒரு உத்தரணி பாலைக் கொண்டு வந்து மகளின் கையில் இருந்த டபராவில் ஊற்றினாள்.

''ஏன்... பால் இல்லியா? நான்தான் உன்னைப் பாலிலே கணக்குப் பார்க்காதே, பார்க்காதேன்னு சொல்றேன் இல்லே?''

''சொல்றே. யார் இல்லேன்னு சொன்னது? இப்பவே பால் பணம் நூத்தம்பது - இருநூறு ரூபா வரைக்கும் ஆறதுடி. புதுசா ரெண்டு மெம்பர் வேற வந்திருக்கா. தெரியுமோ இல்லையோ?''

''யாரு, கொல்லைத் கிணத்தடியில் - ஒரு பொம்பிளை பார்க்கறாளேங்கற விவஸ்தையே இல்லாம - ஜட்டியோட குளிச்சிட்டிருந்ததே, அதுவா?''

''உம்... அது, உன் அத்தை பிள்ளை ராஜா. அத்தையும் வந்திருக்கா. இனிமே இங்கேதான் இருக்கப் போறா.''

சாரு இதற்கு உடனடியாகப் பதிலளிக்காமல், ராஜாவைக் கீழ்க் கண்ணால் அளவெடுக்க, கொல்லைப்புறத்தில் வாங்கிய சூடே இன்னமும் ஆறாத ராஜா, ஒரு கணம் வெலவெலத்துப் போனான்.

''இத்தனை நாளு இந்த ராஜா எந்த சாம்ராஜ்யத்தை ஆண்டாராம்?''

''சாம்ராஜ்யம் எதுவுமில்லைடி சாரு... நீடாமங்கலத்துக்குப் பக்கத்துல கொறடாச்சேரின்னு ஒரு ஊரு...''

''அங்கே கொறடா பண்ணி, வித்துட்டிருந்தாரா?''

''போதும், இரைஞ்சு பேசாதே. அத்தை சமையக் கட்டுலதான் இருக்கா. ஒரொரு சமயத்துல நீ பேசறதெல்லாம் கேட்டா - இந்த அத்தையத்தான் அப்படியே உரிச்சு வச்சுட்டுப் பொறந்திருக்கியோன்னு தோணும். அந்தக் காலத்துல அவ இப்படித்தான் இருந்தா. எல்லார்கிட்டயும் இடக்கும் குதர்க்கமுமாப் பேசிட்டு.''

''அத்தையும், அவ பெத்த ரத்தினமும் ஏன் அந்தக் கொறடாச்சேரிய விட்டு வந்தாங்க? அதைச் சொல்லு...''

இதற்கு மேல் ராஜாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நெஞ்சில் கனன்ற நெருப்பு தலைவரையில் ஏறினாற்போல, 'என்ன மனுஷி இவ? சுத்தி வர, நாலு பேரை வச்சிட்டு மானத்தை வாங்கறா. இல்லாதவன்னா அத்தனை கேவலமாப் போச்சா. அந்தக் காலத்துல என் அம்மா வேணும்னா இவங்களை உதாசீனப் படுத்தியிருக்கலாம். அதுக்குப் பதிலா - என்கிட்டயா இவ பழி தீர்த்துக்கணும்?'

ஈரத் தலையைத் துவட்டிக் கொள்ள வேண்டும் என்கிற ஸ்மரணைகூட இல்லை.

''இதப்பாருங்கோ மாமி. வாழ்நாள் முழுக்க உங்களை அண்டியே பொழைப்பு நடத்தணும்னு நான் திட்டம் எதுவும் போட்டுட்டு வரலை. அங்கே, அந்த ஊருல பொழைக்க வழியில்லை. இருக்கற கொஞ்ச நஞ்ச சாமான்களையும் சப்ஜாடா வித்துட்டு, அம்மாவையும் அழைச்சிட்டு இங்கே வந்திருக்கேன்னா எப்படியாவது சம்பாதிக்க முடியும்கற நம்பிக்கையிலதான். நீங்க ஒண்ணும் சும்மா சோறு போட வேண்டாம். கணக்கு வச்சுக்கலாம். நான் சம்பாதிக்கத் தொடங்கினா ஒரு பைசா பாக்கியில்லாமத் தீர்த்துடுவேன்.''

சாரு இப்பொழுது இவனை உற்றுப் பார்த்துவிட்டு, சின்னதாய்ச் சிரிக்கிறாள்.

''சாப்பாட்டுக்குக் கணக்கு வச்சுக்க இது ஒண்ணும் ஹோட்டல் இல்லை. ஆனா ஒண்ணு சொல்றேன். கவ்னமா கேட்டுக்கோ. என் வீட்டுல நாங்க அக்கா, தங்கை, அண்ணா, தம்பி எல்லாரையும் சேர்த்து - மொத்தம் ஆறு பேர்.



இதைத்தவிர, எங்க அம்மா, அப்பா ரெண்டு பேரையும் சேர்த்தா எட்டுப் பேர். எங்க அக்கா கல்யாணி பெத்த செல்வங்கள் வேற ரெண்டு. இதுகளையும் சேர்த்தா, மொத்தம் பத்து பேர். இத்தனை பேருக்கும் சம்பாதிச்சுக் கொட்டறவ நான்தான். என் சம்பளத்துலதான் குடும்பம் நடக்கிறது. நானே என்னிக்காவது ரொம்பவும் பசி பொறுக்க முடியாம, பழைய சாதத்தைப் பிசைஞ்சு ஒரு வாய் போட்டுக்கலாம்னு நினைச்சா... 'ஜில்'லுனு ஒரு தம்ளர் நீராகாரம் குடிச்சா தேவலைன்னு நினைச்சாக்கூட முடியாது. எல்லாம் சுத்தமா காலி பண்ணி வச்சிருக்கும்.''

அவள், சொல்ல வந்ததை நிறுத்தி விட்டுத் தனது வார்த்தைகள் எதிராளியின் மனதில் என்ன பாதிப்பை உண்டு பண்ணியிருக்கும் என ஆராய்வதைப் போல அவனைத் தனது பார்வையால் துருவி விட்டு மீண்டும் தொடர்ந்தாள்.

''வெயிட் எ மினிட். நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன். இப்படி, துளிப் பருக்கைகூட இல்லாம, ஒட்டக் காலி செய்யறாங்களேன்னு நான் இவங்களைக் குறை சொல்லலை. இவங்களோட தேவைக்கு ஏத்த மாதிரி என்னால சம்பாதிக்க முடியலையேன்னுதான் வருத்தப்படறேன். இப்ப - இந்தப் பத்துப் பேரோட, பன்னண்டு பேரா - நீங்க ரெண்டு பேரும்... ஓ.கே.... கொஞ்ச நாளைக்கு நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். மெட்ராசுல வேலை வெட்டி இல்லாம, ஒரு நிமிஷம்கூடச் சும்மாயிருக்கக் கூடாது. முதல்லே வேலை தேடிக்கற வழியப் பாரு. வேலை கிடைக்கலைன்னா - உனக்கு நீயே ஒரு வேலைய உண்டாக்கிக்கப் பாரு. ரொம்ப நாள் தங்கினா மரியாதை இல்லாமப் போயிடும்.''

இந்த சமயத்தில், சமையலறைக் கதவிடுக்கிலிருந்து சுண்டெலி மாதிரி விசாலம் எட்டிப் பார்த்தாள். முகத்தில் எள்ளும் கொள்ளும் 'சடபட'வெனப் பொரிந்தது.

''இப்ப மட்டும் என்ன, அத்தானாச்சேன்னு மரியாதை கொடுத்தா பேசறே நீ? அவன் உன்னைவிட ரெண்டு வயசு பெரியவன். யாரு கண்டது? பிராப்தமிருந்தா நாளைக்கு உங்க ரெண்டு பேருக்குமே கல்யாணம் ஆனாலும் ஆகும்.''

சாரு கதவருகே போய் நின்றாள்.

''யாரு, அத்தையா? உங்க பிள்ளைக்கு நான் மரியாதை கொடுக்கலைன்னா உங்களுக்கு இத்தனை கோபமா? மை டியர் அத்தை. உங்க பிள்ளை முதல்லே ஒரு வேலை தேடிட்டு வரட்டும். அப்ப மரியாதையாக் கூப்பிடறேன். வேலை தேடாம, சத்திரத்துல தங்கறாப்பல தங்கறதுக்கு மட்டும் நினைக்கட்டும்... 'வா - போ' கூட இல்லே. வாடா, போடான்னு கூப்பிட ஆரம்பிச்சுடுவேன். டேய் குமார், தெருக்கோடி கடைக்குப் போய் ஒரு சந்தன சோப்பு வாங்கிட்டு வாடா.''

அவள் தன் அண்ணனை விரட்ட, அது நேரம் வரையில் வாயில் ஈ புகுந்தது கூடத் தெரியாமல் 'ஆ'வென வாய் பிளந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த

அந்தக் குடும்பத்தினர், இந்த வார்த்தைகளால் தாக்கப்பட்டுத் தன் நிலைக்கு வர, குமார் தங்கையை ஒரு முறைமுறைத்து விட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

''காசு வேண்டாமாடா? காசு இல்லாம சோப்பு தரக் கடைக்காரன் என்ன உன் மாமனாரா?''

அவள் தனது ஹாண்ட் பேக்கிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துத் தந்து, ''மீதிய அப்படியே கொண்டு வந்து என்கிட்டே தா. 'தம்' அடிக்க ஒரு பைசாகூட எடுத்துக்கக் கூடாது.'' என்றாள்.

சாருவின் வார்த்தைகள் அந்த வாட்டசாட்டமான தேகத்தை என்னமாய்க் குன்றச் செய்து விட்டது!

ராஜா அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். இந்தக் கொஞ்ச நேரப் பரிச்சயத்தில் சாருவின் சுபாவத்தை ஓரளவு புரிந்து கொண்டு விட்டானாகையால் அவள் குமாரை எடுத்தெறிந்து பேசியதை ஒரு பெரிய விஷயமாக நினைக்கவில்லை. ஆனால் - அவள் கொடுத்த அந்த ஐந்து ரூபாய் நோட்டு புத்தம் புதுசாக இருந்தது. நேற்று ஸ்டேஷனில் டிக்கெட் வாங்கிய பின் அவனிடம் சில்லறையாய்த் தஞ்சம் புகுந்த ஐந்து ரூபாயும் இதைபோலப் புதுசுதான். முதலில், டிக்கெட் கவுண்ட்டரில் கொடுத்த நோட்டு கொஞ்சம் ஓரம் பிய்ந்திருந்தது. 'வேற நோட்டுக் கொடுங்க.' - இப்படிக் கேட்க முதலில் சுயகௌரவம் இடமளிக்கவில்லையாயினும் இருக்கிற ஐந்து ரூபாயும் செல்லாத காசாகி விடக் கூடாதே என்கிற பயத்தில் போலி கௌரவத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டுத் துணிந்து கேட்டு வேறு நோட்டு மாற்றிக் கொண்டான். அப்போது கையிலிருந்தது இந்த ஐந்து ரூபாயும் இரண்டு ஒரு ரூபாய்த் தாள்களும். ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு வர ஒன்று இருபது செலவழிய, பஸ்சை விட்டு இறங்கியவுடன் எதிர்ப்பட்ட குருட்டுப் பிச்சைக்காரனுக்கு ஐந்து பைசா தருமமாய்ப் போக, மீதியிருந்ததை எத்தனை பத்திரமாய் வைத்திருந்தான். புது நோட்டை மடிக்கக் கூட மனசு வராமல் பூத்தாற் போல மடக்கி வைத்திருந்தானே.

அந்தப் பணத்திற்கு எத்தனை செலவுகளைச் சேகரித்து வைத்திருந்தான் அவன்!

'முதல்லே அப்பாவோட சினேகிதர் ஒருத்தர் பல்லாவரத்துல இருக்கறதா அம்மா சொன்னாளே, போய்ப் பார்க்கணும். அவர் மனசு வச்சா - ஏதாவது ஒரு வேலை நிச்சயமாக் கிடைக்கும்.'

'பெரிய மனுஷர் வீட்டுக்கு, வெறுங்கையோட போகப்படாது. ஒரு சீப்பு பூவன் பழம்...'

'செருப்பு வார் அறுந்து 'பட் பட்'டுனு தெறிக்கிறது. பல்லாவரத்துக்குக்



கிளம்பறதுக்கு முன்னாடி செருப்பைத் தச்சுக்கணும்.'

'துணி துவைக்க ஒரு கட்டி சவுக்காரம் மறக்காம வாங்கிக்கணும். என்னதான் மாமா வீடானாலும் போனவுடனே இந்த மாதிரி அல்பத்தனமா இரவல் கேட்கக் கூடாது. இதுக்குக் கூட வக்கில்லையான்னு மாமி இளக்காரமா நினைச்சுப்பா...'

இத்தனை தேவைகளையும், அவன் தனது கையிருப்பான ஐந்து ரூபாய் எழுபத்தைந்து பைசாவுக்குள் அடக்கியிருக்க, அந்தச் செல்வம், மாயமாய் மறைந்து, இதோ, எதிராளியின் கையில் வீற்றிருந்ததால் தலையைச் சுற்றிற்று அவனுக்கு.

'சாரு, இதுபோல அடாவடியாக வீட்டுக்கு வந்திருக்கும் ஏழை விருந்தினனின் சட்டைப் பையிலிருந்து பணத்தைத் திருடுகிற அளவுக்குக் கீழ்த்தர மனுஷியாக இருக்க மாட்டாள்' என்கிற நம்பிக்கை ஒருபுறம்.

'வேண்டுமென்றே ஓர் ஆண்மகன் பரிதவிப்பதைப் பார்த்து, ரகசியமாய் சந்தோஷப்பட வேண்டுமென்றே, இவள் இக்காரியத்தைச் செய்தாலும் செய்திருப்பாள்' என்றும் நினைக்கத் தோன்றுகிறது அவனுக்கு.

''என்ன... இஞ்சி தின்ன எதுவோ மாதிரி முழிச்சிட்டிருக்கே?''

அவள் அவனைப் பார்த்து விஷமமாய்ச் சிரிக்க, ''உம்... ஒண்ணுமில்லே.'' என்று அவன் தடுமாறினான்.

''காப்பி குடிச்சியா?''

''காப்பி... காப்பியா? இல்...லே....''

''அம்மா இவனுக்குக் காப்பி கொடுக்கல்லே?'' அவள் தன் தாயின் மீது பாய்ந்தாள். பங்கஜம், மகளை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, கழுத்தை வெட்டிக் கொண்டாள்.

''இது என்ன சத்திரமா, சாவடியா? திடீர்னு ஒரு லெட்டர் கூடப் போடாம ரெண்டு பேர் மூட்டை முடிச்சோட வந்து இறங்கினா எனக்கு என்ன இட்சிணி வித்தையா தெரியும்? கணக்கா பால் வாங்கறப்பவே மாசம் பொறந்தா அடி வயித்துல புளியக் கரைக்கறது...''

இதற்குள் கல்யாணி - சாருவின் தமக்கை - அம்மாவுக்குப் பரிந்து கொண்டு வருகிறாள். ''இந்த வீட்டுல, உன்னையும் அப்பாவையும் தவிர வேற யாருக்குக் காப்பி குடிக்கிற பாக்கியம் இருக்கு? அம்பிப் பயலுக்கு அஞ்சாறு நாளா வயிறு சரியில்லே. டாக்டரானா, 'வெறும் பசும்பால் கொடுங்கோ போறும்'கறார்... அதுக்கே இங்கே வழியில்லே.''

''வழியில்லே வழியில்லேன்னு ஏண்டி பொருமிச் சாகறே? புருஷன் வீட்டுலதான், பால் சாதத்துக்கே வழி இருக்குன்னு சொல்லுவியே, அங்கே போறது? யார், வேண்டாம்னு கையப் பிடிச்சுத் தடுக்கறாங்க இங்கே?''

சாரு. அக்காவிடம் 'மொலு மொலு'வெனச் சண்டைக்குப் பாயவே, அவள், 'ஓ'வெனப் பெரிசாய் அழத் தொடங்கினாள்.

சாரு. அழுபவளைச் சமாதானப்படுத்தாமல், ராஜாவின் பக்கம் திரும்பினாள்.

''எனக்காக... என்னத்துக்குப் பெரிசா சண்டை? எனக்குக் காப்பி குடிக்கணும்கற சபலமெல்லாம் கிடையாது. அம்மாகூட அப்பா போனதிலேருந்து காப்பி சமாச்சாரமெல்லாத்தையும் விட்டுட்டா.''

''உன்னைத் தினமும் யார் இங்க உபசாரம் பண்ணப் போறாங்க. ஏதோ ரயில்லே வந்திருக்கே. ராத்திரி ரெண்டு பேரும் எப்போ சாப்பிட்டீங்களோ என்னமோங்கற ஒரு 'இது'ல கேட்டேன். சரி விடு. இந்தா, பாதி காப்பிய நீ குடி...''

''பரவாயில்லே... வேண்டாம்...''

''அட, குடின்னா... நான் எச்சல் பண்ணலைடா. இத்தனை நேரம் பேசிட்டிருந்ததுல ஆறித்தான் போச்சு...''

அவள் அவனது கையில் தம்ளரைத் திணித்து விட்டு, 'லலல்லா'வென மெட்டிசைத்தபடி குளிக்கக் கிளம்பினாள். தலையைத் தொங்கப் போட்டபடி ஆடி அசைந்து வந்த குமாரிடம், ''ஐயா என்ன, நேரே மைசூர் சோப்பு பாக்டரிக்கே போய் வாங்கிட்டு வர்றாப்பல இருக்கு...'' என்று குத்தலாகக் கேட்டாள்.

கல்யாணியிடம், ''ஒரே முட்டா அழுதுத் தீர்த்துடாதே.... நாளைக்குக் கொஞ்சம் பாக்கி வச்சுக்கோ...'' என்று நையாண்டி செய்தாள்.

ரகு. ராகவனிடம், ''ஸ்கூல் புக்ஸ் எல்லாம் எப்பத் தருவாங்களாம்? புக்ஸ் கொடுத்த உடனே, என்கிட்டே சொல்லு. பைண்ட் பண்ணித் தரேன்.'' என்று கரிசனமாகச் சொன்னாள்.

''ஏண்டி விமலி, நேத்து ஸ்கூலுக்குப் போறப்ப எவனோ ஒரு பையனோட இளிச்சு இளிச்சுப் பேசிட்டுப் போனியே, யார் அது? மனசுக்குள்ளே என்ன, பன்னீர்புஷ்பங்கள் சாந்தி கிருஷ்ணானு நினைப்போ?'' என்று எகிறினாள்.

குளியலை முடித்துக் கொண்டு வந்ததுமே, ''தட்டு போட்டாச்சா?'' என்று அம்மாவை விரட்டினாள்.

தட்டு முன்னால் உட்கார்ந்தவள் கல்யாணியின் இரண்டாவது குழந்தையான ஜனாவை அருகில் இழுத்து, மடியில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு, பருப்பு சாதமாகப் பிசைந்து ஊட்டினாள்.

செருப்பில், அவசர அவசரமாகக் கால்களை நுழைத்தபடி வெளியே வந்தவள், ''அடல் பைன் மாத்திரை இருக்காப்பா? இல்லைன்னா சொல்லுங்க. வாயை மூடிட்டு அமுக்கமா இருக்க வேண்டாம்.'' என்று தந்தையை அதட்டியபடி பஸ்ஸைப் பிடிக்க விழுந்தடித்துக் கொசண்டு ஓடினாள்.

ராஜா வெகு நேரம் வரையில் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தான்.



ரங்கு எழுந்து வந்து, இவனைச் சாப்பிட அழைக்கும் வரையில், ஜடமாய் உட்கார்ந்திருந்தான்.

'என்ன பெண் இவள்? ஒரு சமயத்துல பாம்பாய்ச் சீறறா... இன்னொரு சமயத்துல பரிவா விசாரிக்கறா... இவளை எந்தவிதத்துல சேர்க்கறது?'

நினைத்துப் பார்த்தவனுக்கு உள்ளூரச் சிரிப்புத்தான் பொங்கியது. காலையில் இருந்த கவலையும் பயமும் அகன்று, கொஞ்சம் நிம்மதியாக மூச்சு விட்டான் அவன்.

விசாலம்கூட, இந்தக் குடும்பத்தின் சூழ்நிலைக்கேற்ப, தன்னைத் தயார் செய்து கொண்டு விட்டாள்.

தன்னை இவர்கள் வேற்று மனுஷியாகப் பாவிக்கக் கூடாதே என்கிற பயத்தில் அளவுக்கு மீறிய உரிமைகளை எடுத்துக் கொண்டாள்.

பள்ளிக் கூடத்துக்குக் கிளம்பிய விமலியை, இழுத்து உட்கார்த்தி வைத்து, தலைவாரிப் பின்னி விட்டாள்.

கல்யாணியின் மூத்த மகன் அம்பிப் பயலுக்கு வயிற்றில் அஜீரணம் சேர்ந்திருப்பதாகவும் அதற்கு ரோஜா மொட்டும், சூரத்தாவரையும் சேர்த்துக் கஷாயம் வைத்துக் கொடுத்தால் எல்லாம் சரியாகி விடும் என்றும் தைரியம் அளித்தாள்.

குழந்தைகள் சாப்பிட அமர்ந்த போது ஓடி ஓடிப் பரிமாறினாள். ரகுவைப் பார்த்து, ''இந்த வயசுல இப்படித்தான் கொறிக்கிறதா?'' என்று அதட்டல் போட்டாள்.

பங்கஜம், கல்யாணி, இவள் மூவருமாகச் சாப்பிட அமர்ந்த போது, கரிசனமாய் பங்கஜத்தின் மகன் ஒருவன் அல்பாயுசில் போனதைப் பற்றி விசாரித்தாள். அதே சமயத்தில், தன் கணவர், நோயுடன் எப்படியெல்லாம் போராடிச் செத்தார் என்பதையும் ஒரு பாட்டம் புலம்பி, கண்ணையும் மூக்கையும் ஒரு சேரத் துடைத்துக் கொள்ள மறக்கவில்லை.

ரங்குவின் அருகில் போய் உட்கார்ந்து, அவரது ரத்தக் கொதிப்பைப் பற்றி ஆதங்கத்துடன் விசாரிக்கவும் செய்தாள். ''டாக்டர் சொல்றானேன்னு உப்பையும் சோத்தையும் குறைச்சிட்டு அவதிப்படாதேடா ரங்கு. அவனுக்கென்ன, வாங்கற ஃபீஸுக்கு இப்படித்தான் எதையாவது சொல்லுவான். நீ வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வர்றதா வேண்டிக்கோ. அப்புறம் பாரு. சிரிக்காதேடா. சொன்னதைக் கேளு. ரத்தக் கொதிப்பு வரும்படியா அப்படியென்ன வயசாயிட்டது உனக்கு? இந்த ஆனி வந்தா அம்பத்திரண்டு முடிஞ்சு அம்பத்தி மூணு வரப் போறதா? இதெல்லாம் ஒரு வயசோட சேர்த்தியா? உன்னைவிட, நான் மூணு வயசு பெரியவள். கல் குண்டு மாதிரி இருக்கேன் - இத்தனை துக்கத்தையும் சுமந்துகிட்டு...'' - இப்படிப் பிரலாபிக்கவும் தவறவில்லை.

இவள் அளவுக்கு ராஜாவினால் அக்குடும்பத்துடன் ஒட்டிக் கொள்ள முடியவில்லை என்றாலும், கல்யாணியின் குழந்தைகளை மெள்ளச் சினேகிதம் செய்து கொண்டு வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்திருப்பான்.

எப்பொழுதாவது, குமாரின் கண்களை நேருக்குநேராகச் சந்திக்க வேண்டி வரும். அப்பொழுது மட்டும் நெஞ்சுக்குள், இன்னதென்று சொல்ல முடியாத பயம் கவ்விக் கொள்ளும்.

'இவனுக்கே வேலை கிடைக்கலைன்னா எனக்கு எங்கே கிடைக்கப் போறது...' மனசுக்குள்ளேயே சின்னதாய்ப் புறப்பட்டது கேள்வி.

இவன் நிறையக் கற்பனைகளை, எதிர்காலத்தைப் பற்றிய சுகமான கனவுகளை ஒருபோதும் தன்னுள் வளர்த்துக் கொண்டதில்லை.

வாயாடியோ, வம்புக்காரியோ - விசாலம் ஒரு அம்மா. ஒரு தாய்க்கே உரிய தியாக உணர்வோடு எத்தனையோ இரவுகள் அவள் பட்டினி கிடந்திருக்கிறாள். மகனின் சந்தோஷத்துக்காக, கணவரின் வியாதிக்காக எத்தனையோ வீடுகளில் உள்ளங்கை தேய மாவாட்டிக் கொடுத்திருக்கிறாள்.

இப்பேர்ப்பட்டவளை ஓரளவுக்கு வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என ஒரு மகன் ஆசைப்படுவது நியாயம்தானே?

இந்த நியாயமான ஆசைக்குச் சொற்ப வருமானமாவது கிடைக்க வேண்டுமே என்பதுதான் ராஜாவின கவலை.

காலையில் போன சாரு இருட்டிய பிறகுதான் வீடு திரும்புவாள்.

வாசல் திண்ணையில் அமர்ந்திருந்த ராஜாவைப் பார்த்து இங்கிதமான சிரிப்பொன்று அவளது இதழ்க் கடையில் மலரும்.

"வேல தேடி, யாரையாவது பார்த்தியா?"

"இன்னும் இல்லே, இனிமேத்தான்..."

"வேலையே உன்னைத் தேடி வரும்னு, இப்படி வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்திருக்கியா?"

"இல்லே, பல்லாவரத்துல, அப்பாவோட சினேகிதர் ஒருத்தர் இருக்கார். இனிமேத்தான் போய்ப் பார்க்கணும்."

"ஏன்... இன்னிக்கு நாள் சரியில்லையா?"

அவள் விடாமல் கேட்க, அவன் ஒருமுறை அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, மடியிலிருந்த குழந்தை ஜனாவின் சுருள் முடியை வருடியபடி சொன்னான்.

"நாளெல்லாம் சரியாத்தான் இருந்தது. அவரைப் போய்ப் பார்க்க, பஸ்ஸுக்குக் கூடக் கையில சில்லறை இல்லே. காலம்பற ஸ்டேஷன்லேருந்து வர்றப்போ ஏன்... பஸ்ஸுலே வர்றப்போ கூட என் சட்டைப் பையில அஞ்சு ரூபா எழுபத்தியஞ்சு பைசா இருந்தது. வீட்டுக்கு வந்ததுக்குப் பிறகு நான்



கவனிக்கலை. குளிச்சிட்டுச் சட்டையை மாட்டிக்கறப்பதான் பணம் தொலைஞ்சு போனது தெரிஞ்சது...."

ராஜா கூசாமல் பொய் சொன்னான். வீட்டிற்கு வந்த பின்பும் குளிக்கத் தொடங்குவதற்கு முன்பும் சட்டைப் பையில் பணம் இருந்தது சர்வ நிச்சயமாகத் தெரிந்தும், 'வீட்டுக்கு வந்ததுக்குப் பிறகு நான் கவனிக்கலை' என்று அநாவசியமாய்ப் புளுகினான்.

'இங்கே வந்துதான் காணோம்.' என்று சொல்லி, அவளையும், அவளது குடும்பத்தையும் தான் அவமானப்படுத்தக் கூடாது என்கிற நினைப்பில் வார்த்தைகளைக் கொஞ்சம் யோசித்துச் செலவிட்டான்.

"இந்த மெட்ராஸ்லே, பிக்பாக்கெட்ஸ் அதிகம்; கொஞ்சம் அசந்தா உன்னையும் என்னையுமே தூக்கித் தன் பாக்கெட்டுக்குள்ளே போட்டுட்டுப் போயிடுவான்கள். தெருவுல போறப்ப, பஸ்லே டிராவல் பண்றப்ப அச்சுப் பிச்சு மாதிரிப் பராக்குப் பார்க்கப்படாது. இனிமேயாவது ஜாக்கிரதையா இரு. என்ன? மூஞ்சிய அப்படி வச்சுக்காதே. 'நான்தான் ஏமாந்த சோணகிரி.'ன்னு போர்டு எழுதி மாட்டலாம் போல இருக்கு."

அவள் சிரித்தபடி வீட்டுக்குள் நுழைய, தன்னைவிடச் சிறியவளான இவளிடம் புத்திமதி கேட்டு, செம்மறியாடு மாதிரி நிற்க வேண்டியிருக்கிற தனது விதியை நினைத்து நொந்து கொண்டான் அவன்.

## 3

**கை**யில் காசில்லாத ராஜாவினால் வேலை தேடி யாரையும் போய்ப் பார்க்க இயலவில்லை. வீட்டோடு கிடந்தான். இரண்டு நாட்களுக்கு முன்பு, அவனிடம் இதுபற்றிப் பேசிய சாரு, அப்புறம் கண்டுகொள்ளவே இல்லை.

விசாலம்தான் அடிக்கடி வாசல் திண்ணைக்கு வந்து மூன்றாம் மனிதருக்குத் தெரியாமல் மகனின் காதைக் கடித்தாள்.

"ஏண்டா சும்மா திண்ணை தேய உட்கார்ந்திருக்கே? பல்லாவரத்துக்குப் போய்ப் பார்க்கறதுதானே?"

"கையில பைசா இல்லாம எங்கே போறது?"

"நான் வேணா சாருகிட்ட கேட்டு ரெண்டு ரூபா வாங்கித் தரட்டுமா?"

சாருவிடம் வலியப் போய்க் கையேந்த, ராஜாவின் ஆண்மை இடம் கொடுக்கவில்லை. அவளே புரிந்து கொண்டு ஏதாவது ஒத்தாசை செய்வாள் என்று அவன் நினைத்திருந்ததும் கனவாயிற்று.

பங்கஜம் மட்டும், இவனது இயலாமையை நன்கு புரிந்து கொண்டவள் போல், சரியானபடி வேலை வாங்கினாள். ராஜா வந்தது முதல் குமாருக்குக் கொண்டாட்டம். இதுநாள் வரையில் அவன் செய்து கொண்டிருந்த வேலைகளை எல்லாம் இன்று ராஜா செய்கிறானே.

**"இந்தாடாப்பா, இந்த ரேஷன் அரிசியைக் கொண்டு போய்ப் பாலீஷ் போட்டுக் கொண்டு வா."**

**"சும்மாத்தானே உட்கார்ந்திருக்கே? இந்தா, இந்த ரெண்டு குழந்தைகளையும் அழைச்சிட்டு இப்படி காலாற நடந்துட்டு வாயேன். கல்யாணிய ஒரு வாய் சாப்பிடக் கூட விடாமத் தொந்தரவு செய்யறதுகள்."**

**"கிணத்துல இருந்து நாலு குடம் தண்ணீர் இழுத்துத் தொட்டியிலே கொட்டேன்."**

**"தெருக்கோடில காய்கறி கடை இருக்கு பாரு. போய்க் கால் கிலோ தக்காளி வாங்கிட்டு வா."**

பங்கஜம் நெஞ்சில் துளிக்கூடக் கருணையே இல்லாமல் விரட்டினாள். குமார், இவன் ஓடியாடி வேலை செய்வதைப் பார்த்தபடி கூடத்தில் மல்லாந்து படுத்திருந்தான். ரங்கு இவைகள் எதையும் கண்டுகொள்வதில்லை. சாப்பிட்ட நேரம் போக, மிச்ச நேரமெல்லாம் திண்ணையிலேயே பககத்தில் பழைய பஞ்சாங்கங்களை அடுக்கி வைத்துக் கொண்டு இருப்பார். அண்டை அயலிலிருந்து இன்னும் சிலர் இதற்காகவே இவரைத் தேடிக் கொண்டு வருவதுண்டு. ஜாதகப் பொருத்தம் பார்ப்பதும், ஜாதகங்களை வைத்துக் கொண்டு பலன் பார்த்துச் சொல்வதும் இவரது பொழுதுபோக்கு.

பொழுதுபோக்குத்தானே தவிர, தொழில் இல்லை. காசு வாங்க மாட்டார். காசு வாங்கினால் சொல்கிற வார்த்தைகள் எதுவுமே பலிக்காதாம்.

இதுமாதிரிப் பொருத்தம் பார்க்க, பலன் கேட்க யாருமே வராத நாட்களில், வாரக் கணக்காய் முகத்தில் மண்டியிருக்கும் ரோமத்தைச் சொறிந்து கொண்டே, மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டே மணிக்கணக்காய் உட்கார்ந்திருப்பார். எப்பொழுதாவது அபூர்வமாய் வாய் திறந்து இவனிடம் பேசுவதுண்டு.

"உங்க அப்பாவுக்கு கன்யா ராசி தானே?"

"தெரியாது மாமா."

"ஆமா... கன்யா ராசிதான். அந்த ராசிக்கு இதோ வர்ற தை மாசம் வரை போதாத காலம். அஷ்டமத்துல சனி. ஆளைப் போட்டுப் புரட்டி எடுத்துடும். அதான்... பாவம் அத்தனை சிரமப்பட்டுச் செத்தார்."

"...."



"உனக்கு என்ன நட்சத்திரம்?"

"அவிட்டம்."

"தவிட்டுப் பானையெல்லாம் தனம் - இந்த நட்சத்திரக்காரர்களுக்கு. இப்ப இப்படி இருக்கேன்னு சொல்ல முடியாது. திடீர்னு ஒரு அதிர்ஷ்டம் அடிச்சு ஆளை குப்புன்னு உசரத் தூக்கி வச்சுடும். எங்க சாரு இருக்காளே, அவ ஜாதகம் தனி. ரொம்பத் துணிச்சல் இந்த ராசிக்காரர்களுக்கு. இவ மட்டும் ஆம்பிளையாய்ப் பொறந்திருந்தா கையில பிடிக்க முடியாது. எத்தனை பேர் வந்தாலும் சோறு போடுற கை..."

மகளைப் பற்றிப் பேசும் போது மாத்திரம் ரங்குவின் மங்கிய விழி முனைகளில் இரண்டு நட்சத்திரங்கள் பிரகாசிக்கும். உணர்ச்சி மேலீட்டில் கன்னத்துச் சதை மிக லேசாகத் துடிக்கும்.

சாருவை அவர் இந்த வீட்டின் மூத்த ஆண் பிள்ளையாகவே நடத்தினார் என்றால் அது நிஜமான வார்த்தை. அந்தச் சின்ன பெண்ணிற்கு அவர் அசாத்திய மரியாதை கொடுத்தார்.

மாலை நேரங்களில் - அதுவும் சாரு வீடு திரும்பும் நேரங்களில், அவர் திண்ணையில் அதிகக் கும்பல் சேர்த்துக் கொள்ள மாட்டார்.

"அவ வர்ற நேரம். அவளுக்கு இந்த மாதிரி வாசல்லே கும்பல் கூடியிருந்தா பிடிக்காது. நீங்க எல்லோரும் போயிட்டு நாளைக்குக் காலையிலே வாங்க." என்று அனைவரையும் விரட்டுவதிலேயே முனைப்பாய் இருப்பார்.

இருட்டிய பிறகு, அவள் வீடு திரும்பும் பொழுது ஒருவித அசட்டுப் புன்னகையுடன் அவளை வரவேற்று மடியிலிருக்கும் அம்பிப் பயலிடம், 'டேய், ஓடிப் போய்ப் பாட்டிகிட்ட சித்தி ஆபீசுலேயிருந்து வந்தாச்சுன்னு சொல்லு, போ,' என்று சொல்லி உள்ளே விரட்டி, "மத்தியானம் ஏதாவது சாப்பிட்டியாம்மா?" என்பது போல மகளை அன்புடன் விசாரிப்பார்.

சாரு, எதையுமே லட்சியம் செய்யாமல் வருவாள். இஷ்டமிருந்தால், குழந்தை ஜானுவுடன் சிரித்து விளையாடுவாள். இல்லாவிட்டால் அலுப்புடன் ஏதோ சாப்பிட்டதாய்ப் பேர் பண்ணிவிட்டுப் படுக்கையில் விழுவாள்.

"பாவம், அலுத்துச் சலித்து வர்றா. வீட்டில் நாம இத்தனை பேரும், இவ ஒருத்தி சம்பாத்தியத்துல மூக்கைப் பிடிக்கத் தின்னுட்டு உட்கார்ந்திருக்கிறோம்." பங்கஜம், விசாலத்திடம் சொல்வது போல தனது வழக்கமான புராணத்தைப் பாடத் தொடங்கி விடுவாள்.

குமார் இந்தப் புராணத்தினால் பாதிக்கப்படவில்லையாயினும், ராஜா குன்றிப் போனான்.

அன்று, ரங்கு திண்ணையில் தனியே அமர்ந்திருந்த போது துணிந்து

கேட்டான் அவன்.

''மாமா...''

''உம்?''

''சாரு, எங்கே வேலை பார்க்கறா மாமா?''

''என்னமோ சோப்புக் கம்பெனி ஒண்ணுலேன்னு சொல்லியிருக்கா. பேரெல்லாம் எனக்குத் தெரியாது.''

''என்ன படிச்சிருக்கா?''

''பி.யு.சி.தான்.''

''சுமாரா என்ன சம்பளம் வரும்?''

''யாருக்குத் தெரியும்? நாங்க யாரும் அவ சம்பளத்தைப் பத்தி இதுவரைக்கும் கேட்டதில்லை. வீட்டு வாடகையிலேயிருந்து கல்யாணியோட குழந்தைக்கு மருந்து வரைக்கும் எல்லாமே அவதான் பார்த்துக்கறா. அத்தனையையும் அவ என்னமாத்தான் சமாளிக்கிறாளோ யாருக்குத் தெரியும்?''

இதற்கு மேல் அவரை எதுவும் கேட்டுப் பயனில்லை. இந்த அளவுக்குப் பேசியதே அதிகம்.

அன்று காலையில்...

கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தவன், சாரு சோப்புப் பெட்டியும் கையுமாகக் குளிக்க வருவதைக் கண்டு தண்ணீர் இறைப்பதை நிறுத்தி விட்டு, அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

''என்ன, ஏதோ கேட்க வராப்பல இருக்கு?'' இவன் மனசிலிருந்ததைப் படித்தாற் போல் அவளே கேட்டாள்.

''ஒண்ணுமில்லே.''

''ஒண்ணுமில்லாததுக்கு நீ இப்படித் தயங்க மாட்டியே?''

''இன்னிக்கு அந்தப் பல்லாவரத்து ஆசாமியைப் போய்ப் பார்த்துட்டு வரலாம்ன்னு இருக்கேன்.''

''ஓகோ! இன்னிக்கு நாள் நன்றாயிருக்கிறதா அப்பா சொன்னாரா?''

''....''

''சரி, நான் ஏதாவது பேசினா நீ வாயை இறுக்க மூடிக்குவே. சொல்ல வந்ததைச் சொல்லு. பல்லாவரம் போயிட்டு வரப் பணம் வேணுமா?''

அவன் சடக்கென நிமிர்ந்தான் - முதுகில் யாரோ தட்டிக் கொடுத்தது போல்.

அவள், அவனைக் கூர்ந்து பார்த்தாள். விழிக்கடையில் விஷமப் புன்னகை.

''நீயே எப்படியும் வாயை விட்டுக் கேட்பேன்னு நினைச்சிட்டிருந்தேன். கேட்கலை.''



அவன், இதற்குப் பதிலளிக்காமல் மௌனமாய் குடத்து நீரையே - அதில் தெரிந்த தனது பிம்பத்தையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

''பரவாயில்லை. பொம்பளைகிட்டே கை நீட்டிக் காசு வாங்கிக்கக் கூடாதுங்கறதுலே ரொம்பவும் முன்னெச்சரிக்கையாத்தான் இருக்கே. அதுமாதிரி ரோஷக்காரனா இருக்கறது நல்லதுதான். ஆனா, வெறும் ரோஷம் சோறு போடாது. நான் குளிச்சிட்டு வந்து, பணம் தரேன். பல்லாவரத்துக்குப் போய்ப் பார்த்துட்டு வா...''

அவள் சடக்கெனத் தட்டி மறைவில் ஒளிந்து கொண்டாள். அடுத்த நிமிஷம் 'எல்லா' மெட்டு ஒலித்தது.

தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னதைச் சாரு மறக்கவில்லை என்பதை நினைக்கையிலேயே என்னவோ போலிருந்தது ராஜாவுக்கு.

'சே, இவ பணம் வேணுமான்னு கேட்கலையேங்கிற ஆதங்கத்துல, மனசுல எத்தனை கோபத்தை வளர்த்துக் கொண்டேன். நான் முட்டாள். அடி முட்டாள்!'

அவன் தன்னையே நொந்து கொண்டான்.

சாரு குளித்து முடித்துச் சாப்பிட உட்கார்ந்த போது அதே கூடத்தின் ஒரு மூலையில் அம்பிகையின் முன் நிற்கும் பக்தனாய்க் கைகட்டி நின்றான் ராஜா.

''சாரு, புழுங்கரிசியே இல்லை. அஞ்சு கிலோ வாங்கிப் போடணும்.''

''புழுங்கரிசி எதுக்கு? இட்லி, தோசைக்கா?''

''உம்.''

''இன்னிக்குத் தேதி என்ன?''

''பதினேழு.''

''பதினேழு தேதியிலே அஞ்சு கிலோ புழுங்கரிசி வாங்கற அளவுக்கு என்கிட்ட ஏது பணம்? அதான், மாசா மாசம் முதல் தேதி வாக்குல சாமான் வாங்கிப் போடறேனில்ல... அப்ப வாங்கின அரிசி என்னாச்சு?''

''தீர்ந்து போச்சடி. தினமும் சாயந்திரம் ஏதாவது டிபன் பண்ண வேண்டியிருக்கு. பெரியவங்களுக்கு பலகாரம்; சின்னவங்களுக்கு டிபன்....''

''அதுக்காகத் தினமும் இட்லியும், தோசையுமாவே பண்ணினா எவன் குடி கெடும்? வாரத்துல ஒரு நாள் இட்லி, ஒரு நாள் தோசை போதும். அனாவசியமா குழந்தைகளோட நாக்கை வளர்த்துக் குட்டிச்சுவராக்காதே. நாம ஒண்ணும் பண்ணையார், மிராசுதார் குடும்பத்தைச் சேர்ந்தவங்க இல்லே. நினைவிருக்கட்டும். வேலைக்குப் போகாத, புருஷனோட சேர்ந்து வாழத் தெரியாத தடிமாடுகளுக்கெல்லாம் நீ விதவிதமா பண்ணிப் போடு. எல்லாம், நாக்கை தொட்டு விட்டுத் தின்னுட்டு தின்னுட்டு சொகுசாத் தூங்கட்டும்.''

வார்த்தைகள்... வார்த்தைகளா அவை? ஒவ்வொன்றும் சொடுக்கி

இழுக்கப்பட்ட கசையடிகள். இவளைக் கொன்று விடுவது போன் ஆத்திரத்துடன் குமார் பார்க்க, கல்யாணியின் கண்கள் சிவந்து, வினா நேரத்துக்குள் வெள்ளம் உடைப்பெடுத்தது.

"ஆனாலும், உனக்கு இந்த வாய் கூடாது சாரு. அவன் உனக்கு மூத்தவன் என்னமோ, போறாத காலம். இன்னமும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை வளர்ந்த பையனுக்கு வேளா வேளைக்குச் சோறு போடாதேன்னு சொன்னா நா என்னடி பண்றது?" பங்கஜம் மகளின் தட்டில் மோரை ஊற்றியபடியே புலம்ப தொடங்கினாள்.

"இதப் பாரு. வேளா வேளைக்குச் சோறு போடு. நான் வேண்டாங்கலை இந்த மாதிரி டிபன் - அதுக்குத் தொட்டுக்க சட்னி, சாம்பார் இதெல்லா வேண்டாங்கறேன். இதுவே உன் பிள்ளை சம்பாதிக்கட்டும். பணத்தை கொண்டு வந்து உன்கிட்டத் தரட்டும். நீ தினமும் அவனுக்கு ஸ்வீட் காரத்தோட டிபன் பண்ணிப் போடு. நான் வேண்டாங்கலை. உன் பொண்ணு ஒண்ணு, 'கஷ்டமோ நஷ்டமோ உங்களை விட்டுட்டு இருக்க மாட்டேன்'னு அகமுடையான்கிட்ட போய்ச் சேரணும். இல்லை, அவன்கிட்ட போக முடியா அளவுக்கு நெஞ்சுல ரோஷம் இருக்கா... வீட்டுல இருந்தபடியே நாலு கா சம்பாதிக்கணும். ஏன், அவளும் ஓரளவுக்குப் படிச்சிருக்காதானே? அக்க பக்கத்துக் குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லித் தரலாமில்லையா? அஞ்சு குழந்தைகளுக்குச் சொல்லித் தந்து, மாசம் அம்பது ரூபா சம்பாதிக்கட்டும் எனக்குத் தர வேண்டாம். இவ குழந்தைக்கு மாசா மாசம் ரெண்டு பால் பவு டின் வாங்கறாளே, அதுக்காவது ஆகும். அதெல்லாம் எதுவுமேயில்லை. அவன் என்னடான்னா வேலை கிடைக்கலைன்னு துக்கம் கொண்டாடிட்டு நல்ல மூணு வேளையும் தின்னுட்டு மூலையில படுத்திட்டிருக்கான். இவ என்னடான்னா, அகமுடையான் சரியில்லைன்னு தினமும் ஒரு பாட்டம் ஒப்பாரி வச்சிட்டு உட்கார்ந்து உட்கார்ந்து உடம்பை ஊத வச்சிட்டிருக்கா. எல்லாரும் என்ன நினைச்சிட்டிருக்காங்க. உம்?" சாரு, பெரிதாய்க் கத்திவிட்டு, மோ சாதத்தை அள்ளி ஒரே விழுங்காய் விழுங்கிவிட்டு அவசரமாய் எழுந்திருந்தாள்.

ராஜா அடித்து வைத்த சிலையாய் நின்று விட்டான். கைக்குட்டையால் வாயைத் துடைத்தபடி, தோல் பையை விசிறித் தோளில் மாட்டியபடி வாசல் வரை போனவள் அதே வேகத்தில் திரும்பி, ராஜாவின் எதிரில் வந்து நின்றாள்.

"பணம் வேண்டாமா?"

"வேணும்."

"அப்ப ஞாபகப்படுத்தினா என்ன? குறைஞ்சா போயிடுவே? இல்லே, எனக்கு இதுதான் ஞாபகமா?"

"இல்லே... வந்து..."



"[illegible] நொள்ளையாவது! இங்கே வா."

[illegible] கூடத்தை ஒட்டினாற்போல இருந்த சின்னஞ்சிறு [illegible] அவனை அழைத்துப் போனாள். அங்கே தாறுமாறாகக் [illegible] சாமான்களை ஒதுக்கிவிட்டு ஒரு டிரங்குப் பெட்டியைத் [illegible] சாவியால் திறந்தாள்.

[illegible] இருந்த நாலைந்து நைலக்ஸ் புடவைகளை எடுத்து, [illegible]

[illegible] அறைக்குள் நுழையாமல் தயங்கியபடி அறைக் கதவருகேயே [illegible]

[illegible] திறந்தவுடன் பாச்சை உருண்டைகளின் நெடி இவனது [illegible]

[illegible] சாக்லெட் பெட்டி ஒன்றைக் கையிலெடுத்துத் [illegible] ரூபாய் நோட்டுகளைப் பரபரவென எண்ணத் [illegible]

[illegible] நகர்த்தத் தோன்றாமல் ரூபாய் நோட்டுக்களையே [illegible] ராஜா வெறித்தான்.

[illegible] ஐம்பதும், இருபதும், பத்தும், ஐந்துமாக, [illegible] அம்மாடி! எத்தனை! நூறு ரூபாய்த் தாள்களே இருபது [illegible] இருக்கும் போலிருக்கிறதே!

'[illegible] வச்சிட்டா அஞ்சு கிலோ அரிசிக்காக அந்தக் [illegible] காப்பியிலே பால் போதலை. ஏன், இன்னும் [illegible] கத்தினாள். இன்னிக்கு அதுக்கு நேர் எதிரா [illegible] வேறயா?'ன்னு திட்டறாள்.'

'[illegible] அதுவும் மாசா மாசம் குடும்பத்துக்காக இவ்வளவு [illegible] சேர்க்க முடிந்தது?'

'[illegible] அது இதுன்னு இவள் சொல்றதெல்லாம் [illegible] பாலசந்தரோட அரங்கேற்றம் சினிமா ஹீரோயின் [illegible] செஞ்சு காசு சம்பாதிக்கிறாளோ...? ஐயோ...!'

[illegible] அவளின் முதுகையே பார்த்துக் கொண்டிருந்தான். [illegible] வியர்வை பெருகி, அவளது ரவிக்கையை ஈரமாக்கி [illegible] ரவிக்கைக்கும் புடவைக்கும் இடையேயுள்ள இடுப்புப் [illegible] நூலை ஒட்ட வைத்தாற் போல் வியர்வை [illegible] அடர்ந்து செழித்த கூந்தல் இடுப்புக்குக் கீழே [illegible] போட்டாற்போல் இடுப்பைத் தொட்டபடி இருப்பதையே....

'அழகாத்தான் இருக்கா. ஆனா, இந்த அழகைக் காசு சம்பாதிக்கத்தான் இ உபயோகப்படுத்திக்கணுமா?'

அந்தக் கணத்தில் ராஜாவுக்குத் திண்ணையில் உட்கார்ந்து யா ஜாதகத்தையோ அலசிக் கொண்டிருக்கும் ரங்கு மாமாவை, கூடத்து மூலையில் அமர்ந்து சாரு வெளியே போகும் வரையில் என்னமோ வேலைக்கு மனு போட்டுக் கிழிப்பதாக நடித்துக் கொண்டிருக்கும் குமாரை, அம்பிப் பயலின் வாயில் பருப்பு சாதத்தைத் திணித்துக் கொண்டிருக்கும் கல்யாணியை இத்தனை குழந்தைகளைப் பெற்றுப் போட்டுள்ள பங்கஜத்தை சமையலறையில் மோர் கடைந்து வெண்ணெய் எடுப்பதாய் நடித்துக் கொண்டிருந்த தன் தாய் விசாலத்தை... அத்தனை பேரையும் வெட்டிச் சாய்த்து விட்டுத் தானும் அதே அரிவாளால் கழுத்தை அறுத்துக் கொண்டு சா வேண்டும் போல இதயம் அடித்துக் கொண்டது. உடம்பின் ரத்தம் முழுவது தலைக்கு ஏறினாற் போல் ஜிவுஜிவுத்துப் போனான் அவன்.

சாரு பணத்தை எடுத்துக் கொண்டு பெட்டியைப் பத்திரமாய் மூடிப் பூட்டியதையோ, அவன் எதிரில் வந்து நிற்பதையோகூட அவனால் உண முடியவில்லை.

''ஏய்... என்ன? முனி பிடிச்சாபோல முழிக்கிறே? உன்னைத்தானே?''

அவள் அவனைத் தொட்டு உலுக்கியதும்தான் அவன் தன் நினைவுக்கு வந்தான்.

'இத்தனை பணம் ஏதுடின்னு கேட்கலாமா?' மறு கணமே அப்படிக் கேட்பது அநாகரிகம் என்பதை உணர்ந்து, வாய் மூடிச் சாமியாக நின்றான்.

''என்ன நீ. இத்தனை நேரம் எந்த லோகத்திலே இருந்தே? இந்த வயசிலே ஒரு சுறுசுறுப்பு இருக்க வேண்டாமோ? இப்படி இருந்தா எப்படி வேலை செஞ் குப்பை கொட்டப் போகிறாய்? இந்தா பிடி. இருபது ரூபா தந்திருக்கேன் வச்சுக்கோ. யாரைப் போய்ப் பார்க்கணுமோ, போய்ப் பாரு. அங்கேயும் போய இதுமாதிரி விளக்கெண்ணெய் வழிசல் வழியாம கேட்ட கேள்விக்கு டாண் டாண்ணு பதில் சொல்லு.''

அவள் இருபது ரூபாயை அவனது உள்ளங்கையில் வைத்து அழுத்திவிட்டு சிட்டாய்ப் பறந்தாள்.

ராஜா யந்திரமாகச் சாப்பிட்டு முடித்து, சட்டைப் பையில் இருபது ரூபாயுடன் சிந்தனையில் சாருவுடன் பல்லாவரத்தை நோக்கிப் பயணமானான்.

வழி நெடுக இவளைப் பற்றியே நினைப்பு.

என்னமோ இது நாள் வரையில் நெஞ்சில் இருந்த நிம்மதி கழன்று விட்டா போல பிரமை.



உச்சி வெய்யிலில் பல்லாவரம் ஸ்டேஷனில் இறங்கியவன் தாகம் தாளாமல் சோடா குடிக்க முதலில் நினைத்தான். உடனேயே, மிக அவசரமாய் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

'அவ தப்பு வழியிலே சம்பாதிச்ச பணத்தை, நான் கை நீட்டி வாங்கிட்டதே தப்பு. அந்தக் காசில் சோடா குடிக்கறதாவது.... வேலை வேணுங்கிற நிர்ப்பந்தத்துல இவகிட்டேயிருந்து பணம் வாங்கிட்டிருக்கேன். இதைக் கண்டிப்பாகத் திருப்பிக் கொடுத்திடணும். இல்லைன்னா மனசு உறுத்திட்டே இருக்கும்.'

'பல்லாவரத்துக்காரர் ஏதாவது வேலை தேடிக் கொடுத்துட்டார்னா இந்த வீட்டுல, இவ சம்பாதிச்சுப் போடற சோத்தைத் திங்கணுங்கிற அவசியமே இல்லை. கஞ்சியக் குடிச்சாலும் உழைச்சு சம்பாதிச்சுக் குடிச்சோம்கற திருப்தியாவது இருக்கும்.'

இத்தனை எண்ணங்களுக்கு நடுவில் தான் கற்பனை செய்து வைத்திருக்கும் 'அரங்கேற்றம்' தொழிலில் சாரு ஈடுபட்டிருக்க மாட்டாள் என்கிற நினைப்பும் இருக்கத்தான் இருந்தது அவனுக்கு.

உண்மையிலேயே, அவள சோபபுக கம்பெனியில் நல்ல வேலையில் இருக்க வேண்டுமென அவன் தனக்குள் பிரார்த்தித்துக் கொண்டான்.

அவள் சோப்புக் கம்பெனியில் ஓவர்டைம் செய்து இத்தனை தொகையைச் சேர்த்து வைத்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால், யாருக்கும் தெரியாமல் ரகசியமாக டியூஷன் சொல்லித் தந்தோ, தையற் கடையில் ரவிக்கை தைத்துக் கொடுத்தோ, பத்தரிகைகளுக்குக் கதை, கட்டுரை எழுதிக் கொடுத்தோ இல்லை, லாட்டரியில் பரிசு விழுந்தோ, இந்தப் பணத்தைச் சம்பாதித்திருக்கட்டும்...

'இதுமாத்திரம் வேணாம்... கூடவே கூடாது. நினைத்துப் பார்க்கவே முடியலை. மாமாவுக்குத் தெரிஞ்சா, அடுத்த நிமிஷமே பிராணனை விட்டுடுவார்.'

மாமா, பிராணனை விடுகிறாரோ இல்லையோ - தன்னால் இந்தக் கன்றாவியைச் சகித்துக் கொள்ள முடியாது.

சென்னை மண்ணை மிதித்து நாலு நாட்கள்கூட ஆகவில்லை. இந்தச் சாரு இங்கே வந்த நாலு நாட்களாகத்தான் பழக்கம். அதற்குள் இவள் மேல் எதற்கு இத்தனை கரிசனம் தனக்கு?

பல்லாவரத்து ஆசாமியைத் தேடிச் சந்தித்த பிறகுதான், தான், இந்த மனிதர் ஒருவரை மாத்திரம் தூண் போல நம்பிக் கொண்டு சென்னை வந்தது எத்தனை மடத்தனம் என்பது புரிந்தது அவனுக்கு. அவருடன் பேசிவிட்டுத் திரும்பிய

போது காலையில் நடந்த சம்பவங்களைப் பற்றி மறந்து போய்... வேலை கிடைப்பதைப் பற்றியே, எந்த ஒரு வேலையும் கிடைக்கா விட்டால் என்ன செய்வது என்பது பற்றியே கவலைப்பட்டபடி எலக்ட்ரிக் டிரெயினில் ஏறினான் அவன்.

'சாரு கேட்டா என்ன சொல்றது?'

அந்த மனுஷன் பல வருஷங்கள் ஒண்ணா படிச்சு ஒண்ணாவே விளையாடிய எங்க அப்பாவை, ரொம்பச் சுலபத்துல மறந்துட்டு, 'சீனுவாசனா, எந்த சீனுவாசன்?'னு கேட்டாரே. அதைச் சொல்றதா?

எங்க அப்பா வசதியோட வாழ்ந்த காலத்துல இந்த மனுஷன் அவரோட ஒரே தட்டுல சாப்பிட்டு, 'சொந்தமா பிஸினஸ் நடத்தப் போகிறேன். உன் கைதான் எனக்கு ராசி சீனு... ஐயாயிரம் ரூபாயாவது நீ முன் பணம் போட்டாத்தான் ஆச்சு'ன்னு பிடிவாதம் பிடிச்சு, பணம் வாங்கிட்டுப் போனவர், இன்னிக்கு என்கிட்ட 'எவனுமே இன்னொருத்தனை நம்பி இருக்கக் கூடாது. அவனவன் சொந்த முயற்சியிலே முன்னுக்கு வரணும். நாளைக்கு, எவனுமே என்னாலதான் இவன் உசந்தான்னு நம்மைக் காட்டிப் பேசக் கூடாது'ன்னு தத்துவம் பேசறாரே இதைச் சொல்றதா?

அப்பா பின்னாடி, நாய்க்குட்டி மாதிரி அலைஞ்சு, அவர் வீசி எறிஞ்ச ரூபா நோட்டுக்களை எல்லாம் குனிஞ்சு பொறுக்கின மனுஷர், 'ஓகோ.... அந்த சீனிவாசன் பிள்ளையா நீ? ஒரு காலத்துல பணம் ஒரு பொருட்டேயில்லை உங்க அப்பனுக்கு. கையில் இருந்த லட்சுமியை துஷ்பிரயோகம் பண்ணினான் இன்னிக்கு அவன் பிள்ளை நீ வேலைக்கு இப்படி அலையா அலையறே! த்சொ... த்சொ... இதுக்குத்தான் பெரியவங்க சிக்கனத்தை அட்வைஸ் பண்ணியிருக்காங்க. யாரு கேட்கறான்? பட்டாத்தான் தெரியும்...' இப்படி விட்டேற்றியாய், இளக்காரமாய்ப் பேசினதைச் சொல்றதா? எதைச் சொல்றது?

அவன் நொந்து போய் எலக்ட்ரிக் டிரெயினில், ஆபீஸ் முடிந்து வீடு திரும்பும் அதிர்ஷ்டம் மிகுந்த மனிதர்களின் மத்தியில் நசுங்கி, மூச்சு விடக்கூட முடியாமல் திணறி, மேலேயிருந்து தொங்கும் கைப்பிடியை ஒற்றைக் கையாலும், சட்டை பையிலிருந்த மீதிப் பணத்தை மறு கையாலும் இறுகப் பிடித்தபடி, அதே சமயத்தில் என்ன ஸ்டேஷன் என்று பார்ப்பதற்காக எண்ணெய் வழியும் கிராப்பு தலைகளுக்கும், எண்ணெயே காணாத ஹிப்பி தலைகளுக்கும், வியர்வை கசகசப்பில் வழுக்குப் பாறையாய் பளபளக்கும் வழுக்கைத் தலைகளுக்கும் நடுவே முகத்தை நீட்டி மூக்கைத் தேய்த்துக் கொண்டு, எட்டி எட்டிப் பார்த்து கொண்டு 'மாம்பலம் வந்தா சொல்லுங்க' என்று அருகில் நின்றவரிடம் பரிதாபமாய் வேண்டிக் கொண்டு, அஷ்டாவதானம் செய்து கொண்டிருக்கையில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்ற போது -



பெருகிய ஜன சமுத்திரத்தின் நடுவே சாரு! சாருவேதான். தோள் பையை ஒரு கையால் பிடித்தபடி, நெஞ்சை நிமிர்த்தியபடி அவளேதான்!

''சாரு....'' ராஜா கும்பலைப் பிளந்து கொண்டு இறங்க முயற்சிக்க, ''யோவ் இது மாம்பலம் இல்லேய்யா.... கிண்டி... சைதாப்பேட்டை தாண்டினதும்தான மாம்பலம்,'' அருகில் நின்றவர், இவனது கையைப் பிடித்து இழுக்க, திமிறிக் கொண்டு ஸ்டேஷனில் குதித்தான். ஓட்டமும் நடையுமாகச் சாரு சென்ற திசையில் ரேஸ் குதிரையாய்ப் பாய்ந்தான்.

ஊஹூம், அவளைக் காணோம்.

எத்தனையோ வண்ணப் புடவைகளின் நடுவே அவளைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறிப் போய் நின்றான் ராஜா.

'இவ எங்கே இங்கே வந்தா?'

'கிண்டியிலே எதுக்காக இவ இறங்கணும்? மாம்பலத்துலதானே இறங்கணும்? ஒருவேளை, அவசரப்பட்டு கிண்டியை மாம்பலம்னு நினைச்சு இறங்கிட்டாளோ?'

அவன், தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக, ஸ்டேஷனில் நின்றான்.




ராஜா வீட்டுக்கு வந்தவுடன் முதலில் தேடியது சாருவைத்தான். கூடத்தில், சமையலறையில், புழக்கடையில் எங்கேயுமே அவளைக் காணோம்.

''சாரு இன்னும் வரலையா?''

அவன் மிக ரகசியமாகத் தன் தாயிடம் கேட்க, பாம்புச் செவி படைத்த பங்கஜம் சமையற்கட்டிலிருந்தே நறுக்கென்று, ''அவ என்ன கலெக்டர் உத்தியோகமா பார்க்கிறா? என்ன வேலையோ, எத்தனை அலைச்சலோ. அப்படியே லேட்டானாலும் இவனுக்கென்ன அக்கறை? தாலி கட்டின புருஷன் மாதிரி - வந்ததும் வராததுமா சாரு எங்கேயாமில்லே?'' என்று நொடித்தாள்.

ராஜா இப்படியொரு கேள்வியைக் கேட்டுவிட்டதற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டான்.

தேளுக்கு மணியம் கொடுத்தா வினாடிக்கு வினாடி கொட்டுமாம். அதுபோல... கல்யாணி, தான் சொல்ல வந்ததைச் சொல்லாமல் பாதியிலேயே நிறுத்தி, இவனை ஒரு முறை முறைத்துவிட்டுச் சமையலறைக்குள் மறைந்தாள்.

குமாரைப் பொறுத்தவரையில் ராஜாவிடம் தனிப்பட்ட கோபம் எதுவுமில்லையாயினும் காலையில் சாரு இவன் எதிரில் தன்னைத் திட்டி

விட்டாளே என்கிற ஆத்திரம். அம்மா, புழுங்கரிசி வாங்கப் பணம் கேட்ட பொழுது இல்லையென்று கத்தியவள் அடுத்த நிமிடமே ராஜாவுக்கு இருபது ரூபாய் கொடுத்தது வேறு.

விசாலம் மெல்ல மகனின் கரத்தைத் தொட்டு, கிணற்றடிக்கு வரச் சொல்லி ஜாடை காட்டினாள்.

''என்னம்மா?''

''நீ அந்தண்டை போனதுக்கப்புறம் வீட்டில் ஏக சண்டை.''

''எதுக்கு? யார் சண்டை போட்டது?''

''கல்யாணியும் குமாரும்தான். என்னதான் நாலு காசு சம்பாதிக்கிறாள் என்றாலும் இந்தச் சாருவுக்கு இப்படியொரு வாய் கூடாதுதான். கல்யாணி, 'இந்த நிமிஷமே ஊருக்குப் போகிறேன். எனக்கு என் புருஷன்கிட்டே போறதுக்கு அவர் கேட்ட நகையையும், வெள்ளிப் பாத்திரத்தையும் வாங்கித் தா'ன்னு அம்மாகிட்டே அழுது புலம்ப, இந்தக் குமார் என்னடான்னா, 'உன் பொண்ணு யோக்கியதை எனக்குத்தான் தெரியும். இவளை மாதிரி நானும் ஒரு பொட்டச்சியாப் பொறந்திருந்தா இத்தனை நேரம் பணத்தை அரிச்சுக் கொண்டு வந்து கொட்டியிருப்பேன'னு, அவன் பங்குக்குக் கத்த வீடு நிர்துளிப்பட்டுப் போச்சு, போ.''

தன் தாயிடம், சற்று முன்பு சாருவை கிண்டி ஸ்டேஷனில் பார்த்ததைப் பற்றி சொல்லுவோமா என ஒரு கணம் நினைத்தான் அவன்.

'வேண்டாம். இதைவிட வினை வேற இல்லவே இல்லை. அம்மா வாயிலே ரகசியம் நிற்காது. மேலும் பிறத்தியாரைப் பத்தி வம்பு பேசறதுன்னா அம்மாவுக்கு அல்வா சாப்பிடறாப்போல. கொஞ்ச நாளா வம்பை விடவும் வயிறு முக்கியம இருக்கறதால வாயை மூடிக் கொண்டு இருக்கா.'

அவன், சொல்ல வந்ததைச் சொல்லாமல் அம்மாவின் முணுமுணுப்பான அன்றைய செய்தியை மட்டும் காதில் வாங்கியபடி உள்ளே வந்தவன் அப்பொழுதுதான் வீடு திரும்பும் சாருவைக் கண்டதும் சிரிக்கலாமா, வேண்டாம என ஒரு கணம் தடுமாறினான்.

''ஏண்டி லேட்டு?'' பங்கஜம், மகளைப் பார்த்துக் கவலையுடன் வினவினாள்

''உம்? ஆபீசர், கொஞ்ச நேரம் இரேன். அம்மா, அப்பா விளையாட்டு விளையாடிட்டுப் போகலாம்னார். அதான் லேட்.''

''சிவ சிவா!''

''பின்னே, வந்ததும் வராததுமா இது என்ன கேள்வி? வேலையில்லாமல வெளியில சுத்தறேன்? காலம்பற டவுனுக்குப் போனவ இன்னிக்கு முழுச ஹெட் ஆபீசுலேயே வேலை.... உனக்கென்ன, வீட்டில் இருந்தபடிலே



சொல்லுவே.'' அவள் சீறி வெடித்தாள்.

''நான் என்ன கேட்டுட்டேன்? ஏன் லேட்டுன்னு தெரியாத்தனமாக் கேட்டுட்டேன். அதுக்கு இத்தனை கோபமா? சரி, சரி... சாப்பிட வா.'' பங்கஜம் உடனடியாகச் சமாதானக் கொடி காட்டினாள்.

அவள் முகத்தில் கடுகடுப்புக் குறையாமல் கிணற்றடிக்கு விரைய, ராஜாவைக் கண்டதும் எல்லாம் மறைந்தாற் போல், மெல்லிய சிரிப்பைச் சிதறவிட்டு, ''பல்லாவரம் போயிட்டு வந்தியா?'' என்றாள்.

''உம்.''

''என்ன சொன்னார், உன் அப்பாவோட சினேகிதர்?''

''கூடிய சீக்கிரத்தில் ஒரு வேலை போட்டுத் தரேன்னு சொன்னார்.''

ராஜா கூசாமல் பொய் சொன்னான். இப்படி, இத்தனை சுலபமாய்த் தன்னால் பொய் பேச முடியும் என்பதையே அப்பொழுதுதான் உணர்ந்தவனாய்த் தனக்குள்ளேயே அதிர்ந்து போனான்.

இதுபோன்ற இக்கட்டான சமயங்களில் இந்த மாதிரிப் புளுகுவதில் பாவமில்லை எனத் தன்னைத் தானே சமாதானம் படுத்திக் கொண்டான்.

''வெரி குட். அவர்தான் வேலை போட்டுத் தரேனனு சொல்லிட்டாரே, தற்றப்ப தாட்டும்னு இருக்காதே. அடிக்கடி அவரைப் போய்க் கேட்டு நச்சரிக்கணும். என்ன? உன் தொல்லை தாங்காம சட்டுப்புட்டுனு அவர் வேலை போட்டுத் தரணும்.''

''சரி...''

''எதுக்குச் சொல்றேன்னா, இந்த மாதிரி வேலை தேடறவனெல்லாம் ஆரம்பத்திலேதான் ரொம்ப ஜரூராத் தேடுவான்கள். நாளாக ஆக, சௌக்கியமா மூணு வேளையும் சாப்பிட்டு விட்டுப் படுத்துத் தூங்கறதைத் தவிர, பெரிய சுகமில்லைன்னு நினைக்க ஆரம்பிச்சுடுவான்கள்.''

''நான் அப்படி இல்லே.''

''ரொம்ப சரி. நீ அது மாதிரிப் பட்டவன் இல்லையங்கிற நினைப்புலதான் நான் இத்தனை தூரம் சொல்றேன். நீ சோம்பேறியா இருந்தா அதை, நான் முதல் பார்வையிலேயே கண்டுபிடிச்சிருப்பேன்.''

அவன், அவள் முன்பு கைகட்டி, தலைகுனிந்து நின்றான். 'என்னமாப் பேசறா இவ. ஒவ்வொரு வார்த்தையும் என்னை மட்டுமில்லாம, இந்தக் கூடத்துல இருக்கிற அத்தனை பேரையும் பெரிய சவுக்கால ஒட்டுமொத்தமா சேர்த்து அடிக்கறாப்போல...'

'இவளை எது இத்தனை திமிராப் பேச வைக்கிறது? சம்பாதிக்கிற கர்வமா?'

அந்த ஒரு கணத்தில், அவன் அவளை மடக்கிப் பேச்சிழக்கச் செய்ய

வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

''இன்னிக்கு முழுக்க டவுன்லயா இருந்தே?''

''ஆமா... ஏன்?''

''இல்லே, சாயந்திரம் பல்லாவரத்திலேயிருந்து திரும்பறப்போ கிண்டி ஸ்டேஷன்ல உன்னை மாதிரியே ஒரு பொண்ணைப் பார்த்தேன். நீதானாக்கும்னு நினைச்சு கிண்டியிலேயே இறங்கிட்டேன். ஆனா, நான் தேடிப் பார்த்தப்ப ஆளே இல்லை. கூட்டத்துல எங்கே போனான்னு தெரியலை.''

அவள், ஒருமுறை அவனை மிக ஆழமாகப் பார்த்தாள் - 'என்னடா என்னையே ஆழம் பார்க்கிறாயா?' என்பது போல.

''இதப் பாரு. கண்டவ பின்னாடி போற பிஸினஸ் வச்சுக்காதே. அப்புறம் உன்னால உருப்படியா ஒரு காரியம் செய்ய முடியாது.''

''நான் கண்டவ பின்னாடி போறவன் இல்லை. இறங்கிப் போனவ உன்னை மாதிரியே இருந்தா.... அதான்...''

''என்னை மாதிரியே இருந்தா, உடனே டிரெயினை விட்டு இறங்கிடறதா? ஏன்... வீட்டுக்கு வந்து பேசிக்கிறது. இப்ப என்ன தலைபோற விஷயம்?'' அவள் வெடுக்கெனக் கூறிவிட்டு நகர்ந்தாள்.

அவன், அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான். நெஞ்சுக்குள் இன்னமும் இனம் புரியாத பயம் வட்டமிட்டபடி, 'கிண்டியிலே இவ ஏன் இறங்கணும்? என்ன காரணம்?'

'இவதானா, இல்லே, இவளை மாதிரி வேற யாரோவா?'

இவளேதான். அந்த முதுகும், பின்னலும்தான் காட்டிக் கொடுக்கிறதே!'

'அட சரிதாண்டா. அப்படியே இருந்துட்டுப் போகட்டும். அதுக்காக நீ எதுக்கு இப்படி உலக்கையை முழுங்கினவன் மாதிரி திண்டாடறே? அவ எங்கேயோ போகட்டும். வரட்டும். உனக்கென்ன ஆச்சு?''

'ஏதோ இவளாவது வேலைக்குப் போய் நாலு காசு சம்பாதிக்கறா. ஒருத்தி கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சா பொறுக்காதே உங்களுக்கெல்லாம். எல்லாத்தையும் தப்பாவே அர்த்தம் பண்ணிக்கத்தானே தெரியும்? குரங்கு புத்தி!'

அவன் மிகச் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டான். மறுநாள் காலையில் எழுந்தவுடனேயே - முதல் நாள் சாருவை அத்தனை மட்டமாய் எடை போட்டதற்குப் பரிகாரமாய் அவளுக்காக ஏதாவது செய்தே தீர வேண்டும் போல அவன் உள்ளம் பரபரத்தது.

எழுந்ததும் எழுந்திருக்காததுமாகத் தட்டி மறைவுக் குளியலறைத் தொட்டியில், சாரு குளிப்பதற்காக ரகசியமாகத் தண்ணீர் இறைத்து வைத்தான்.

காமரா அறையின் ஒரு மூலையில் சாரு குவித்து வைத்திருந்த அழுக்குத்



துணிகளை சோப்புத் தூளில் ஊற வைத்தான்.

சாரு படுக்கையை விட்டு எழுந்திருந்ததும் அதற்காகவே காத்திருந்தது போல பாய்ந்து சென்று படுக்கையைச் சுற்றி வைத்தான்.

அவள் குளிக்கப் போனதும் அங்கிருந்தபடியே பெரிதாகக் கூப்பாடு போட்டாள். ''யாரு என் துணியெல்லாத்தையும் சோப்புத் தண்ணியில நனைச்சது?''

''நாங்க யாரும் உன் துணிமணியைத் தொட்டதில்லை.'' உள்ளிருந்தபடியே கல்யாணி அவளுக்கு பதில் குரல் கொடுத்தாள்.

ராஜா பதறிப் போய் விட்டான்.

'இது என்ன அவஸ்தை? நல்லது செய்தால்கூட இவள் இப்படி சத்தம் போடுகிறாளே!'

தயங்கித் தயங்கிக் குளியலறையின் தட்டி மறைப்பு வரையில் போய் மெல்லிய குரலில், ''சாரு... நான்தான் அந்தத் துணி எல்லாத்தையும் எடுத்து சோப்புத் தூளிலே ஊற வச்சேன்.'' என்றான்.

அவன் சற்றும் எதிர்பாராத விதத்தில் சாரு. ஈரம் பளபளக்க மறைவிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

ரவிக்கை இல்லாத தோள் பட்டை, கருக்கிருட்டுக் குளியலறையில், .... காலைச் சூரியன் போல் குபுக்கென மேலெழும்ப, வழுவழுத்த தோளுக்குக் கீழ் விழிகளை ஓட்டலாமா, வேண்டாமா என்கிற தர்மசங்கடத்தில் ராஜா பரிதவிக்க, நெற்றியிலிருந்து, மூக்கு நுனி வரையில் வழியும் நீரை ஒரு கையால் வழித்துவிட்டபடி, சாரு அவனை எரித்து விடுவது போல முறைத்து, ''உன்னை யாரு இந்த வேலையெல்லாம் செய்யச் சொன்னது?''

''நான்தான், வேற வேலை எதுவுமே இல்லையே. நீ எல்லாத் துணியையும் சேர்த்து வச்சுட்டு ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்கூட ரெஸ்ட் இல்லாமத் திண்டாடறேயேன்னு...''

''போதும் கரிசனம். எந்த சோப்புத் தூளை எடுத்துப் போட்டே?''

''ஏன், உன்னோட பிளாஸ்டிக் பையிலே இருந்ததே. அதைத்தான்.''

''மடையா, வாத்து மடையா, அது நான் ஸேல்ஸுக்காக வச்சிருந்த பாக்கெட்.''

''அதனால என்ன? வேற பாக்கெட் கம்பெனியிலே தர மாட்டாங்களா?''

''உம்? கம்பெனி உங்க மாமனாரோடது. கேட்ட உடனே தூக்கிக் கொடுப்பான். கொஞ்சமாவது அறிவு வேண்டாம். அவன் கணக்குக் கேட்பான் - நீ வந்து சொல்லு.''

''ஒரு பாக்கெட்தானே சாரு. தெரியாத்தனமா எடுத்துட்டேன். ஸாரி, வெரி ஸாரி...''

''உன்னை யாரு இந்த மாதிரி அதிகப்பிரசங்கித்தனமா நடந்துக்கச் சொன்னது? என் புடவை துணிமணியை தோய்ச்சுக்க எனக்குக் கையில்லையா? பெரிய இவன். கொஞ்சம் இடத்தைக் கொடுத்தாலும் மடத்தைப் புடுங்கற கேசு.''

அவள் இதற்கு மேலும் என்னென்னவோ சொல்லிக் கொண்டே போனாள். வார்த்தைகள் தெளிவாய்க் காதில் விழாதவாறு, தலையில் தண்ணீரைக் கொட்டிக் கொள்ளும் சத்தம்.

ராஜா சிறிது நேரம் தட்டியையே வெறித்தவாறு நின்றான்.

பிறகு, ஏதோ நினைவு வந்தவன் போல் தான் பிரித்த சோப்புத் தூள் பாக்கெட்டின் மேற்புறம் அச்சிட்ட எழுத்துக்களைக் கூர்ந்து பார்த்தான்.

'பரிமளா சோப்புத்தூள். ஒரு பாக்கெட் விலை ஐந்து ரூபாய் இருபத்தைந்து காசு.'

முதல் நாள் சாரு கொடுத்த இருபது ரூபாய் பணத்தில் மீதியிருக்கும் தைரியத்தில், அவசரமாய்க் கடையை நோக்கி நடையைக் கட்டினான் அவன்.

'என்ன பெரிய விஷயம்! ஏதோ தெரியாத்தனமா அந்தப் பாக்கெட்டைப் பிரிச்சுட்டேன். வேற பாக்கெட் வாங்கிக் கொடுத்துடறேன். என்னமா கத்தறா! ச்சே! இத்தனை வருஷமா இந்த சோப்பு கம்பெனியிலே வேலை பார்க்கிறா. இவ உபயோகத்துக்காக ஒரு பாக்கெட் எடுத்துட்டா, கழுத்தை சீவிப்பிடுவானா என்ன...? ரொம்பத்தான் அலட்டல்.'

அவன் மனதார அவளைத் திட்டியபடி, எதிர்ப்பட்ட கடையில் நுழைந்து எரிச்சல் மிகுந்த குரலில் கடைக்காரனிடம் ''பரிமளா சோப்புத்தூள் இருந்தா கொடுப்பா.'' என்றான்.

''என்னது... பரிமளா சோப்புத்தூளா...?''

''ஏன்... நீங்க பரிமளா சோப்புத்தூள் விற்கிறது கிடையாதா...?''

''சார், எந்த உலகத்துல இருக்கீங்க?''

கடைக்காரனின் கிண்டல் மிகுந்த கேள்வி, இவனை மேலும் உஷ்ணப்படுத்த, ''இல்லைன்னா இல்லைன்னு சொல்லிட்டுப் போயேன். நான் வேற கடையிலே பார்த்துக்கறேன். இதுல சிரிப்பு என்ன வேண்டிக்கிடக்கு?'' என்று சீறினான்.

''நான் எதுக்கு சார் சிரிக்கிறேன்? எந்தக் காலத்திலேயோ இழுத்து மூடின சோப்புக் கம்பெனிய மறுபடியும் திறக்கச் சொல்லி உங்களுக்காக வேணும்னா ஒரு பாக்கெட் வாங்கி வரலாம். ஆனா, கம்பெனி முதலாளி எங்கே இருக்கார்ன்னு அட்ரஸே தெரியாதப்ப, நான் எப்படி பரிமளா சோப்புத்தூள் வாங்கறது?''

''என்னது, இந்த சோப்புக் கம்பெனிய இழுத்து மூடிட்டாங்களா?''

''அதனாலதான் சார் நீங்க எந்த உலகத்துலே இருக்கீங்கன்னு கேட்டேன் உங்களுக்குக் கோபம் வந்திடுச்சு.''



''எத்தனை நாள் ஆச்சுப்பா இந்தக் கம்பெனி மூடி?''

''அது ஆச்சு ஒன்றரை வருஷத்துக்கு மேலே.''

ராஜா, இதற்கு மேல் அந்தக் கடைக்காரனுடன் நின்று, பேச விரும்பவில்லை. நெஞ்சுக்குள் சொல்லத் தெரியாத துக்கம் முள்ளாய் உறுத்திற்று.

'மூடின கம்பெனி சோப்புத் தூளை எடுத்துக் கொண்டு இவ ஏன் தெருத் தெருவா அலையறா?'

'ஒருவேளை - அந்தக் கம்பெனியிலே சேல்ஸ் கேர்ளா இவ சேர்ந்து, கம்பெனி நஷ்டத்துல ஓடி, இவளுக்குப் பைத்தியமே பிடிச்சுட்டதா?'

'பைத்தியத்திற்கு எவன் பணம் தருவான்? அதுவும் சுளை சுளையாய்...'

மனக் குரங்கு அங்கேயும் இங்கேயுமாகச் சுற்றி கடைசியில் பழைய முடிவுக்கே வந்து நின்றது.

'இவ ஏதோ தப்பு வழியிலதான் போறா... இதை எப்படியாவது தடுத்து நிறுத்தணும்... எப்படி?' அவன் தனக்குள் கலங்கிப் போனான்.

வீட்டுக்குள் நுழையும் போதே, சாரு எதிர்ப்பட்டாள். கஞ்சி மொட மொடப்புடன் கூடிய வாயில் புடவை, தோளில் குதிக்கும் ஹேண்ட் பேக்.

''அம்மா, நான் போயிட்டு வரேன்.''

வாசல் வரையில் வந்தவள், அப்பாவின் பக்கத்தில் ஒரு வினாடி நிற்க, ''என்னம்மா?'' என்றார் அவர்.

''இன்னிக்குச் சாயந்திரம் ரெடியா இருங்க. போய் டாக்டரைப் பார்த்துட்டு வரலாம்.''

''எதுக்கும்மா... நான் நல்லாத்தானே இருக்கேன்.''

''அதை டாக்டர் இல்லே சொல்லணும்?''

அவள் தெருவில் காலை வைத்த போது எதிரில் ராஜா வந்தான்.

''எங்கே போயிட்டு வர்றாப்பல? தம் அடிக்கவா?''

''சேச்சே, எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது.''

''இஸ் இட்? நிஜமாவா? கேட்கவே ரொம்ப சந்தோஷமாயிருக்கு.''

ராஜாவினுள் மறுபடியும் ஒரு வேகம். இவளை மடக்க வேண்டும் என்கிற வேகம். இவளுக்குள் ஒளிந்துள்ள ரகசியத்தின் நூல் முனை, தன் கையில் இருப்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்கிற வேகம்.

''கடைக்குப் போயிட்டு வரேன்.''

''எதுக்கு?''

''உன் ஹேண்ட் பேக்லேயிருந்து எடுத்த சோப்புப் பாக்கெட்டுக்குப் பதிலா, அதே பரிமளா சோப்புத்தூள் ஒரு பாக்கெட் கடையிலேயிருந்து வாங்கி வந்து, உன்கிட்டே கொடுத்துடலாமேன்னு....''

அவன் வார்த்தைகளை முடிக்காமல், அவளையே விழுங்கி விடுவது போலப் பார்த்தான்.

அவள் விக்கித்து நின்று விட்டாள். உதடுகளின் ஒரு முனை மட்டும் மிக இலேசாகத் துடிக்க, விழிகளில் இனம் தெரியாத பயம்.

எல்லாமே கொஞ்ச நேரம்தான். அதற்குள் என்னமாய்ச் சமாளித்து விட்டாள்.

''எந்தக் கடையிலே கேட்டே?''

''அதோ, அந்த முனைக் கடையிலே.''

''அந்த சோப்புக் கம்பெனி மூடி ஒன்றரை வருஷத்துக்கு மேலாகிறது என்று சொல்லியிருப்பானே?''

ராஜா, சாருவின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

''இவனுங்க எல்லாம் வெறும் சில்லறை ஆசாமிங்க. ஒழுங்கா பணம் தர மாட்டானுங்க. அதனாலேயே சில கடைகளோட ஆர்டர்ஸை நாங்களே வேண்டாம்னு ஒதுக்கிட்டோம். அவன்களுக்கெல்லாம் அதுதான் கோபம். யார் கேட்டாலும் 'இல்லை. கம்பெனியே மூடியாச்சு'ன்னு சொல்லிட்டு, வேற சோப்பைக் கொடுக்கிறானுங்க. சரி விடு. நான் கம்பெனியிலே சொல்லி வேற பாக்கெட் வாங்கிக்கறேன். நீ போய் உன் வேலையைப் பார் போ....''

அவள் இதற்கு மேலும் அங்கு நிற்காமல் பரபரவென நடையைக் கட்ட, அவன் இவள் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இவள் எதையோ மறைக்க, இந்தச் சப்பைக் கட்டு கட்டுகிறாள் என்பது அப்பட்டமாகப் புரிந்தது.

ஆனால் அது என்ன?

ஒன்று மாத்திரம் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம். இவள் எப்படி சம்பாதிக்கிறாளோ, என்னமோ, இவளால்தான் இத்தனை பெரிய குடும்பமே, சோற்றுக் கவலையில்லாமல் இருக்கிறது. இதுமட்டும் மறுக்க முடியாத உண்மை.

ஒருவேளை, இவளுடைய ரகசியங்கள் அத்தனையும் குமாருக்குத் தெரிந்திருக்குமோ? அதனால்தான் அவன் தங்கையைப் பற்றிய பேச்சை எடுத்தாலே எரிந்து விழுகிறானோ?

**சா**ரு வேலைக்குப் போய்விட, வீடு நிம்மதியாய், சுதந்திரமாய் இயங்கத் தொடங்கிற்று.

குமாரும், கல்யாணியும் சாப்பிட்டாகி விட்டது. குமாருக்கு சாப்பாடு முடிந்த பின் ஒரு நெடுந் தூக்கம் போட்டாக வேண்டும். வாயில் போட்ட சோறு வயிற்றுக்குப் போய்ச் சேருவதற்குள் கிணற்றடியோரமாய் நின்று சிகரெட்டைப் பற்ற வைத்து, நாலைந்து இழுப்புகள் இழுத்துவிட்டுப் படுக்கையில் வந்து



விழுந்து விடுவான்.

கல்யாணிக்கும் அதுபோல தூங்க ஆசைதான். குழந்தைகள் விடாது. இருந்தாலும் படுத்தபடியே அம்மாவுக்கும் அத்தைக்கும் நடக்கும் பேச்சுவார்த்தைகளைக் கவனித்துக் கொண்டிருப்பாள். இல்லாவிட்டால் குமாரிடம், சாருவைப் பற்றியோ, அன்றைய சமையலைப் பற்றியோ திட்டிக் கொண்டிருப்பாள்.

கல்யாணியிடம் ஒரு குண விசேஷம். புருஷனைப் பிரிந்து பிறந்தகத்தில் உட்கார்ந்திருந்தாலும் ஒரு நாளும் புக்ககத்தின் செல்வாக்கை விட்டுக் கொடுக்க மாட்டாள். தான் என்னவோ, பாலே குடித்து, பன்னீரிலேயே கை கழுவுவது போலத்தான் எண்ணம் அவளுக்கு. என்னதான் பிறந்தகமானாலும் இந்த வீட்டில் தான் தங்கியிருப்பது தன் கௌரவத்துக்கே இழுக்கு என்கிற மாதிரிதான் பேசுவாள்.

''என்னதான் சொல்லு... அங்கே, என் புக்ககத்துலே கத்தரிக்காய் கறி பண்ணுவாங்க பாரு... அது ஒசத்தி ஒசத்திதான். தட்டுல வச்சுக்கறப்பவே நாக்குல நீர் ஊறும். இன்னிக்கும்தான் கத்தரிக்காய் கறிய நம்ம அம்மா பண்ணியிருக்காளே! எங்கே, கொஞ்சம் எண்ணெயைப் பசையா விட்டாத்தான் இந்த ராட்சசி கத்தறாளே.''

''அவ ஏன் கத்த மாட்டா? அவளுக்கு மாத்திரம் ஸ்பெஷலா பண்ணிப் போட்டா போதும். அம்மாவுக்கு நமக்கெல்லாம் சோறே அனாவசியம்னு நினைக்கிறவ அவ. பேசாம, ஜெயில் கைதிகளுக்கெல்லாம் களி உருண்டை போடுவாங்களாமே அது மாதிரி போட்டுடும்மா நாளையிலேருந்து'' குமாரின் இடக்கான பேச்சு இது.

''ஏண்டா, அப்படியெல்லாம் சொல்றே? உனக்கு இவ சோறு போட்டாத்தானா? நான் போட மாட்டேனா? இந்த அம்மா மாத்திரம் உங்க அத்திம்பேர் கேட்ட சாமானை ஒழுங்கா வாங்கித் தந்திருந்தா இன்னிக்கு நான் உன்னையும் அழைச்சிட்டுப் போய் உனக்கு வேலை கிடைக்கிற வரைக்கும், என்னோட இருக்க வச்சிருப்பேன். உங்க அத்திம்பேர் பணம் காசு விஷயத்துலதான் இப்படி கண்டிப்பா இருப்பாரே தவிர, மனசு வெள்ளை தெரியுமோ? வீட்டுக்கு யார் வந்தாலும் டிபனோ, சாப்பாடோ போட்டுத்தான் அனுப்பணும்னு சொல்வார். அடியம்மா... தினமும் கல்யாணம் பட்ட பாடு படும்!'' கல்யாணி சகட்டுமேனிக்குப் புளுகினாள்.

குமாருக்கும் தன் அக்காவின் பேச்சில் எத்தனை சதவிகிதம் உண்மை இருக்கிறது என்பது தெரியும்தான். இருந்தாலும் எல்லைக் காட்டுப் பிடாரிக்குக் கொல்லைக் காட்டு முனியே எத்தனையோ விதத்தில் தேவலை என்கிற எண்ணம். அதனால் அக்காவின் பேச்சுக்கு 'ஆமாம்' போட்டுக் கொண்டிருந்தான்.

மேலும், சாருவைக் கரித்துக் கொட்டி வசைபாடும் கட்சிக்குக் கல்யாணியை விட்டால் அவனுக்கு வேறு ஆளில்லை. தாய் பங்கஜம், ஒரோரு சமயத்தில் மகனின் கட்சியில் பேசுவாள்தான். இருந்தாலும் நிலையான புத்தியில்லை. அரசியல்வாதியை விடவும் மோசமானவள். இன்று, சாரு அம்மாவுக்காக ஒரு தலைவலி தைல பாட்டில் வாங்கி வந்தால் உடனேயே உருகிவிடும் சுபாவம்.

'பாவம் அவதான் என்ன செய்வா? ஆபீசிலே காட்ட முடியாத எரிச்சலை இங்கே வந்து கொட்டறா' என்பாள்.

விசாலம் இதில் எந்தக் கட்சியும் இல்லை. எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி என்று விச்ராந்தியாக இருப்பவள்.

இவர்கள் அடித்துக் கொண்டால் யார் கை ஓங்குகிறதோ அந்தப் பக்கம் இருப்பாள். சாரு வீட்டில் இல்லாதபோது கல்யாணியிடம், 'இந்தப் பெண் ஆனாலும் எகிறிக் குதிக்கிறது. ஆயிரம்தான் இருந்தாலும், கூடப் பொறந்த அக்காவாச்சே என்கிற அனுதாபம் வேண்டாமோ? பாவம். நீயாக இருக்கக் கொண்டு இத்தனை வார்த்தைக்கும் வாயைத் திறக்காம இருக்கே. உன் பொறுமைக்கும் நிதானத்துக்கும் உன்னை வச்சுக் குடித்தனம் பண்ண உன் புருஷனுக்குக் கொடுத்து வைக்கவில்லை.' என்று தாளம் போடுவாள்.

இதுவே, சாரு இரவு நேரம் கழித்து வந்து சாப்பிட உட்காரும் போது நிலைமை தலைகீழாகி விடும்.

'பங்கஜம். நீ போய்ப் படுத்துக்கோ. என் மருமகளுக்கு நான் சாதம் போடுகிறேன்.' என்று வரிந்து கட்டிக் கொண்டு சாருவுக்குச் சாப்பாடு பரிமாற வருவாள்.

'ஏண்டியம்மா மூஞ்சி இத்தனை சோர்ந்து போயிருக்கே? மதியானம் ஏதாவது சாப்பிட்டியா இல்லையா?' என்று பரிவாய் விசாரிப்பாள்.

'இந்த வயசுல ஒவ்வொரு பொண்ணும் கவலையே இல்லாம திரியறதுகள். குருவி தலையிலே பனங்காய் வச்சாப்போல உனக்குத்தான் எத்தனை பொறுப்பு' என்று பெருமூச்சு விடுவாள்.

'உனக்கு இருக்கிற சுமை போதாதுன்னு நாங்க ரெண்டு பேரும் வேற... சோத்துக்குப் பாரமா...' என்று தன்னைத்தானே நொந்து கொள்வாள்.

'நீ. இத்தனை பாடு படறதுக்கு. இந்தக் குமாரும், கல்யாணியும் கொஞ்சமாவது பொறுப்புத் தெரிஞ்சு நடந்துக்கலாம். குழந்தை உன்னோட சிரமம் தெரியாம இப்படி ரெண்டும் பொறுப்பில்லாம திரியறதுகளே.' என்று அங்கலாய்ப்பாள்.

இதோ, இப்பொழுதுகூட கல்யாணி, குமார் இருவரது பேச்சுக்கும் 'ஆமாம் சாமி' போட்டுக் கொண்டுதான் இருந்தாள்.



''வேலைக்குப் போனா... அதுக்காக இப்படித்தான் பெரியவங்க சின்னவங்க வித்தியாசம் தெரியாம எடுத்தெறிஞ்சு பேசணுமா? பணமும், அந்தஸ்தும் இன்னிக்கு வரும். நாளைக்குப் போகும். அதுக்காக கூடப் பொறந்தவங்களை நாக்கில நரம்பில்லாமல் பேசிடறதா? நாளைக்கே நம்ம குமார் ஆயிரம் ஆயிரமாச் சம்பாதிக்கத்தான் போறான். கல்யாணிய அவ புருஷன் அழைச்சுக்கத்தான் போறான். முப்பது வருஷம் வாழ்ந்தவங்களும் இல்லே... முப்பது வருஷம் தாழ்ந்தவங்களும் இல்லே. நாளைக்கே இவ மணையிலே உட்கார்ந்தா சொந்தபந்தம் வேண்டாமோ? நல்லது பொல்லாததுக்கு உற்றார் உறவினர் வேண்டாமோ? எல்லாம் இந்த ரங்கு கொடுத்த எடம்.''

இப்படி நீட்டி முழக்கிச் சொல்லிக் கொண்டிருந்தவள், ராஜாவைப் பார்த்ததும் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள். அவளுக்கு மகனிடம் கொஞ்சம் பயம் உண்டு. ஒரு சமயம் இல்லாவிட்டால் மறு சமயம் ராஜா நறுக்கென்று தாயைக் கடிந்து கொண்டிருக்கிறான். அதுவும் ரகசியமாய், தனியாய், புழக்கடைப் பக்கத்தில் நிறுத்தி வைத்து.

''இதப்பாரு, யாரோ என்னவோ பண்ணிக்கட்டும். உன்னை எத்தனை தடவை - இந்த மாதிரி - ஆளுக்குத் தகுந்த மாதிரி ஜால்ரா போடாதேன்னு சொல்லியிருக்கேன். உன் புத்தி உன்னை விட்டுப் போகாதே.''

''நான் என்னடா சொல்லிட்டேன்? யார் பக்கம் நியாயம் இருக்கோ, அதை எடுத்துச் சொல்லக் கூடாதா?''

''ச...: ரொம்பவும் பேசாதேம்மா. இன்னிக்கு நாம திங்கறது அந்தப் பொண்ணு சாரு சம்பாதிச்சுப் போடறதுல - கொஞ்ச நாள் முன்னாடி நாம ஒரு வேளை சோத்துக்கே லாட்டரி அடிச்சிட்டிருந்ததை அதுக்குள்ளே மறந்துடாதே. அப்போ, இந்த வாய், சோத்துக்கு மட்டும்தான் அலைஞ்சது. இன்னிக்கு ஒரு பருக்கை உள்ளே போன உடனே, இதே வாய் வம்புக்கு எப்படி அலைகிறது பார்த்தியா?''

''சொந்தத் தம்பி குழந்தைகளுக்கு நல்லது கெட்டதை நான் சொல்லாம வேற யார் சொல்றது?''

''ஆமா... பெரிய அக்கா தம்பி உறவு. இத்தனை நாள் இந்த உறவு எங்கே போயிருந்ததாம்? கொஞ்சம் இடத்தைக் கொடுத்தா மடத்தைப் பிடுங்கறயே? அவங்க யாராவது உன் அபிப்பிராயத்தைக் கேட்டாங்களா? இன்னொரு தரம் நீ இப்படிப் பேசினே... நான் மறுபடியும் உன்னை இழுத்துட்டு ஊருக்கே போயிடுவேன்.''

ராஜாவின் வார்த்தைகள் அவளது நாவை ஓரளவு கட்டிப் போடும்.

ராஜா அம்மாவைக் கடுமையாகப் பார்த்துவிட்டு, பின்பக்கத் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தான்.

தாழ்வார முனையில் காலையில் அவன் பிரித்து உபயோகித்த சோப்புத் தூளின் வெற்று உறை. அதை எடுத்து, விரலால் நீவியபடி கிணற்றடி வெய்யிலை வெறித்துக் கொண்டிருந்தான்.

'இந்த சோப்புக் கம்பெனியிலே வேலை இல்லைன்னா இந்த வெய்யில்லே இவ எங்கே அலையறாள்?'

நெஞ்சுக்குள் துக்கம் பந்தாக அடைத்தது.

'இவள் தறிகெட்டுப் போனால் தனக்கு எதற்கு இத்தனை துக்கம் உண்டாகிறது?'

'இவளிடம், தான் எதிர்பார்ப்பதுதான் என்ன?'

'இந்த மாதிரியொரு நெருக்கம் எத்தனை நாளாக?'

'அப்படியே, இவள் வழி தவறிய பாதையில் போயிருந்தாலும், தன்னால் என்ன செய்ய முடியும்?'

அந்தக் கணப் பொழுதில் உள் மனத்தில் சாருவின் மீதிருந்த பற்றும் பாசமும் விஸ்வரூபம் எடுக்க... விழிகளில் நீர் திரையிட்டது!

'சாரு....'

'இவளோட, இவ துணையோட, என் வாழ்க்கை தொடர்ந்தா என்னமாயிருக்கும்?'

'நல்லாத்தான் இருக்கும். கொஞ்சம் காதலும், கொஞ்சம் சண்டையுமா, கொஞ்சம் பணிவும், கொஞ்சம் எகிறலுமா... நான் வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சு ஆரம்பிச்சவுடனேயே, இவ கழுத்துல தாலியக் கட்டிடணும்.'

'என்னமோ எல்லாம் உன் கையில இருக்கிற மாதிரிப் பேசறயே... அவ சம்மதிக்கலைன்னா என்ன செய்வே.'

'தூக்கிட்டுப் போய்த் தாலி கட்டுவேன்.'

'தாலி கட்டி, குடித்தனம் பண்ணக் கூடிய நிலைமையில் அவ இல்லாம இருந்தா...' இந்தக் கேள்வி வயிற்றில் ஜனித்து, நெஞ்சில் புரண்டு, மூளையைப் பலமாகத் தாக்க, மறுநாள் இதுபற்றி அவளிடம் துணிந்து வெளிப்படையாகப் பேசிவிடத் தீர்மானித்தான் அவன்.

## 5

**மா**ம்பலம் ஸ்டேஷனில் சாருவுக்கு முன்னால் போய்க் காத்துக் கொண்டிருந்தான் ராஜா. அவளுடன் மனம் விட்டுப் பேச வேண்டும் எனத் தீர்மானித்தானே தவிர, ஐந்தாறு நாட்கள் பழக்கத்தில், அத்தனை நெருங்கி, அவ்வளவு பெரிய விஷயத்தை எப்படிக் கேட்பது என்று தடுமாறத்தான் செய்தான்.



'எப்படிக் கேட்பது...?'

'நீ யார் என் விஷயத்தில் தலையிட?' என்று அவள் கேட்டு விட்டால் முகத்தை எங்கு கொண்டு வைத்துக் கொள்வது?'

அவன் நினைத்து நினைத்துக் குழம்பிப் போனான்.

சாரு சாப்பிட உட்கார்ந்த போதே சத்தமிடாமல் கிளம்பி ஸ்டேஷனைப் பார்க்க நடையைக் கட்டி விட்டான் அவன்.

ஒவ்வொரு பெண்ணையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு, ஒவ்வொரு வண்டியையும் வழியனுப்பிக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் காத்திருந்தபின், தூரத்தில் அவள் தோளில் மாட்டிய பையும் நிமிர்ந்த நடையுமாய், கஞ்சி மொடமொடப்பில் விறைத்த வெளிர் நீல நிறப் புடவைத் தலைப்பு மேகத்தை இழுத்து வைத்து இஸ்திரி போட்டாற் போலிருந்தது.

சற்றுத் தொலைவில் வரும் போதே, இவனை இனம் கண்டு கொண்ட அவளது விழிகள், கேள்விகளைத் தொடுத்தது. ''என்ன இந்த நேரத்துல? ஆபீசுக்கும் காலேஜுக்கும் பறக்கற பொண்களை ஸைட் அடிக்க வந்தியா?''

''இல்லே, உன் கூடக் கொஞ்சம் பேசணும்னுதான் வந்தேன். ஸைட் அடிக்கத் தெரியாதுன்னு பொய் சொல்ல நான் பிரியப்படலை. ஸைட் அடிப்பேன். நிறையப் பெண்களை அடிச்சுமிருக்கேன். இங்கேயில்லே. எங்க ஊர்லே. காவேரிக் கரையில. அப்ப எல்லாம் எனக்குக் கவலைன்னா என்னதென்று தெரியாத காலம். இப்ப என்னால முடியாது. ஏன்னா, அதை விடவும் முக்கியமான பிரச்னைகள் எனக்கு இருக்கு.''

அவளது இமைகள் விசிறியாய் விரிந்தது. ''என்ன இன்னிக்கு.... நிறையப் பேசறே...''

''இன்னும் நிறையப் பேசணும் சாரு. அதுக்காகத்தான் இங்கே வந்தேன்.''

''என்ன விஷயமா இருந்தாலும், சாயந்திரம் பேசிப்போமே. எனக்கு ஏற்கனவே ஆபீசுக்கு லேட்டாயிடுச்சு!''

''எனக்காக, நீ ஆபீசுக்கு லேட்டாப் போக வேண்டாம். ரயில்லேயே பேசிடுவோம். நான் உன் கூட ஆபீஸ் மட்டும் வரேன்.''

அவனது வார்த்தைகள் அவளை மிகப் பலமாகத் தாக்க - ஒரு கணம் நிலை குலைந்து போனாள் அவள்.

''ஆபீசுக்கெல்லாம் நீ வரக் கூடாது.''

''ஏன்?''

''என்னோட ஒர்க் பண்ணற பொண்ணுங்க - ஏற்கனவே வம்புக்காரிங்க. இப்ப நீ என் கூட வந்தா, நம்ம மானத்தை வாங்கிடுவாங்க.''

''நான் ஆபீஸ் வரைக்கும் வரலை. நீ இறங்கற ஸ்டேஷன்லேயே நானும்

இறங்கிக்கறேன். நீ ஆபீசுக்குப் போ. நான் மறுபடியும் வீட்டுக்குத் திரும்பிடறேன்.'' அவன் பிடிவாதமாகச் சொன்னான்.

அவள், அவனது முகத்தை, கண்களைத் தீவிரமாய்ப் பார்த்தாள். வேலைக்குப் போகும் தாயார்க்காரியை விடாமல் சுற்றும் கைக்குழந்தையைப் போல ராஜாவின் முகத்தில், முரட்டுத்தனமான பிடிவாதம். ''சரி, வா.''

வண்டியில் நெரிசல் தாங்கவில்லை. ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்க முடியாதபடி நெரிசல்.

பார்க் ஸ்டேஷனில் இறங்கும் வரையில் இதே நிலைதான். இறங்கியவுடனேயே அவள் பரபரப்புடன், ''நான் போகணும்.... நேரமாச்சு.'' என்றாள்.

''நான் உன்னோட பேசியே ஆகணும் சாரு.''

''உன்னோட பேசிட்டிருந்தா என் வேலை என்ன ஆறது? என்ன சொல்லணுமோ, சட்டுபுட்டுனு சொல்லித் தொலையேன்.''

''அந்த பெஞ்சுல ரெண்டு நிமிஷம் உட்காரலாமா? ப்ளீஸ்... இந்தக் கும்பல்லே எப்படிப் பேசறது...''

அவன் கெஞ்ச, அவள் மளமளவெனப் போய் பிளாட்பார ஓரமாய்ப் போட்டிருந்த பெஞ்சில் அமர்ந்து கொண்டு, ''சொல்லு,'' என்றாள்.

''அது வந்து...''

''ஏன் தயங்கறே? நீ என்னை லவ் பண்ணறயா?''

''சாரு...''

''வேற என்ன சொல்லப் போறே? இந்த வயசுல, இந்த மாதிரிச் சூழ்நிலையிலே ஒரு ஆம்பிளை இதைத்தான் சொல்வான். உன் கேள்வி அதுதான்னா இதோ பதில். என் மனசுல இந்த அசட்டுப் பிசட்டு நினைப்பெல்லாம் கிடையாது. என் பின்னால சுத்தறதுக்குப் பதிலா ஒரு வேலையைத் தேடிக்கற வழியைப் பாரு.''

அவள் எழுந்திருக்க, அவன் சுற்றுப்புறத்தை மறந்து அவளது கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தான்.

''நான் உன்னைக் கேட்கப் போற கேள்வி அது இல்லே சாரு.''

''பின்னே?''

''நீ எங்கே வேலை பார்க்கறே?''

''அதான் சொன்னேனே. பரிமளா சோப்பு கம்பெனி... ஹெட் ஆபீசுல.''

''அது எங்கே இருக்கு?''

''ஏன்... இங்கேதான். பார்க் டவுன்லே.''

''அப்படியொரு சோப்புக் கம்பெனியே இல்லைங்கறேன் நான். நீ பொய் சொல்றே.''



''நான் எதுக்குப் பொய் சொல்லணும்?''

''எதுக்கோ... இப்ப எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்.''

''இதுல மறைக்க என்ன இருக்கு? நான் அந்தக் கம்பெனியிலேதான் ஒர்க் பண்றேன்.''

''பொய் சொன்னா பளார்னு அறைவேன்.''

''நீ யார் என்னை அறைய? உனக்கு என் வீட்டுல இடம் கொடுத்ததே தப்பாப் போச்சு.''

''சாரு, உன் வீட்டுல, நான் ரொம்ப ஆனந்தமா, நீ போடற சோத்தைத் திங்கறதா நினைக்க வேண்டாம். ரொம்ப அவமானத்தோட வெட்கப் பட்டுக் கொண்டு இருக்கேன்.''

''யார் இருக்கச் சொன்னாங்க - அப்படியாவது? போ. எங்கேயாவது போய்த் தொலை. போறப்ப உன் அம்மாவையும் இழுத்துட்டுப் போ. ரெண்டு ஆழாக்கு அரிசி மிச்சம். அரை லிட்டர் பால் மிச்சம்.''

''நிச்சயமாப் போகத்தான் போறேன். ஆனா, அதுக்கு முன்னாலே, நீ எப்படிச் சம்பாதிக்கறேங்கறதை உன் வாயாலேயே கேட்டுத் தெரிஞ்சிட்டுத்தான் போகப் போறேன். அதை மாத்திரம் சொல்லிடு.''

''நான் எப்படிச் சம்பாதிச்சா உனக்கென்ன ா?''

அவள் திடீரெனக் குரலை உயர்த்த, போக்குவரத்து ஒரு கணம் ஸ்தம்பிக்க, இதுமாதிரியான சந்தர்ப்பங்களுக்காகவே காத்திருக்கும் பிளாட்பார பரட்டைத் தலை ஒருவன் பாய்ந்து இவர்கள் அருகில் வந்தான்.

''இன்னாம்மே. எதுனாச்சும் ராங் காட்டறானா? ஏண்டா டேய்... பேமானி, பொட்டச்சி கையில இன்னாடா பேச்சு? நீ இந்தப் பேட்டைக்குப் புச்சா?''

கலர் லுங்கியை மடித்துக் கட்டி, ஆரவாரத்துடன் அவன் ஆரம்பிக்க, சிதறிய மைசூர்பாகுத் தூளுக்குப் போட்டி போடும் எறும்புக் கூட்டம் போல, திட்டுத் திட்டாய் ஜனங்கள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவரு, எனக்கு வேண்டியவருதான்.''

சாரு பரட்டைத் தலையிடமிருந்து ராஜாவை விடுவித்து, கைப்பிடியாக அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

''சாத்தான்... லவ் மேட்டர் போல இருக்கு...''

இவர்களுக்குப் பின்னால் எழுந்தது 'ஓ'வென்ற சிரிப்பலை; மட்டரகமான விமரிசனங்கள்.

ஸ்டேஷனுக்கு வெளியே வந்தவள், நெரிசல் அதிகமில்லாத, ஆனால் சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைத்த சந்து முனையொன்றில் வந்துதான் நின்றாள். ''என்னைப் பத்தி - அதுவும் என்னோட எதிர்கால வாழ்க்கையைப் பத்தி

உனக்கு இருக்கற இந்த அக்கறை, எங்க அண்ணன் குமாருக்கு இருந்திருந்தா, நான் இப்படியொரு தொழில்லே இறங்கியிருக்க மாட்டேன் ராஜா.''

அவள் நின்ற இடத்திலேயே உதட்டை நெளித்துப் பெரிதாய் அழத் தொடங்க, ஒரு கணம் செய்வதறியாமல் திகைத்துப் போனான் ராஜா. ''தெருவுல நின்னுட்டு அழாதே... வா எங்கேயாவது ஒரு ஓட்டல்லே - ஃபேமிலி ரூம்லே போய் உட்காரலாம்.''

அவன் அவளைச் சமாதானப்படுத்த, இருவருமாய் மிகச் சாதாரணமான நடுத்தர ஓட்டல் ஒன்றின் குடும்ப அறைக்குள் நுழைந்து வெளிச்சமேயில்லாத- புகை படிந்த சுவர் மூலை மேசையில் அமர்ந்தனர்.

''சாரு, ரெண்டு காபி சொல்லட்டுமா?''

''உம்.''

''எங்கிட்ட சில்லறை இல்லே. நேத்து என் கிட்டயிருந்த மீதி ரூபாயைக் குமார் ஏதோ போஸ்டல் ஆர்டர் வாங்கணும்னு பிடுங்கிக்கிட்டான். இருந்த காசில டவுனுக்கு டிக்கெட் வாங்கிட்டேன். இப்ப திரும்பிப் போகக் கூட என் கிட்ட சில்லறை இல்லே.''

''பரவாயில்லே. நான் தரேன். என்கிட்ட இருக்கு.''

அவன் அவளது வார்த்தைகளில் தலை குனிந்தான்.

''ராஜா... நீ நினைக்கறாப்பல நான் என் உடம்பை வித்து, சம்பாதிக்கலை. போதுமா?''

அவளுடைய இந்த வார்த்தைகள் அவனைத் தேனில் குளிப்பாட்ட, அந்த அரையிருட்டில் அவளது முகத்தை ஒருவிதப் பரவசத்துடன் பார்த்தான் அவன்.

''தாங்க் யூ... தாங்க் யூ சாரு...''

''இரு. ஆனா நான் எப்படிச் சம்பாதிக்கறேங்கறது தெரிஞ்சா, உன்னோட நன்றியைத் திரும்ப வாபஸ் வாங்கிக்க வேண்டியிருக்கும்.''

''எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலையில்லே சாரு. நீ சொன்ன அந்த ஒரு வார்த்தையே போதும்.''

அவன் உணர்ச்சி மேலீட்டால் விழிக்கடையில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

''ஆனா... நான் சொல்ல வந்ததை சொல்லித்தானே ஆகணும்? எனக்கும் இந்த மாதிரி மனசுவிட்டுப் பேச யார் இருக்காங்க? சொல்லு.''

அவன் பரிவாய்ப் புன்னகைத்தான். ''பேசலாம் சாரு. நிதானமாய்ப் பேசலாம். ஏற்கெனவே நேரமாச்சு. நீ ஆபீசுக்குப் போற வழியைப் பாரு.''

''ஆபீசே இல்லையே ர்ராஜா.''

''என்னது!''



''ஆமா... நிஜமாவே எனக்கு ஆபீஸ்னு ஒண்ணு கிடையாவே கிடையாது.''

''வேற... வேற... எப்படி சாரு சம்பாதிக்கறே?''

''திருடி... பிக்பாக்கெட் அடிச்சு...''

'ஆ' வென வாய் பிளந்தான் ராஜா. மண்டைக்குள் எரிமலை வெடித்து, தீக் கங்குகள் நாலாபுறமாய் சிதறியது. ஓட்டல் அறை இருட்டே புதை குழியாகி, அதில் மீள முடியாமல் அவன் அமுங்கிப் போய் விட்ட மாதிரி இருந்தது.

''விளையாடறயா சாரு?''

''விளையாட்டா! எதுல விளையாடறதுங்கற விவஸ்தை இல்லாதவளா நான்? உண்மையைத்தான் சொல்றேன். தினமும் எனக்கு இதுதான் வேலையான்னு கேட்காதே. ஒண்ணாந் தேதியிலே இருந்து பத்தாம் தேதி வரைக்கும் எனக்கு இதுதான் தொழில். பத்தாம் தேதிக்கு மேலே செஞ்ச தப்புக்குப் பிராயச்சிதம்.''

''பிராயச்சித்தமா?''

''ஆமா, அதெல்லாம் பெரிய கதை.''

அவள் மிக நீளமாய்ப் பெருமூச்செறிந்தாள். அவன் படபடக்கும் இதயத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தான் முதன் முதலாய் இந்தத் தொழிலில் இறங்கிய விதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் விவரித்தாள்: ''முதல்லே... பி.யூ.சி. மட்டுமே பாஸ் பண்ணியிருந்த எனக்கு எங்கேயும் வேலை கிடைக்கலை ராஜா. அப்ப, வீட்டு நிலைமை ரொம்ப மோசம். அப்பா படுத்த படுக்கையாகக் கிடந்தார். கல்யாணி பிரசவத்துக்காக - அவளோட முதல் குழந்தை பிரசவத்துக்காக - இங்கே வந்திருந்தா.''

ராஜா அவள் சொல்வதைக் கேட்டபடி அவளுடன் ஓட்டலை விட்டு வெளியே நடந்தான். மெதுவாய், பொடி நடையாய் நடந்து - தீவுத் திடலைத் தாண்டி, கடற்கரையோரமாய் நடந்து ராணி மேரிக் கல்லூரிக்கு எதிர்த்தாற் போல் தழைந்து வளர்ந்திருந்த கல்யாண முருங்கை மரத்தடியில் அமர்ந்தான்.

அவள், 'ஆயிரத்தொரு இரவுகள்' கதைகளைச் சொன்ன மந்திரி குமாரி மாதிரி, அவனருகில் மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

''நிறைய இடத்துலே வேலை தேடி அலைஞ்சிருக்கேன். அப்பல்லாம் அம்மா நாலு இடத்துல சமைச்சு அதிகப்படிக் காரியங்கள் செஞ்சு கொடுக்கப் போவா. நானும் கூட ஒத்தாசைக்காகப் போவேன். எல்லாம் பெரிய இடம். அம்மா, ஒவ்வொரு வீட்டு மாமிகள் கிட்டயும் கெஞ்சுவா...''

அவள் அந்த நாட்களைத் தன் மனக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினாள்...

''மாமி... உங்களவர் கிட்ட சொல்லி எங்க குமாருக்கு ஒரு வேலை வாங்கித் தாங்களேன். உங்களுக்குப் புண்ணியமாப் போகும்...''

''அவன்தான் எந்த வேலையிலேயும் நிலைச்சு நிக்கமாட்டான் போல இருக்கே! முதல்லே நீங்க அவனை இங்கே அனுப்பி வைக்கறதா சொன்னீங்களே வந்தானா?''

''நான் அன்னிக்கே அனுப்பினேன் மாமி.''

''நீங்க அனுப்பியிருப்பீங்க. அவன் வந்தாத்தானே? உங்களுக்கும் எனக்கும் மாத்திரம்தான் அக்கறையா? அவனுக்கு அந்தப் பொறுப்பு வேண்டாமோ? எங்க அகத்துல அவர் கேட்கறார். 'ஏண்டி, என்னமோ அந்த அம்மாவோட பிள்ளை வருவான்... அப்படி இப்படின்னியே, ஆளையே காணுமே? இப்பவே இப்படி இருக்கிறவன், என்னத்தை வெட்டி முறிக்கப் போறான்?'னு கேட்கறார். நான் என்ன பதிலைச் சொல்றது?''

''நான் வேணா, அந்த வேலைய ஏத்துக்கறேன் மாமி.'' - சாரு

''நீயா?''

அந்த அம்மாள் சிரித்தாள்.

''அவன் பின்னாடி ஒரு டிகிரி பட்டம் இருக்கு. உனக்கு என்ன இருக்கு?''

அந்த நேரத்தில் அவளின் வார்த்தைகள் சாருவின் நெஞ்சில் 'சுருக்'கெனத் தைத்தாலும் வேலை தேடித் தேடிச் சலித்தபோது அந்த வார்த்தை எத்தனை நிஜம் என்பதை உணர்ந்தாள்.

இறுதியில் தன் சினேகிதியின் மூலமாகப் பரிமளா சோப்பு கம்பெனியில் ஒரு வேலை கிடைத்தது.

சிரமமான வேலைதான். பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்தாள். தெருத் தெருவாக - வீடு வீடாக சோப்புத் தூளை எடுத்துக் கொண்டு சுற்ற வேண்டும். ஒன்றுமே வருமானம் இல்லாததற்கு, ஏதோ இந்த வேலை ஒரு பொழுது அரை வயிற்றுக் கஞ்சிக்காவது போதுமானதாக இருந்ததே தவிர, இதில்தான் எத்தனை பேச்சுக்களை அவள் கேட்க வேண்டியிருந்தது!

''சோப்புத் தூளா... அதெல்லாம் ஒண்ணும் வேணாம். ரூபாயைக் கொட்டிக் கொடுத்து வாங்கற டிடர்ஜெண்ட் வில்லைங்களே ஒண்ணும் வெளுக்கறதில்லே. இதுதான் வெளுக்கப் போறதாக்கும்!''

''இந்தாம்மா. இப்படித்தான் பகல் நேரத்துல - தூங்கிட்டிருக்கிற குழந்தை அலறிட்டு எழுந்திருக்கிறமாதிரி - காலிங்பெல்லை



அழுத்தறதா? சோப்பும் வேணாம். ஒண்ணும் வேணாம். போ. போ.''

''என்ன பொண்ணு. சோப்புத் தூளா? நல்லா வெளுக்குமா? அங்கியே நின்னுகிட்டுப் பேசினா எப்படி? இப்படி உள்ளார வந்து உட்காரு. என்ன பார்க்கறே? இந்த வீட்டு அம்மா எங்கேன்னா? இங்கே அய்யாதான் அம்மா. அவ லேடீஸ் கிளப்புக்கு போயிருக்கா. இன்னிக்கு ஏதோ சௌந்தர்ய லஹரி - சுலோக கிளாஸாம். யாருக்கு வேணும் சுலோகமும் இன்னொண்ணும்? என்ன சாப்பிடறே? லெமன் ஜூஸ் தரட்டுமா?''

''ஏய், அந்த சோப்புத் தூள் விக்கிற பொண்ணு வர்றதுக்குள்ள கேட்டப் பூட்டு.... தினம் இதே ரோதனையாப் போச்சு. மதியான நேரத்துல அக்கடான்னு படுக்க முடியலை... சோப்புன்னும், பவுடர்ன்னும் தினமும் அஞ்சாறு பேர் வந்திட்டு, போற நேரத்துலே கேட்டைத் திறந்தே வச்சிட்டுப் போயிட வேண்டியது. செடியெல்லாத்தையம் ஆடு மேயுது.''

''அட, இது பரவாயில்லே! நேத்து ஒருத்தி, இப்படித்தான் எங்க தெருவுக்கு வந்தா. அடுத்த வீட்டுக்காரி கிட்ட பேச்சுக் கொடுத்திட்டு, குடிக்கத் தண்ணி கேட்டிருக்கா. அந்த மனுஷி ஒரு அப்பாவி. இவளைக் கூடத்துல உட்கார்த்தி வச்சிட்டு. உள்ளே போய்த் தண்ணி கொண்டு வர்றதுக்குள்ளே கூடத்திலே இருந்த பாக்கெட் டிரான்சிஸ்டரை அமுக்கிட்டா அவ... தண்ணியக் குடிச்சிட்டு அவ போய் ரொம்ப நேரத்துக்குப் பிறகுதான் இவளுக்குத் திருட்டுப் போன விஷயமே தெரிஞ்சிருக்கு.''

''உன் பேரென்ன? சாருவா! நல்லாயிருக்கே. சினிமாவுல நடிக்கறயா? நான் சான்ஸ் வாங்கித் தரேன். உனக்கு ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபேஸ் கட்.''

''சோப்புத் தூள் மட்டும் தான் விக்கறயாக்கும்?''

எத்தனை வார்த்தைகள்... அத்தனையும் சகித்துக் கொண்டு. அவள் இந்த வேலையை விடாமல், குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தாளே, அது எதற்காக? இந்தக் குடும்பத்துக்காக.

இவள் விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாலும், கிளையே முறிந்து தரையில் விழுந்து விட்டதே, அவள் என்ன செய்வாள் பாவம்!

சோப்புத் தூள் விற்பனை சரியில்லை. இந்தத் தொழிலையே இழுத்து மூடி விட்டார் முதலாளி. ஒரு மாதச் சம்பளப் பணம் வேறு பாக்கி.

''சம்பளம் எப்ப வரும் சாரு?''

''தெரியலையே. எதுக்குக் கேட்கறிங்க அப்பா?''

''ஒண்ணுமில்லே. மாத்திரை தீர்ந்து போச்சு.'' ரங்கு, மகளின் முகத்தையே பார்க்காமல், எங்கோ வெறித்தபடி தயங்கித் தயங்கிச் சொல்லும்போது, இந்த மனிதரிடம், 'நாளை முதல் வேலையே இல்லை.' என்ற விஷயத்தை எப்படிச் சொல்வாள் சாரு?

சொன்னால் தாங்குவாரா?

அந்த நிமிஷமே பொய் சொல்லத் துணிந்தாள் அவள் ''அனேகமா இன்னிக்கோ நாளைக்கோ வந்துடும்னு நினைக்கறேன். இன்னிக்குத் தரலைன்னாலும், நானே கேட்டு வாங்கி வரேன்.''

''ஜாக்கிரதைம்மா. கேட்கறப்ப குரலை உசத்தி அதட்டறாப்பலக் கேட்டுடாதே. பணிவாகக் கேளு... என்னதான் நாம இத்தனை நாள் உழைச்ச கூலியைத்தான் கேக்கறோம்ன்னாலும் மரியாதை கொடுத்து, தழைஞ்சு பேசினாத்தான் வேலையிலே ஸ்திரமா இருக்க முடியும்.''

பாவம் ரங்கு. இவளுக்கு உத்தியோகமே இல்லை என்பது தெரியாமல் வேலையை நிரந்தரமாக்கிக் கொள்ள மகளுக்கு யோசனை வழங்கினார்.

வழக்கம் போல, டிபன் பாக்ஸில் மோர் சாதத்தை அடைத்துக் கொண்டு கிளம்பியவள், எங்கு போவது, என்ன செய்வது என்றே புரியாமல் தடுமாறினாலும், தினசரி நியதிப்படி, கால்கள் டவுனிலுள்ள ஆபீசுக்கு நடையைக் கட்டியது.

அங்கே போய், பூட்டிய கதவை ஒரு முறை பார்த்துவிட்டு டவுனிலுள்ள சிறிய, பெரிய கடைகளிலெல்லாம் வேலை கேட்டு ஏறியிறங்கி... எத்தனை நேரம்தான் ஒரு இலக்கு இல்லாமல் சுற்றுவது?

மாலை ஐந்தரை மணி சுமாருக்குக் கூட்டம் நெறிபடும் மின்சார வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது தான் அது நிகழ்ந்தது.

மாம்பலம் ஸ்டேஷனில், இவள் இறங்க யத்தனிக்கும்போது, இவளுக்கு எதிர் சீட்டில், அப்பொழுதுதான் உட்கார்ந்த பெண்ணொருத்தி, இவளை நோக்கிக் கூவினாள். ''இந்தாம்மா, ஹேண்ட் பாக்கை விட்டுட்டுப் போறியே!''

சொன்னவள், அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், அந்த கைப்பையை இவளது கரத்தில் பலவந்தமாய்த் திணித்தாள்!

'இது என்னுது இல்லே...' - இந்த வார்த்தைகள் சாருவின் நாக்கு நுனி வரையில் வந்துவிட்டது.

இதற்குள் வண்டி நகர ஆரம்பிக்கவே 'சட்'டென இறங்கி விட்டாள் அவள்



'கையிலிருக்கும் பையை என்ன செய்வது?'

'ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுத்து விடுவோமா?'

'நாளைக்கு இதே நேரத்துலே டவுன் ஸ்டேஷன்லே வண்டி ஏறினால், பணத்தைப் பறி கொடுத்தவ யாருன்னு கண்டுபிடிக்க முடியுமா?'

'பைக்குள்ளே ஏதாவது அட்ரஸ் இல்லாமலா இருக்கும்?'

அவள், ஸ்டேஷனிலிருந்து வீடு நோக்கி நடந்தபடி, பையைத் திறந்து ஆராய்ந்தாள்.

வெளிப்புற அறையில் ஒரு பேனா, சிற்சில ரசீதுகள், நடு அறையில் ஒரு சாவிக் கொத்து, சின்னதாய் ஒரு பாக்கெட் டைரி, சீப்பு, கையலக் கண்ணாடி, இரண்டு சாக்லேட், ஒரு அட்டை 'ஓவரால்' மாத்திரை... (சனி, ஞாயிறு, திங்கள் என்று வரிசையாய் பொத்தலாக்கப்பட்டு வியாழனிலிருந்து கிழிக்கப்படக்காத்திருந்தது.) இவை தவிர, ஒரு இன்லண்ட் லெட்டர். 'அன்புள்ள பவானிக்கு, அம்மா அனேக ஆசீர்வாதங்கள்' என்று தொடங்கி, மிக நீளமாய், மணி மணியாய், சின்னஞ் சிறு காகிதத்தில் கூடை கூடையாய் விஷயங்களைக் கொட்டி.....

இவற்றுக்கு நடுவே, சற்றுக் கனமான உறை. அதில் பத்தும், நூறுமாய் ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள்.

'அம்மாடி!'

ஆச்சரியத்தில் ஆணியாடித்தாற் போல நின்று விட்டாள் அவள்.

இத்தனை பணத்தை, ஒரு சேர அவள் பார்த்தது, இதுதான் முதல் தடவை.

'பாவம்... எவளோ சம்பளம் வாங்கினதும் அதுவுமாய்த் தோள் பையை அப்படியே விட்டுட்டுப் போயிட்டா...'

'வீட்டுக்குப் போய் என்னமாய்த் தவிக்கிறாளோ, என்னமோ...'

'இந்தப் பணத்துக்கு அங்கே எத்தனை செலவு காத்துட்டிருக்கோ.'

அந்த நிமிஷத்தில் சாரு, உண்மையிலேயே பறி கொடுத்தவளுக்காகப் பரிதாபப் பட்டாள்தான்.

மறுநாள் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விலாசத்துக்கு பையை எடுத்துப் போய் ஒப்படைத்து விட வேண்டும் என்றுகூட நினைத்தாள்.

வீட்டுக்குள் நுழையும் போதே கல்யாணி கேட்டாள். ''பை ஏதுடி?''

''ம்... என்னோட ஒர்க் பண்ணற பொண்ணோடது.''

''அவளோடதை எல்லாம் நீ எதுக்கு வாங்கிட்டு வர்றே?'' பங்கஜம்

மகளைப் பார்த்துச் சிடுசிடுத்தாள்.

''அட, நீ என்னம்மா... அவ வெறும் பையைத்தான் கொடுத்திருக்கா... எங்க ஆபீசுலேர்ந்து நான் சோப்புத் தூள் விக்கறதுக்காகப் போற ஏரியாவுல ஒரு கைப் பைகளை ரிப்பேர் செய்யற கடை. இவ ஏரியா வேறே. ஹாண்ட் பேக் அறுந்து போச்சு. வேற கைப்பிடி மாத்திக்கணும்னா. சரிதான் கொடு. மாத்தித் தரேன்னு வாங்கிட்டேன். ஒரு நிமிஷத்துல தச்சுக்கொடுத்துட்டான். சரி, நாளைக்கு அவளைக் கம்பெனியிலே மீட் பண்றப்ப கொடுத்துடலாம்னு வந்துட்டேன்.''

அந்த நிமிஷத்தில் அவளிடமிருந்து எத்தனை அழகான பொய் வெளி வந்தது!

பையைப் பத்திரமாய்த் தன் பெட்டியில் வைத்துப் பூட்டினாள்.

'நாளைக்கு, இந்த அட்ரஸைத் தேடிக் கண்டுப் பிடிச்சுப் பையை ஒப்படைக்கணும்...' நியாயமான நினைப்புகளுடன் அன்றிரவு படுக்கப் போனாள்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே - வாசலில் வீட்டுச் சொந்தக்காரனின் கூப்பாடு.

அந்த 'தொத்தல்' வீட்டுக்கு அறுபது ரூபாய் வாடகையே அதிகம்தான். இருந்தாலும் வாடகைக்கு இருப்பவர் மூன்று மாசமாய்க் கிணற்றில் போட்ட கல்லாய், 'கம்'மென்று உட்கார்ந்திருந்தால் சொந்தக்காரன் சும்மாயிருப்பானா?

முதல் மாதம் ரங்குவின் மீதுள்ள மரியாதைக்காகப் பொறுத்துக் கொண்டான்.

அடுத்த மாதம் அவருக்கு ரொம்பவும் உடம்பு சரியில்லாததால் வைத்தியர் செலவே ஏகத்துக்கு ஓடி விட்டதாகச் சொன்னபோது, பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தான்.

மூன்றாம் மாதம் பொறுக்கத் தயாராக இல்லை. இத்தனை நாளும் பொறுத்ததே இவனது மனசில் துளி ஈரம் இருப்பதால்தான். பாவம் என்று இவன் பொறுத்தாலும் காலம் இருக்கிற நிலையில், இதே வீட்டைக் கொஞ்சம் புதுப்பித்து நூறு ரூபாய் வாடகைக்கு 'ஜாம் ஜாம்'ன்னு விடலாமென்று தரகர்கள் நெரிக்கிறார்களே!

''வாடகை கொடுக்கத் துப்பு இல்லாதவனுக்கெல்லாம் எதுக்குய்யா வீடு? போய் பிளாட்பாரத்தல படுங்க.''

''டாய், என்னடா சொன்னே? எங்களையா பிளாட்பாரத்துக்குப்



போகச் சொன்னே! நாங்க வாடகையும் தர மாட்டோம். காலியும் பண்ணமாட்டோம். நீ என்ன செஞ்சுக்கணுமோ, செஞ்சுக்கோ போ.'' குமார், படுமட்டமான வார்த்தைகளுடன் களத்தில் இறங்கி வீட்டுக்காரனின் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.

ரங்கு குன்றிப் போய் விட்டார்.

இதுநாள்வரையில் பசியோ பட்டினியோ ஒருத்தரிடம் ஒரு பேச்சுக் கேட்டதில்லை அவர். இன்று தெருவே அவர் வீட்டு வாசலில் கூட்டம் போட்டுவிட்டது.

''குமார்... இங்கே வா.''

''நீங்க சும்மா இருங்கப்பா. இவனுங்களுக்கெல்லாம் ஒரு லெசன் கத்துக் கொடுக்கணும்.''

''குமார், இங்கே வரப் போறயா இல்லையா?'' சாரு அதட்டினாள்.

அவன் திரும்பி, இவளைப் 'புழுவே' என்பது போலப் பார்த்தான். ''நீ போடி உள்ளே. எது ஒண்ணுன்னாலும் இவ வந்துடுவா.''

பொறுக்க முடியவில்லை சாருவால். 'பளிச்'சென, வீட்டுக்காரரின் எதிரில் வந்து நின்றாள்.

''எவ்வளவு சார் தரணும்?''

''நூத்தியெண்பது... தவிர எலக்ட்ரிக் சார்ஜ் இருபத்தியெட்டு ரூபாய்...''

அடுத்த நிமிடம், அவள் உள்ளே போய்ப் பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்து வந்து கொடுத்தாள்.

''மொத்தம் இருநூத்தியெட்டு. முந்நூறு ரூபாயாத்தரேன். எட்டு ரூபா போக மீதி இருக்கா?'' கேள்வியில்தான் எத்தனை கம்பீரம்!

அத்தனை நேர ரகளையும் 'பொட்'டென அடங்கி, எல்லோரும் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்திருக்க, ''எட்டு ரூபா ஒரு பெரிசாம்மா. நீ இருநூறு ரூபாயைக் கொடு. இந்த எட்டு ரூபாயை அடுத்த மாசத்தோட சேர்த்துக் கொடு. போதும்.'' என்று குழைந்தார் வீட்டுக்காரர்.

ஆக, இனிமேல் வாடகைப் பணத்தைக் கொடுக்கப் போகிறவள் இவள்தான் என்பதையும், இந்தக் குடும்பத்தின் முடி சூடாத ராணி இவள்தான் என்பதையும் மறைமுகமாக அறிவித்து விட்டுப் போய்விட்டார் வீட்டுக்காரர்.

குடும்பம் இன்னமும் பிரமையிலிருந்து நீங்கவில்லை.

முதன் முதலில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் பங்கஜம்தான்.

''ஏதுடி இத்தனை பணம்?''

''ஆங்? திருடினேன்.''

மனசில் - பணத் தேவையும், நியாய சிந்தையும் போராட்டம் நடத்த, 'சுள்'ளென்று எரிந்து விழுந்தாள் சாரு.

''விளையாடாதே சாரு. ஏது இத்தனை பணம்? யார்கிட்டயாவது கடன் வாங்கினியா?''

அப்பாவின் கேள்விதான் அவளை ஓரளவுக்குச் சமனப்படுத்தியது.

''போன மாசம், என்னால் கம்பெனிக்கு நிறைய ஆர்டர் வந்திருக்கு. அதுனால சின்ன போனஸ் மாதிரி.. சம்பளத்தைத் தவிர...''

''எவ்வளவு...''

''சம்பளம் நூத்தி எண்பதா... இன்னொரு நூத்தி எண்பது...''

''முந்நூத்தி அறுபதா? அடி என் அம்மாடி!''

பங்கஜம், படபடடென மகளின் கன்னத்தை வழித்து நெட்டி முறித்தாள்.

ரங்கு, ஆனந்தம் தாளாமல் இடுங்கிய கண்களில் இந்து மகா சமுத்திரத்தையே அடக்கிக் கொண்டு, மகளைப் பார்த்துச் சிரித்தார்.

கல்யாணி, திறந்த வாய் மூடவில்லை.

குமார், கொஞ்சம் பொறாமையும், நிறைய எரிச்சலுமாய்த் தங்கையை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

கையில் பணம் இருப்பது - இந்தச் செலவினங்களுக்கு எப்படித்தான் தெரியுமோ? எல்லாம் வரிசையாக, ஒன்றன்பின் ஒன்றாகக் கியூவில் நின்றன.

வீட்டுக்கு வேண்டிய மளிகைச் சாமான்கள், அப்பாவுக்குத் தேவையான மருந்துகள், கல்யாணியின் குழந்தைக்குப் பால் பவுடர் டின்கள்... அப்பப்பா! எத்தனை செலவுகள்?

ஒவ்வொரு முறையும், அந்தப் பையிலிருந்து பணம் எடுக்கும்பொழுதெல்லாம் நெஞ்சுக்குள் கூசிக் குறுகி, உள்ளூர அவமானப் பட்டு, தினம்தினம் புழுவாய் துடித்துப் போனாள்.

'எனக்கு ஒரு வேலை கிடைச்சவுடனே முதல்லே இந்தப் பணத்தைத் திருப்பித் தரணும்...' தினசரி பாராயணம் இது.

'வேலையே போய்விட்டது என்பதை மறைக்க, தினமும் கையில் டிபன் பாக்சுடன் வண்டியேறி டவுனிலும், மவுண்ட் ரோட்டிலும் நாயாய், பேயாய் வேலை தேடி அலைந்து மாலை ஐந்தரைக்கு 'டாண்'ணென்று வீடு திரும்பி... எத்தனை நாளைக்குத்தான் இந்த நாடகத்தைத் தொடர முடியும்!

கையிருப்புக் குறையக் குறைய அடுத்த மாதத்தைப் பற்றிய கவலை அவளை இறுக்கமாய் பிடித்துக் கொள்ளும்.



குழந்தைகளிலிருந்து பெரியவர் ரங்கு வரையில் அத்தனை பேருமே ஒரு நாலணா காசு வேண்டுமென்றாலும் இவள் கையையே எதிர்பார்த்திருந்தார்கள்.

போதாக் குறைக்குத் திண்ணையில் உட்கார்ந்தபடியே ரங்கு, இவளது ஜாதகத்தை வைத்துக் கொண்டு கூட்டிக் கழித்து ஆயிரம் கணக்குப் போட்டு, பெண்டாட்டியிடம் பெருமை அடித்துக் கொள்வார். ''நீ பார்த்துட்டேயிரு... என் பெண்ணுக்கு சுக்ர திசை. அதிருஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டப் போகுது. இவள் தொட்டதெல்லாம் துலங்கும். அப்பேர்பட்ட யோக ஜாதகம்''

கையில் பிளாஸ்டிக் கூடையும், அதில் இரண்டு சோப்புத் தூள் பாக்கெட்டுகளுமாய் - இல்லாத உத்தியோகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் சாரு, அப்பாவைப் பார்த்து வெறுமையாய்ச் சிரித்துவிட்டுக் கிளம்புவாள்.

''கிளம்பிட்டியா? ஜாக்கிரதையம்மா. எப்ப உன் மேல அதிகாரிகளுக்கு நல்ல அபிப்பிராயம் விழுந்திருக்கோ, அதைக் காப்பாத்திக்கறதுல குறியா இரு. யார் வம்புக்கும் போகாதே. உன் வேலை உண்டு. நீ உண்டுன்னு இருந்துக்கோ. மேலமேல உனக்கு சம்பளம் உயர்ந்து நீ நன்றாயிருக்கணும்.''

இதைச் சொல்லும் போதே ரங்குவுக்குத் துக்கம் தொண்டையை அடைக்கும்.

அன்று தோள் பையிலிருந்த பொருட்களைத் தன் பெட்டியில் பத்திரப் படுத்திய சாரு, பையை ஸ்டேஷனுக்குப் போகிற வழியில் யாரும் பார்க்காத இடத்தில் தூக்கி எறிந்து விட்டாள். அந்தப் பையிலிருந்த ஐந்நூறு ரூபாயில் மீதியிருந்தது. ஓரிரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களும் சில்லறைகளும்தான்.

'அந்தப் பையில் ஐந்நூறுக்குப் பதிலாய் ஆயிரம் ரூபாய் இந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.'

'ஆமா... ஆயிரம் ரூபாய் இருந்தா மட்டும் என் குடும்பக் கஷ்டம் நிரந்தரமாகத் தீர்ந்துடுமா?'

'அது சரிதான், நிச்சயமாகத் தீராதுதான். ஏதோ, போன மாசம் அதிருஷ்டம் அடிச்சது. பொழைச்சோம். இந்த மாசமும் இதே மாதிரி அதிர்ஷ்டம் அடிக்குமா என்ன?'

'அப்ப, இந்த மாசம் என்ன பண்ணுவே?'

'அதானே தெரியலை.'

அவள் குழம்பி, எத்தனையோ விதமாக யோசித்து கும்பலில் இடிபட்டு, டவுனில் நடந்து கொண்டிருந்தபோது... அவளுக்கு முன்னால் வயதான மனிதர் ஒருவர் பழக் கடையில் ஒரு டஜன் மாம்பழத்தை வாங்கிக் கொண்டு, தன் கால் சட்டையின் பக்கவாட்டுப் பையிலிருந்த பருத்த மணி பர்ஸைத் திறந்து, கற்றை கற்றையான நோட்டுக்களை லாவகமாகப் புரட்டி, ஒரு இருபது ரூபாயைக் கொடுத்து, மீதிச் சில்லறையை வாங்கிப் போட்டு, மீண்டும் பர்ஸை அதே

இடத்தில் செருகிக் கொள்வதை வைத்த விழி வாங்காமல் பார்த்தவள் சட்டைப் பையின் விளிம்பில் - சொகுசுக் காரில் போகும் பொமரேனியன் நாய்க்குட்டி போல - எட்டிப் பார்க்கும் பர்ஸையே வெறித்தபடி அவர் பின்னாலேயே போனாள் அவள்.

அந்தப் பர்ஸ் கீழே விழாதா என்கிற நப்பாசை. அப்படியே விழுந்தாலும் யாரும் பார்க்காதபடி, தான் எடுத்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே என்கிற கவலை.

அவர் 5'ம் நம்பர் பஸ்ஸில் ஏறினார். இவளும் பஸ்ஸில் தொத்திக் கொண்டாள்.

''ராஜா அண்ணாமலைபுரம் ஒண்ணு கொடுப்பா.''

அவரது கையில் மறுபடியும் அந்தப் பர்ஸ் ஏறி, திரும்ப தனது யதாஸ்தானத்துக்குத் திரும்பியது.

தனக்கு உட்கார இடம் கிடைத்தும் அந்த இடத்தில் ஒரு கிழவியை உட்கார்த்தி வைத்துவிட்டு அந்த மனிதரை ஒட்டினாற் போல நின்று கொண்டாள் அவள்.

''நீங்க எங்கே போகணும்?''

கண்டக்டரின் கேள்விக்கு 'அடையாறு' என்று பதிலளித்தாள் அவள்.

பஸ் ஒவ்வொரு நிறுத்தத்திலும் நின்று, நின்று கிளம்ப - கூட்டம் மூச்சு முட்டிற்று.

ராஜா அண்ணாமலைபுரம் நெருங்க நெருங்கப் பதட்டத்தில் வியர்வை வெள்ளமாப் பெருக - தெப்பமாய் நனைந்து போனாள்.

''யாருங்க, ராஜா அண்ணாமலைபுரம்.''

''இதோ இறங்கிட்டேயிருக்கேன்.''

அந்த மனிதர் கூட்டத்தைப் பிளந்து கொண்டு இறங்க, பஸ், பிள்ளைதாய்ச்சி போலப் பெருமூச்சு விட்டுக் கிளம்ப, அவரின் கனத்த பர்ஸ் சாருவின் கையில்.




முதல் தடவை தானாகக் கிடைத்தது. இரண்டாம் தடவை, இவளே எடுத்துக் கொண்டாள்.

பர்ஸ் கைக்கு வந்தவுடன், அடையாறு வரும் வரையில் காத்திருக்கவில்லை அவள். ஆந்திர மகிள ஆசுபத்திரி நிறுத்தத்திலேயே இறங்கிக் கொண்டாள். அங்கிருந்து வேறு பஸ் பிடித்து மாம்பலம்.

வீடு வந்து சேர்ந்தவள் வெகு நேரம் வரையில் தான் செய்த திருட்டைத் தன்னாலேயே நம்ப முடியாமல் தடுமாறினாள்.

''உடம்பு சரியில்லையா சாரு?''



''ஒண்ணுமில்லை. லேசாத் தலைவலி. டிரெயினிலே ஒரே ரஷ். வெய்யில்லே அலைஞ்சது வேற. ஜில்லுனு குளிச்சா சரியாப் போயிடும்.''

அவள் அம்மாவிடம் அதற்கு மேல் பேச்சுக் கொடுக்காமல் மளமளவென மாற்றுடைகளையும் அதற்குள் பர்ஸையும் மறைத்து எடுத்தபடி குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு நீளமாய் மூச்சு விட்டாள்.

'அம்மாடி... எத்தனை பெரிய திருட்டு!'

'யாராவது கவனிச்சிருப்பாங்களோ?'

'போலீஸ் இதைக் கண்டு பிடிச்சுடுமோ..?'

இதயமே தொண்டைக் குழிக்கு ஏறி அடைத்து விட்டாற்போல மூச்சுத் திணறியது.

தன்னை நிதானப் படுத்திக்கொண்டு பர்ஸைத் திறந்தவளின் வாய், பர்ஸின் வாயை விடவும் பெரிசாய்த் திறந்தது.

அகலமான நல்ல தோலினால் ஆன பர்ஸ், உள்ளே சுளை சுளையாய் முப்பது நூறு ரூபாய் நோட்டுக்கள். அத்துடன் காசி செட்டித் தெருவிலுள்ள ஒரு நகைக் கடையில் நாலு பவுனில் பழைய சங்கிலி ஒன்றை விற்றதற்கான ரசீது. கூடவே, மஞ்சள் குங்குமத்தில் ஆரம்பித்து, முந்திரி திராட்சை வரையில் நீண்ட கல்யாணத்துக்கான மளிகைச் சாமான் பட்டியல் ஒன்று. சின்னப் பொட்டலத்தில் எந்தக் கோவில் விபூதி, குங்குமமோ மடித்துக் கட்டப்பட்டிருந்தது. பர்ஸின் உள் பக்க விரிப்பில், பிளாஸ்டிக் அறையில், பறி கொடுத்த மனிதர் குடும்ப சமேதராய் போட்டோவுக்காக மட்டும் தற்காலிகமாய்ப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். சற்று முன் பார்த்ததை விடவும் இளமையாய் ஆகிருதியாய் இருந்தார். பக்கத்தில் பெரிய குங்குமப் பொட்டும், பயந்த பார்வையுமாய் மனைவி. இந்தப் பக்கம், பாவாடை தாவணியில், இரட்டைப் பின்னலை மார்பில் தவழ விட்டபடி ஒரு பெண். பறிகொடுத்த அப்பாவியின் இந்தப்புறம், மகளை விடவும் உயரமாய், பத்து வருஷ முந்தைய நாகரிகத்தில் சட்டையும் பேண்ட்டும் போட்ட மகன். இவர்களின் காலடியில் இரண்டு பெண்கள். கவுனிலும், பாவாடை சட்டையிலுமாய். மனைவியின் வயிறு இன்னமும் பூசினாற்போல - அடுத்த வெளியீட்டை உள்ளே வைத்திருந்தாளோ... இல்லை, சுபாவத்திலேயே பிள்ளை பெற்றுப் பெருத்துப் போன வயிறோ!

''என்னை மன்னிச்சுடுங்கோ... என்னை... ப்ளீஸ்...''

அவள் புகைப்படத்தை மீண்டும் அந்தப் பிளாஸ்டிக் உறையுள் செருகப் போன சமயத்தில் போட்டோவின் பின்புறத்தில் அந்த விலாசம் தென்பட்டது.

'சீனுவாசன், நம்பர் '.....', நாலாவது குறுக்குத் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28...'

பர்ஸை மூடி வைத்தவள், குளித்ததாகப் பேர் பண்ணிவிட்டு வெளியே வந்தாள்.

இரவு சாப்பாடு இறங்கவே இல்லை.

எப்படி இறங்கும்? சாமானியமான காரியமா செய்திருக்கிறாள்!

அப்பாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட மனச்சாட்சி உறுத்தியது.

'போதும், இதோட போதும். இனிமே, இந்த மாதிரி ஒரு காரியத்தைச் செய்யவே கூடாது.'

நினைத்து நினைத்து மறுகியவள், அன்றிரவே இந்தப் பணத்தில் எதையெல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்பதையும் வரிசைப்படுத்திப் பார்க்கத் தவறவில்லை.

'முதல்லே, இந்தக் கல்யாணிய அவ புருஷன் வீட்டுல கொண்டு விட்டுடணும். அந்த மனுஷன் இவளுக்கு ரெட்டை வட சங்கிலியும், தான் சாப்பிடப் பெரிய வெள்ளித்தட்டும் கேட்கறான். அத்தனையெல்லாம் இப்ப முடியாது. ஏதோ அந்தக் குழந்தைக்குக் காப்பும் கொலுசும் வாங்கிக் கொடுத்து சின்னதா ஒரு வெள்ளிக் கிண்ணம், குழந்தை சாப்பிடறாப்பல தரலாம். இதுவே பெரிசு...'

'இதுக்குமே மொத்தமா அம்மா கிட்ட பணத்தைக் கொடுத்துடக் கூடாது. மாசம் கொஞ்சமா மூணு, நாலு மாசத்துல கொடுக்கணும். அப்பத்தான் சந்தேகம் வராது. இல்லேன்னா ஆயிரம் கேள்வி பிறக்கும்.'

'இவ செலவு போக, மீதிப் பணத்துல செட்டும் கட்டுமா எத்தனை நாள் குடும்பத்தை ஒப்பேத்த முடியுமோ, அத்தனை நாள்...'

'சரி? அதுக்கு அப்புறம்?'

அப்புறம்? அப்புறம்? அப்புறம்?

இந்தக் கேள்வியே அவள் முன், பல்லைக் காட்டி, அசிங்கமாய்ச் சிரித்தபடி, தட்டாமாலை ஆடிய போது, பாதித் தூக்கத்தில் பேய்க் கனவு கண்ட மாதிரி, 'விருட்'டென எழுந்து உட்கார்ந்து விட்டாள் அவள்.

'ச்சே! இது என்ன அவஸ்தை?'

'அப்புறம் என்ன அப்புறம்? இந்தப் பணத்துல இன்னும் மூணு நாலு மாசத்துக்கு மேல ஓட்ட முடியாதா? ஓட்டலாம். அதுக்குள்ளே எனக்கோ குமாருக்கோ நல்ல வேலை ஒண்ணு கிடைக்காதா?'

'வேலை மாத்திரம் கிடைக்கட்டும். இந்தப் பாவத்துக்கு எல்லாம் பிராயச்சித்தமா அந்த பவானிக்கும், இந்த சீனுவாசன் குடும்பத்துக்கும் என்னாலான உதவிகளைச் செஞ்சிடறேன்.'

கற்பனைகள் வெகு சுகமானவை. செய்யும் தவறுகளிலிருந்து சுலபமாய்த் தப்பித்துக் கொள்ள இந்தக் கற்பனைகள் தாராளமாய் உதவும்.



கல்யாணியை, புருஷன் வீட்டில் கொண்டு விடவே, ஆயிரத்து இருநூறு ரூபாய் பக்கத்துக்குச் செலவு ஓடியே போயிற்று.

அம்மாவிடம் இதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணத்தைக் கொடுத்து வந்தாள் சாரு.

இது தவிர, குடும்பச் செலவு வேறு.

இதற்காக - இப்படிப் பணத்தைப் பணமென்று பாராமல் செலவழிப்பதற்காகக் குமாரிடம் எத்தனை பொய் சொல்ல வேண்டியிருந்தது!

"மாசா மாசம் போனஸ் தருவாங்களோ உங்க சோப்பு கம்பெனியில?"

"இது ஒண்ணும் போனஸ் இல்லே. நான் நிறைய ஆர்டர் கொண்டு வர்றதால என்னை உற்சாகப் படுத்தறதுக்காகக் கொடுக்கற அதிகப்படி. மேலும், போன மாசத்துலேருந்து எனக்கு இருபது ரூபா இன்கிரிமெண்ட் கொடுத்திருக்காங்க."

"பரவாயில்லையே. ஆனா நீ சொல்றபடி பார்த்தா இந்த சோப்புத் தூள் 'ஓகோ'ன்னு விற்பனையாகணுமே! கடையில் கேட்டா அந்த மாதிரி சோப்புத் தூள் மார்க்கெட்டுலேயே இல்லைங்கறான்."

"எவன் சொன்னது? நீ இந்த டப்பா கடையில் எல்லாம் போய்க் கேட்டிருப்பே. உன் புத்தி எங்கே போகும்? இப்ப நாங்க இந்த மாதிரி சில்லறைக் கடைகளுக்கு எல்லாம் சப்ளை பண்றதில்லே. பெரிய பெரிய ஹோட்டல்ஸ"க்கு, ஆஸ்பிடலுக்கு, பெரிய ஃபாக்டரிஸ"க்கு லிக்விட் சோப் சப்ளை பண்றோம். பெரிய சோப் ஃபாக்டரி ஒண்ணே எங்க கிட்டத்தான் 'ரா மெட்டீரியல்' வாங்குது தெரியுமா?"

அவன், நம்பிக்கையில்லாமல் அவளைப் பார்வையால் அளப்பான். அவனது விசாரணைப் பார்வையைத் தாங்க முடியாத சாரு, அவனைத் தன் வார்த்தைகளாலேயே துவம்சம் செய்ய ஆரம்பித்தாள்.

பங்கஜத்துக்கு இவர்களின் ரகசியப் போரைப் பற்றிக் கவலையில்லை. கல்யாணியைக் கொண்டு விடுவதற்காக பட்சணம் செய்வதிலும் குழந்தையின் காலுக்குக் கொலுசும் கைக்கு வளையலும் வாங்குவதிலும் தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்டாள். மகளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்புவதற்காகப் பஞ்சாங்கத்தில் நாள் பார்ப்பதிலேயே ரங்கு முனைந்தார்.

கல்யாணி புகுந்த வீடு செல்வதே பெரிய நிம்மதியாக இருந்தது சாருவுக்கு.

சொந்த அக்காதான். புருஷன் வீட்டில் சுகப்படுகிற ஜென்மமில்லை. ஏதோ, இருக்கிற சோற்றில் அவளும் ஒரு கவளம் உண்பதால் பெரிய செலவு எதுவும் ஆகிவிடப் போவதில்லைதான். ஆனால் வீட்டின் சிரம நிலைமை சாருவுக்குத்தானே தெரியும்!

சின்னச் சின்னச் செலவுகளையும் பயந்து பயந்து எதிர்நோக்கினாள். கூடிய

வரையில், தன்னாலான செலவுகளைக் குறைத்துக் கொண்டாள்.

''அம்மா, எனக்கு இனிமே டிபன் பாக்சுல சாதம் வேண்டாம்.''

''ஏண்டி?''

''எங்க கம்பெனி கேன்டீன்லேயே வாங்கிச் சாப்பிட்டுக்கறேன். மத்தியான நேரத்துல மோர் சாதம் 'நொய்'னு புளிச்சுப் போயிடறது.

அங்கே சூடா போண்டா, தோசை எல்லாம் போடறாங்க. இப்பத்தான் ஆரம்பிச்சிருக்காங்க.''

''நீ தெருத் தெருவாச் சுத்துவியா... கேன்டீன்லே டிபன் சாப்பிடுவியா?''

''இப்பல்லாம் முன்னே மாதிரி தெருத் தெருவாச் சுத்த வேண்டியதில்லே. பெரிய ஹோட்டல், ஃபாக்டரி, ஆஸ்பிட்டல் - இங்கேயெல்லாம் போய் ஆர்டர் வாங்கி வந்தாப் போதும். கரெக்டா, மூணு மணிக்குக் கம்பெனிக்கு வந்துடுவேன். அப்புறம் டிபன் சாப்பிட்டு. அன்னிக்கான கணக்கை ஒப்படைச்சுட்டு, நேரா வீட்டுக்கு வர வேண்டியதுதான்.''

எத்தனை சாமர்த்தியமான - சமத்காரமான புளுகுகள்!

இது மாதிரி இவள் வீட்டில் கதையளக்கும் போதெல்லாம் குமார் மட்டும் இவளது நெஞ்சைத் துளைக்கும்படியாகப் பார்ப்பான்.

அவள் தவித்துப் போவாள்.

அந்தத் தவிப்பைத் தவிர்ப்பதற்காக அவனைக் குத்தலான வார்த்தைகளால் குதறிப் போடுவாள்.

''என்ன, ரொம்பத்தான் அலுத்துக் களைச்சு, சாய்ஞ்சுகிட்டிருக் காப்பல இருக்கு? வேலை ரொம்ப அதிகமோ?''

''காப்பி டிபன் எல்லாம் ஆச்சா? இப்படிப் போய் அக்னிஹோத்ரம் பண்ணிட்டு வருவீங்களே, போகலையா?''

''வீட்டுலேயே உட்கார்ந்திருந்தா வேலை, உன்னைத் தேடிட்டு வராது. நீ அதைத் தேடிப் போகணும்.''

''அம்மா, ரெண்டு வெட் கிரைண்டர் - செகண்ட் ஹாண்ட் - விலைக்கு வர்றதாம். வாங்கிப் போடலாமா... பாவம், நம்ம குமாரும்தான் வீட்டிலே பொழுது போகாமத் திண்டாடிட்டிருக்கான்...''

''ஏம்மா, விமலிய மாவு மிஷினுக்கு அனுப்பினியா? ஏன், இந்த வீட்டுல அவளை விட்டா வேற ஆள் கிடையாதா? அவ ஸ்கூல் பாடத்தைப் படிச்சாப் போதாதா? மாவு மிஷின் வாசல்லே ஒரே ரௌடி கூட்டம். அங்கே வர்ற பொண்ணுங்க, குனிஞ்சு மாவைத் திரட்டறதை வேடிக்கை பார்த்து கலாட்டா. ஆபீஸ் வேலை கொடுத்தாதான் உன் பிள்ளை செய்வானாம்மா? வீட்டு வேலை செய்ய மாட்டாராமா?''



''இந்தாடா ரவி... ராகவா, உன்னையும் தான் சொல்றேன். பாடத்துல ஏதாவது சந்தேகம் இருந்தால் குமாரைக் கேட்டுத் தெரிஞ்சுக்கோங்கோ. உங்களுக்கும் டியூஷன் செலவு மிச்சம். அவனுக்கும் படிச்சதெல்லாத்தையும் ஞாபகப்படுத்திட்ட மாதிரி இருக்கும்.''

இவளது சொல் அடியால் பலமாகத் தாக்கப்படும் குமார், தன்னை சமாளித்துக் கொண்டு பதிலடி கொடுக்க ஒரு போதும் இடம் தந்ததில்லை சாரு.

ரங்குவோ, பங்கஜமோ இவளை எதிர்த்துப் பேசினதும் இல்லை.

'பெண் பிள்ளை, ஒண்டியாய்ச் சம்பாதித்துக் குடும்பத்தைத் தாங்குகிறாள். உழைத்துச் சலித்து வீடு திரும்பும்போது வீட்டில் பொலி காளை மாதிரி - அண்ணன்காரன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் கோபம் வராதா? வரத்தான் வரும். நாம்தான் அவளை அனுசரித்துப் போக வேண்டும்.'

இரண்டு பேர்களிடம் கடன் பட்டதையே எப்படிச் சமாளிப்பது என்று தவித்துக் கொண்டிருந்த சாருவுக்கு கடன் சுமை ஏறியதே தவிர, குறைகிற வழியைக் காணோம்.

ஒருமுறை இந்தத் தொழிலில் ஈடுபட்ட கை, இதற்குப் பிறகு சும்மாயிருக்கவில்லை. தவறு; சும்மாயிருக்கச் சுற்றம் விடவில்லை.

கேட்கும் பொழுதெல்லாம் பெண் தட்டாமல் கையிலிருப்பதைத் தருவதாலோ என்னவோ, பங்கஜம் சமையல் தொழிலை விட்டு விட்டாள்.

''சும்மா, அடுப்படியில நின்னு நின்னு - மண்டை கொதிப்பேறிப் போயிட்டதுடி சாரு.''

''உன்னை யாரு ஊரார் வீட்டு அடுப்படியில வேகச் சொன்னது? அப்ப நான் சம்பாதிக்கலை. சரி. இப்ப என்ன, நான்தான் ஏதோ நாலு காசு கொண்டு வரேனில்லே. பேசாம வீட்டோட கிட...''

சாரு சொன்னதுதான் சாக்கென்று, வீட்டிலேயே ஸ்திரமாய் உட்கார்ந்து விட்டாள் பங்கஜம்.

மூவாயிரம் ரூபாய் வந்து மூன்று மாசம் கூட ஆகவில்லை. மறுபடியும் பண நெருக்கடி. இதற்குப் பின் அத்தனை பெரிய தொகை கிடைக்கவில்லேயாயினும் வந்ததை வரவில் வைத்தாள் அவள்.

ஒன்று முதல் பத்து தேதி வரையில், கிடைப்பதை எல்லாம் அள்ளிக் கொள்ள வேண்டியது. அது ஐந்தோ ஐந்நூறோ! மாதச் செலவு போக, மீதியை அடுத்தமாதத்திய இக்கட்டான நாட்களுக்கு ஒதுக்கி வைப்பாள்.

தொழில் பழகப் பழக, மனத்தில் தாள முடியாத சுமை ஏறிக்கொண்டே போயிற்று.

எத்தனை பேருக்கு இவள் இதற்காகப் பரிகாரம் செய்ய முடியும்? அத்தனைக்கும் பணம்தான் ஏது?

'இந்தக் குமார் மட்டும் வேலையில் சேர்ந்து என் குடும்ப பாரத்தைத் தாங்கியிருந்தான்னா... இன்னிக்கு நான் வீட்டோட கிடந்திருப்பேன். ஏதோ, ஒண்ணு, ரெண்டு திருட்டோட முடிஞ்சிருக்கும்...'

அவள் ஒவ்வொரு நாளும் குமாருக்கு ஏதேனும் வேலை கிடைக்காதா என்று ஏங்கினாள்.

தெரியாத்தனமாய்க் கை விலங்கைப் பொன் வளையல் என்றெண்ணி மாட்டிக் கொண்டாயிற்று. விலங்கு; கழற்ற முடியாமல் பூட்டிக் கொண்டும் விட்டது. இனி யார் வந்து கழற்றி விடுவார்கள் என்பதிலேயே கவனமாய் இருந்தாள்.

இந்த சமயத்தில்தான் இவளிடம் பணத்தைப் பறிகொடுத்த சீனுவாசனை ஒருநாள் திடீரென சந்திக்க வேண்டியதாயிற்று. அவருக்கு இவள் யாரென்று தெரியாவிட்டாலும் - இவள் மறக்கவில்லையே.

பாரிமுனையில் பஸ்ஸுக்காக இவள் காத்திருந்த போது, அந்தப் பக்கமாய்ச் சைக்கிளில் வந்த மனிதர் சைக்கிளை பஸ் ஒன்றின் மீது மோதி மல்லாந்து தரையில் விழ, வேடிக்கை பார்த்த கும்பலிலிருந்து பாய்ந்து சென்று உதவியவள் அவள்தான்!

''மெள்ள... பார்த்து எழுந்திருங்கோ.''

''என் பர்ஸ்.... மூக்குக் கண்ணாடி...''

''எல்லாம் பத்திரமா இருக்கு. பதட்டப்படாதீங்கோ. என் கையைப் பிடிச்சுட்டு பிளாட்பாரத்துல வந்து உட்காருங்கோ.''

அவள், அவரைக் கைத்தாங்கலாய் அழைத்துப் போய் ஒரு கடை வாசலில் உட்கார்த்தி வைத்தாள். தரையில் சிதறிக் கிடந்த அவரது பொருட்களை ஒன்று விடாமல் பொறுக்கி, எடுத்துக் கொண்டு சைக்கிளையும் ஒரு கையால் தள்ளியபடி அவரருகில் வந்து நின்றாள்.

''என்ன பண்றது? தலை சுத்தறதா? ஒரு சோடா வாங்கித் தரட்டுமா?''

''வேணாம்மா.''

''சோடா என்ன, வெறும் தண்ணிதானே? சாப்பிட்டு வையுங்கோ.''

அவள், பெற்ற மகளை விடவும் பரிவாய், ஆதரவாய் அவரிடம் பேசி கீழே விழுந்ததால் நெற்றியில் பட்டிருந்த காயத்துக்காக டாக்டர் ஒருவரிடம் அழைத்துப் போய் மருந்து போட்டு உபசரித்தாள்.



''இந்த வயசுல நீங்க எல்லாம் பஸ்ஸுல போகணும். சைக்கிள்லே போனா இந்தக் கதிதான்.''

''அது வந்தும்மா... கொஞ்ச நாள் முன்னாடி நான் பஸ்ஸுலேதான் போயிட்டிருந்தேன். பஸ்ஸுல, பகல் கொள்ளையாட்டம் பர்சுல இருந்த பணத்தைப் பறிகொடுத்துட்டேன். ஒண்ணு ரெண்டு இல்லே. மூவாயிரம்! அப்பத்தான், பெண்டாட்டி நகைய வித்துப் பணமாக்கி, பெண்ணோட கல்யாணத்துக்காக, வச்சிருந்த பணம்.''

அவர் தடுமாறிக் கொண்டே எழ, சாரு அவரை ஒரு டாக்சியில் உட்கார வைத்து, சைக்கிளையும் வாரிப் போட்டுக் கொண்டு ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள அவரது வீடு வரையில் கொண்டு வந்து விட்டாள்.

''உள்ளே வாம்மா குழந்தே.''

''இருக்கட்டும். எனக்கு வெளியில நிறைய வேலை இருக்கு.''

''பரவாயில்லே. ஒரு நிமிஷம் வந்துட்டுப் போ...''

சீனுவாசனின் அழைப்பை அவளால் தட்ட முடியவில்லை. அதே சமயத்தில் இவரது குடும்பதினரை அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற ஆவலையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

''ஜானகி, இன்னிக்கு நான் தப்பிச்சது பெரிய விஷயம் தெரியுமோ?''

அவர் தன் மனைவியை அழைத்து அறிமுகப்படுத்தி வைக்க, சாருவின் மனசில் பசுமையாய் இருந்த சீனுவாசனின் பர்சிலிருந்த புகைப்படத்துடன் அவள் ஒவ்வொருவரையும் ஒப்பிட்டுப் பார்க்க, வயிற்றில் இனம் புரியாத கலக்கம்.

''இவதான் ஜானகி. என் பொண்டாட்டி.''

அவள் ஏறிட்டு அப்பெண்மணியின் முகத்தைப் பார்த்தாள்.

புகைப்படத்திலிருந்தவளை விடவும் இளைப்பாய்... சோர்வாய். விழிகளிலிருந்த பயம் மாத்திரம் அவளை இனம் காட்டிக் கொடுத்தது.

''இவ அபிராமி. இவ கல்யாணம்தான் நாலு மாசத்துக்கு முன்னாடி டக்கறதா இருந்தது. கடைசி நிமிஷத்துல சில ஆயிரம் ரூபா பணத்தால ன்னு போச்சு.''

அவர் சொல்லிக் கொண்டே போக, சாரு ஸ்தம்பித்து ட்கார்ந்திருந்தாள்.

''நான் அதிகம் சம்பாதிக்கலை. நாற்பது வயசிலேருந்தே நரம்புத் ளர்ச்சி வியாதி அப்பப்போ வந்திடும். அதுவும் எனக்கு மூத்த மகன் ருத்தன் இருந்தான். ஒரே பிள்ளைதான். மத்த நாலும் பெண்

குழந்தைகள். அவனை இருபது வயசு வரை வளர்த்து முழுசாய் எமன் கிட்ட தூக்கிக் கொடுத்தேன். இன்ஜினீயரிங் காலேஜ்ல படிச்சுட்டிருந்தான். அதான் கடைசி வருஷம். இன்னிக்கு அவன் இருந்தா, எங்க கஷ்டமெல்லாம் விடிஞ்சிருக்கும். அவன் போய் மூணு வருஷமாறது. அடுத்தவ அபிராமி. இவளுக்கு, ஏதோ என்னால முடிஞ்ச அளவுக்கு நல்லபடியாக கல்யாணத்தைப் பண்ணிடணும்னு ஆசைப்பட்டேன். ஜானகியோட நகைகளை வித்து அனேகமா எல்லாத்தையும் வாங்கிட்டேன். கல்யாணத்துக்கு முதல் நாள் சாயந்திரம் மாப்பிள்ளை அழைப்பு. மாப்பிள்ளைக்கு வரதட்சணை ஐயாயிரத்து ஒண்ணை நிச்சயதாம்பூலத்தோட தர்றதாப் பேச்சு. கல்யாணச் செலவு, நான் எதிர்பார்த்ததையும் விட ஏகமா ஆயிட்டதாலே என்னால அப்போதைக்கு ரெண்டாயிரம் தர முடியும்கற நிலைமை. பிள்ளையாண்டான் சொன்னா கேட்பான். ஆனா, பிள்ளையைப் பெத்தவர் கேட்டுக்கத் தயாரா இல்லை. 'அதெல்லாம் முடியாது. மீதிப் பணம் வந்தாத்தான் என் பிள்ளை காருல ஏறுவான்'னுட்டார். ஜானகியோட கடைசி நகையான நாலு பவுன் சங்கிலிய வித்துப் பணமாக்க, டவுனுல எனக்குத் தெரிஞ்ச நகைக்கடைக்கு ஓடினேன். மூவாயிரம் தேறியது. வர்ற வழிலே ஒரு டஜன் மாம்பழம் வாங்கினேன். கல்யாணப் பையனோட தங்கை, எங்கேயோ கண்காணாத ஊர்லேருந்து வந்திருந்தா. அவ் பிள்ளை மாம்பழம் இருந்தாத்தான் இலை முன்னாடி உட்காருவேன்னு ஒரே அடம்... 'ராத்திரி எப்படியாவது அவனுக்கு மட்டும் மாம்பழம் இலையிலே போடப் பாருங்கோ'ன்னு சம்பந்தி அம்மாள் உத்தரவு. அந்த நேரத்துல, அத்தனை பணத்தோட, பழக்கடையில் நின்னது என் முட்டாள் தனம். பணம் போச்சு... மாம்பழம் மிஞ்சியது. அபிராமி கல்யாணமும் நிச்சயதார்த்தம் வரைக்கும் வந்து அதோட நின்னுபோச்சு.''

சாரு கேட்டுக் கொண்டிருந்தாள் மௌனமாய்.

''ஒரு மூவாயிரத்துக்காக அவங்க இத்தனை தயவு தாட்சண்யமில்லாம நடந்துட்டிருக்க வேண்டாம். எங்களாலேயும், அவங்க கெடுபிடிக்குச் சரியா ஈடு கொடுக்க முடியலை. உடனே ஆயிரக் கணக்குல பணம் புரட்டுற அளவுக்கு என்கிட்ட அத்தனை சாமர்த்தியமும் இல்லே.''

சீனுவாசனின் கம்மிய குரல்... இது ஒன்று போதும் - சாருவை ஆயுசுக்கும் சித்திரவை செய்ய....

இந்த மூவாயிரத்தை - அந்த மனிதருக்கு எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றுதான் முயற்சி செய்தாள். முடியவில்லையே!

சாண் ஏறினால் முழம் சறுக்குகிற வாழ்க்கையில் அவளால் சாத்தியமாகக் கூடிய காரியமா அது?

அன்றிலிருந்துதான் அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். வேடிக்கையான தீர்மானம்.

முதல் தேதியிலிருந்து பத்து தேதி வரையில் செய்கிற திருட்டுக்களுக்கு பதினோராம் தேதி முதல் முப்பதாம் தேதி வரையில் பிராயச்சித்தம்!

அதுவும் எப்படி...?

கூடுமான வரையில், தான் அபகரித்த பர்சுகளிலிருந்த, கைப்பையிலிருந்த, விலாசங்களையெல்லாம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் வரிசைப்படி குறித்து வைத்துக் கொண்டாள். மாதம் ஒரு விலாசமாய்த் தேடிப் பிடித்து, அந்தக் குடும்பத்தினரை எப்படியாவது அறிமுகப் படுத்திக் கொண்டு, அவர்களிடம் பிரியமாய்ப் பழகி, இருபது நாட்களில் அவர்களுக்காக மாடாக உழைத்து விட்டு வந்து விடுவாள். இது முடியாத இடங்களுக்கும் வேறு விதத்தில்... குறிப்பிட்டிருந்த விலாசத்துக்கு அந்த நபருக்கு, எடுத்த பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மணியார்டர் செய்துவிடுவது.

இது வரையில் இம்மாதிரி எத்தனை பேருக்கு உழைத்திருக்கிறாள் இவள்!

சீனுவாசனின் பெண் அபிராமிக்கு, பாங்க் வேலை ஒண்ணு கிடைக்கவிருந்த சமயத்தில் அதற்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் கட்ட வேண்டும் என்பது தெரிந்தவுடன் ஒரு வாரத்தில் தன்னால் முடிந்த தொகையை, சேமித்து வைத்திருந்த திருட்டுப் பணத்தை அப்படியே அவள் கையில் கொண்டு வந்து கொடுத்தாள்.

''ஐயோ, எதுக்கும்மா?''

''இருக்கட்டும். அவசரத்துக்கு வச்சுக்கோங்கோ.''

''உங்க அப்பா அம்மாவுக்குத் தெரியுமா?''

''எதுக்கு? இது என் சொந்தப் பணம்.''

''நீ எங்களுக்கு ஒட்டா உறவா? என்னமோ அன்னிக்கு டவுனுல தேச்சையா அறிமுகமானே. இத்தனை தூரம் நெருங்கி வரணும்னு... அது ஏதோ விட்ட குறை தொட்ட குறைதான்.''

''இருக்கலாம்.''

''உனக்கு இருக்கற மனசு அந்தப் பிள்ளையப் பெத்தவாளுக்கு இல்லையே!''

சீனுவாசன் இது மாதிரி வாயாரப் புகழ்கிற சமயங்களில் மாத்திரம் இவள் பாறையாய் இறுகிப் போய் உட்கார்ந்திருப்பாள்.

''நீ எங்கே இருக்கே?''

இந்தக் கேள்விக்கு, அவள் ஒருபோதும் தன் சொந்த விலாசத்தைச் சொன்னதேயில்லை.

'தாம்பரத்துல', 'பல்லாவரத்துல,' 'மயிலாப்பூர்லே', இப்படி விதவிதமான விலாசங்களைத் தருவாள்.

ஆனால், எந்த மனிதரையும் அதிகமாய் நெருங்க விட்டதில்லை. தன் கடன் தீரும் வரையில் அவர்களது குடும்பத்தில் ஒருத்தியாய் இழைய வேண்டியது. அதற்குப் பின் அவர்களுடைய நட்பைப் பட்டென ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் கத்தரித்துக் கொள்ள வேண்டியது - இதுவே வழக்கமாய்ப் போய்விட்டது.

சீனுவாசன் மகளுக்குத் தன் கையிருப்பைக் கொடுத்து உதவியவள், அவரது மனைவி ஜானகியை அவசரமாய் ஆஸ்பத்திரியில் சேர்க்க அருகிருந்து இவர்களுக்கு மூத்த மகள் போல உதவியவள், ஜானகி உடல் தேறி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிய மறு நாளிலிருந்து அந்த வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

'என் கடமை, இதோட தீர்ந்தது.'

இதற்குப் பின் இதோ ராஜா அண்ணாமலையும் வழியாக எத்தனையோ முறை போய் வந்தபோதும் இங்கு ஒரு தெரிந்த மனிதர் இருக்கிறார் என்கிற ஸ்மரணையே இல்லாமல் எப்பொழுதாவது சீனுவாசனையோ, அபிராமியையோ பார்க்க நேரிட்டால் அவர்கள் கண்ணில் படாமல் சட்டென நகர்ந்துவிடுவாள்.

எப்படித்தான் அவளால் அத்தனை சுலபமாய், பழகியவர்களை ஒதுக்க முடிந்ததோ!

இது போல எத்தனை பேரிடம் பழகி விட்டுத் 'திடுதிப்'பென விலகியிருக்கிறாள்!

முதன் முதலில் இவளுக்குத் தனது ராசியான கரங்களால் இத் தொழிலை ஆரம்பித்து வைத்தவள் பவானி. இவளது முவரியைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களது வீட்டில் கட்டிலோடு கட்டிலாய்க் கிடந்த ஒரு கிழவிக்கு எத்தனையோ நாள் நர்ஸ் மாதிரி பணிவிடை செய்திருக்கிறாள்..






''பவானி வீட்டில் அவ மாமியாருக்கு வேண்டிய சிசுருஷை செஞ்சிருக்கேன். கிட்டத்தட்ட ரெண்டு மாசம். நடுவுல வந்த ஒண்ணாந் தேதியில இருந்து பத்தாம் தேதி வரை என் வழக்கமான தொழிலுக்குக் கூடப் போகலை.''

சாரு பெருமூச்செறிந்தாள். அவளது இமைகள் கண்ணீர் சுமை தாளாமல் கனத்துக் கவிந்திருந்தன

ராஜா இன்னமும் பிரமிப்பு நீங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''பவானி ரொம்ப நல்லவ. அவ குடும்பம், என்னைத் தங்களிலே ஒருத்தியாவே பாவிச்சது. அந்தக் கிழவிகூட என் கிட்ட ரொம்பப் பிரியமா இருந்தா. தினமும் காலம்பற அம்மா கிட்ட 'ஆபீசுக்கு சீக்கிரமாப் போக வேண்டியிருக்கு. அங்கே போய்ச் சாப்பிட்டுக்கறேன்'னு சொல்லிட்டுக் கிளம்பிடுவேன். மாம்பலம் ஸ்டேஷனுக்குப் போறப்பவே ஹோட்டல்லே ரெண்டு இட்லி பார்சல் கட்டி வாங்கிப்பேன். பவானி ஆபீசுக்குக் கிளம்பறதுக்குள்ளேயே நான் அங்கே போய் நிற்பேன். என்னைப் பார்த்ததும் தான் பவானி நிம்மதியா மூச்சு விடுவா.''

''எத்தனையோ தடவை என்னை அவங்க வீட்டுல சாப்பிடச் சொல்லி அந்தக் குடும்பமே வற்புறுத்தியிருக்கு. ஆனா, அவங்க வீட்டுல தண்ணியத் தவிர, வேற எந்த ஆகாரமும் சாப்பிட்டதில்லே. சாயந்திரம் பவானி வர்ற வரைக்கும் அந்தப் பாட்டிக்குக் குளிப்பாட்டி, உடம்பு துடைச்சு - அவ அடம் பிடிக்கிற சமயத்துல அவளை எப்படி வழிக்குக் கொண்டு வர முடியுமோ, அப்படிப் பேசி, சாப்பாடு போட்டு அவளோட அசிங்கத்தையெல்லாம் எடுத்து சுத்தம் செஞ்சு, தன் மருமகளைபத்தி அவ பாடற வசை புராணங்களையெல்லாம் காது கொடுத்துக் கேட்டுட்டு என்னைப் பத்தியும் என் குடும்பத்தைப் பத்தியும் அவ துருவித் துருவி விசாரிக்கறப்ப பொறுமையா பொருத்தமான பொய்யாச் சொல்லி... கிழவிக்கு கல்கியும், கலைமகளும் வியாசர் விருந்தும் வரி விடாமப் படிச்சுச் சொல்லி...

''பவானி இந்த வேலைக்குச் சம்பளமா நூத்தியம்பது ரூபா தர முன் வந்தா. இருக்கட்டும். இந்தப் பணம் உங்க கிட்டயே இருக்கட்டும். மொத்தமா, நாலஞ்சு மாசம் சேர்ந்தவுடனே, நானே கேட்டு வாங்கிக்கறேன்'னு சொல்லிட்டேன். ஆனா, அப்புறம் வாங்கிக்கலை. கரெக்டா ரெண்டு - ஏன் ரெண்டரை மாசம் என் உழைப்பை அந்த வீட்டுக்கு தந்துவிட்டு, ஒரு நாள் நானாவே போறதை நிறுத்திக்கிட்டேன்.''

''அவ உன்னைத் தேடி வரலையா?''

''தேடியிருப்பா. பல்லாவரத்துல. ஏன்னு கேட்டா, நான் பல்லாவரத்துல இருக்கறதா இல்லே சொல்லி அட்ரஸ் கொடுத்திருந்தேன்?''

ராஜா தன்னருகில் உதிர்ந்து விழுந்த கல்யாண முருங்கைப் பூவின் செந்நிறத்தையே வெறித்தபடி உட்கார்ந்திருந்தான்.

''உனக்கு போலீஸ்லே மாட்டிப்போம்கிற பயமே இல்லையா?''

''அதெல்லாம் ஆரம்பத்துல. இப்ப இல்லே ராஜா. இந்த மெட்ராஸ்லே எத்தனை பெண் திருடிங்க இருக்காங்க! ஒவ்வொருத்தியையும் எனக்குத் தெரியும். ஆனா, என்னை ஒருத்திக்கும் தெரியாது. உனக்குத் தெரியுமா? பஸ்ஸுல எத்தனை லேடீஸ் குறத்திங்க பக்கத்துலயும், குப்பத்துப் பொண்ணுங்க பக்கத்துலேயும் உட்கார்ந்து எங்கே அவ அழுக்குத் தங்கள் மேலயும் படிஞ்சிடுமோன்னு பயந்து கொண்டு என் பக்கத்துல உட்கார்ந்திருக்காங்க தெரியுமோ?''

''போதும் சாரு. இன்னியோட இந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுடு.''

''நான் இது மாதிரி எத்தனை தடவை நினைச்சேன் தெரியுமா? ஆனா, ஒவ்வொரு தடவையும் நான் அந்த மாதிரி நினைக்கறப்ப எல்லாம் என் எதிரே பெரிசா ஒரு பிரச்சினை உருவாகும். பவானி வீட்டுல வேலைல செஞ்சுட்டு, அவகிட்ட சொல்லிக்காம நின்னேன் இல்லியா? அப்பவே நினைச்சேன் 'பட்டினியால, குடும்பமே செத்தாலும் சரி, இனிமே இந்தத் திருட்டுத் தொழில் வேண்டாம்'னு. அந்தச் சமயம் பார்த்து கல்யாணி மறுபடியும் வயித்தைச் சாய்ச்சுகிட்டு வந்து நின்னா.''

சாரு தான் அப்போது அடைந்த வேதனைகளை வாய்விட்டுச் சொன்னபோது உருகிப் போனான் அவன்.

''கல்யாணியைப் பார்த்ததுலேயிருந்து எனக்கு இந்தக் கல்யாண ஆசையே போயிட்டது ராஜா. இப்ப என் எதிர்பார்ப்பு எல்லாம் எப்படியாவது இந்தக் குமார் தன் பொறுப்பை உணர்ந்து என் சுமைகளைப் பகிர்ந்துக்க மாட்டானாங்கறதுதான். இதுக்காகவே நான் அவனை நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரியெல்லாம் பேசியிருக்கேன். கல்யாணியைக் கூட - அவளுக்கு ரோஷம் வந்து அந்தச் சாக்குலயாவது புருஷன் வீட்டுக்குப் போனா பரவாயில்லையேங்கற நினைப்புலதான் திட்டியிருக்கேன்.''

''நான்கூட உன் பேச்சை ஒரு அகம்பாவக்காரியோட திமிர்ப் பேச்சா நினைச்சிருக்கேன் சாரு....''

''உனக்கு என் அவஸ்தை புரிகிறதா ராஜா? என்னோட நிலைமை புரிகிறதா? ஒவ்வொரு நாளும் இந்தக் குடும்பம் என் கைய எதிர்பார்த்து நிற்கிறது. அப்பாவோட வியாதிக்கு மருந்து வாங்கக் கூடக் காசில்லாம, என்னோட அப்பாவித் தங்கை தம்பிகள் படிக்கறதுக்கு வசதியில்லாம, வீட்டு வாடகை கொடுக்க வழியில்லாம, சாப்பாட்டுக்குத் திண்டாடறதைப் பார்த்துட்டு என்னால் சும்மாயிருக்க முடியல்லே. இதோ, இப்பக்கூட நான் கௌரவமான வேலை கிடைச்சா போகத் தயார். வேலை தேடித் தேடி அலுத்துப் போயிட்டேன். சின்ன வேலைக்குக் கூட ஆயிரத்தெட்டு சிபாரிசு வேண்டியிருக்கு. குமாரை எங்க அப்பா படிக்க வச்சதுக்கு என்னைப் படிக்க வச்சிருக்கலாம். இந்த எரிச்சல்லே, தேடிக்கிட்ட வேலை இதுதான். எல்லா ஆபீஸ்லேயும் எனக்கு நானாவே உழைச்சு முடிச்ச உடனே சம்பளம் தருவாங்க. நான் எனக்கு வேண்டிய சம்பளத்தை முன்னாலேயே எடுத்துக்கறேன். அப்புறமா அவங்களுக்கு என் உடம்பைச் செருப்பாத் தச்சுப் போடவும் தயாரா இருக்கேன்.''

''எனக்கு ஒரு வேல்லை கிடைச்சா உன்னை ராணி மாதிரி உட்கார்த்தி வச்சு சோறு போடுவேன்.''

''ஆமா... உனக்கு ஒரு வேலை கிடைக்கறப்ப பார்த்துக்கலாம்....''

''ஏன் அப்படிச் சொல்றே சாரு?''

''நீங்க எல்லாரும் நாகுக்குப் பார்ப்பீங்க. இப்ப குமாரைப் பாரு. என்னமோ அவன்தான் உலகதுல இல்லாத அதிசயமா டிகிரி வாங்கியிருக்கானாம். அன்னிக்கு 'பேப்பர்லே ஒரு ஸ்வீப்பர் வேலை விளம்பரம் வந்திருக்கு. அப்ளை பண்ணப் போறேன்'னு குதிச்சான். எல்லாம் வாய்ப் பேச்சோட சரி. நானும், இவனுக்கு டெம்பரரியா நாலஞ்சு இடத்துல சொல்லி வச்சு, வேலை வாங்கித் தர முயற்சி பண்ணினேன். உத்தியோகம் கிடைக்கறதே குதிரைக் கொம்பா இருக்கற காலத்துல, இவன், தனக்குப் பெரிய கலெக்டர் உத்தியோகம் கிடைக்கும்னு நினைச்சிட்டு வீட்டோட உட்கார்ந்திருக்கான்...

''ஏறுமாறுன்னா - 'நான் இந்த வீட்டை விட்டே ஓடிப் போயிடறேன். உன் கையாலே சாப்பிடறதுக்குப் பிச்சை எடுத்துச் சாப்பிடறது மேல்'னு கத்துவான். உடனே அம்மா உட்கார்ந்து 'ஹோ'ன்னு அழுவா. வீட்டுல இருக்கற அத்தனை ஜீவராசிகளும் என்னை ஒரு சர்வாதிகாரியப் பார்க்கற மாதிரிப் பார்க்கும்.''

ராஜா அவளது வலக் கரத்தை மெல்லப் பற்றினான்.

''நான் அப்படி நினைக்க மாட்டேன். சத்தியமா அந்த மாதிரி ஒரு நாளும் நினைக்க மாட்டேன். எனக்கு எந்த வேலை கிடைச்சாலும் சரிதான் சாரு. ஏத்துக்க நான் தயார்.''

அவள், அவனது விழிகளையே ஊன்றிப் பார்த்தாள். முதன் முதலாய்த் தனக்கு ஒரு நல்ல சினேகிதன் கிடைத்த திருப்தியில் - உதடுகள் நன்றிப் பெருக்கில் துடித்தது.

''இனிமேல் உனக்காக வேலை தேடறதுதான் என்னோட முக்கிய வேலை

ராஜா.''

''ஆனா, ஒரு கண்டிஷன். எனக்கு வேலை கிடைச்ச உடனே நீ இந்தத் தொழிலை விட்டுடணும்.''

''விட்டுட்டு?''

''விட்டுட்டு வீட்டோட நல்ல பொண்ணா இரு சாரு. உங்க அப்பா என் ஜாதகத்தைப் பார்த்துட்டு 'அவிட்ட நட்சத்திரப் பொண்ணுதான் பெண்டாட்டியா வருவா,' ன்னு சொல்லியிருக்கார்...''

அவன் சிரித்தான். தெம்பாக, புத்தம் புது நம்பிக்கையில் பூரித்துச் சிரித்தான்.

'சாருவால், எனக்கு ஒரு வேலை கிடைத்துவிடும். அதன் பிறகு நான்தான் அக்குடும்பத்தின் தலைவன். சம்பளத்தை அப்படியே மாமா கையில் கொண்டு வந்து கொடுத்து விடுவேன். அம்மா, ஏதாவது நினைப்பாளோ? இதில் நினைப்பதற்கு என்ன இருக்கு? மாமா வீட்டுல தானே நாம் இருக்கோம்? அவருக்குத் தர வேண்டிய மரியாதையைத் தர வேண்டாமா? வேலை கிடைச்சதும் அம்மா தனியாப் போயிடலாம்னு சொல்லுவாளோ? சொன்னாலும் உனக்கு எங்கேடா போச்சு புத்தி? 'அதெல்லாம் முடியாது'ன்னு தீர்மானமாச் சொல்ல வேண்டியது தானே?'

இந்த நினைப்பே, எத்தனை இதமாக இருக்கிறது!

''சரி வா வீட்டுக்குப் போகலாம்.'' அவன் அவளுடைய கரத்தைப் பற்றி இழுத்தான்.

''வீட்டுக்கா! சரியாப் போச்சு. ரெண்டு மாசம் முன்னாடி செஞ்ச திருட்டுக்குப் பிராயச்சித்தம் தேடிக்கப் போயிட்டிருக்கேன்.''

''எங்கே சாரு?''

''போற போது எங்கே, ஏதுன்னு கேட்கக் கூடாது. நான் எப்பவும் போல சாயந்திரம் அஞ்சரை மணிக்கு 'டாண்'னு வீட்டுல இருப்பேன்.''

''அப்ப நான்?''

''சமத்தா வீட்டுக்குப் போ.''

அவள் பிய்த்துக் கொண்டு கிளம்பினாள். அவளது நினைவைச் சுமந்தபடி வீட்டுக்கு வந்த ராஜாவுக்கு, குமாரின் இடக்குப் பேச்சோ பங்கஜத்தின் குத்தல் மொழிகளோ எதுவுமே உறைக்கவில்லை.

''காலம்பற போன பெரிய மனுஷன் இப்பத்தான் வீடு திரும்பறாரு. ஐயா, எந்தக் கோட்டையப் பிடிச்சுட்டு வந்தாப்பல?''

''நேரங் கெட்ட நேரத்துல வந்தா உட்கார்த்தி வச்சுச் சோறு போட, இது என்ன சத்திரமா?''

''ஏண்டா ராஜா, எங்கேடா போய்த் தொலைஞ்சே? எல்லாரும் பேசற



பேச்சுக்களைக் கேட்டுட்டு... ஏண்டா சோத்தைத் தின்னுட்டு எங்கேயாவது போயிருக்கக் கூடாதோ?''

ராஜா எல்லாவற்றையும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டான். ''எனக்குச் சாப்பாடு வேண்டாம். ராத்திரி ஒரு வழியாச் சாப்பிட்டுக்கறேன்.''

குமார், மூலையில சாய்ந்தபடி ராஜாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன புதுசா வாழ்வு வந்துட்டது இவனுக்கு? மூஞ்சியில ஆயிரம் வாட்ஸ் பல்பு எரிகிறது! ஒரு வேளை, இவன் அதிர்ஷ்டம் நல்ல வேலை கிடைச்சிருக்குமோ?'

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவனால். எப்படி முடியும்? இத்தனை வருஷமாக வீட்டோடு உட்கார்ந்திருக்கிறான் இவன். இவனுக்குக் கிடைக்காத வேலை நேற்று புதுசாய் வந்தவனுக்குக் கிடைப்பதாவது...

ஆனால் அன்று மாலை சாரு வீட்டுக்கு வந்ததும் ராஜாவின் முகமெல்லாம் மலர்ந்ததும்... அவளுமே இவனைப் பார்த்துப் புன்னகைத்ததும்... இரவு சாப்பிட அமர்ந்தவள் குடும்பத்திலுள்ள அத்தனை பேரையும் விட்டுவிட்டு, ''ராஜா சாப்பிட்டாச்சா அத்தை?'' என்று விசாரித்ததும்... இந்த விசாரிப்பிலேயே விசாலம் மனம் குளிர்ந்து போனதும்... மறுநாள் சாரு குளிக்கக் கிளம்புகையிலே, ராஜா 'குடுகுடு'வென ஓடி அவளுக்காகக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுத்ததும்... வேலைக்குக் கிளம்பும் முன் ராஜாவைத் தனது இருண்ட காமரா அறைக்கு அழைத்துப் போய், பழைய டிரங்குப் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு என்னவோ பேசியதும்... தோளில் பையை மாட்டியபடி வாசற்படி இறங்கியவள் வீட்டிலிருந்த அத்தனை மனிதர்களையும் ஒரு புழுப் போலப் பாவித்து என்னமோ ராஜாதான் தனக்கு ஒரே உறவினர் என்கிற மாதிரி, அவனிடம் மட்டும், ''போயிட்டு வரட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டதும்... மாலையில் வீடு திரும்புவதே இவனுக்காகத்தான் என்பது போல, உள்ளே நுழையும் போதே, ''ராஜா எங்கே அத்தை?'' என்று விசாரிப்பதும்...

பங்கஜத்துக்கு அடி வயிற்றில் நெருப்பை வைத்துக் கட்டினாற் போல இருந்தது. விசாலத்துக்கோ குளிரக் குளிரப் பன்னீரால் அபிஷேகம் செய்வித்தது போல இருந்தது. குமாருக்கும், கல்யாணிக்கும், தங்கையைப் பற்றி இடித்துரைக்கச் சரியானதொரு சந்தர்ப்பம் கிடைத்தாற் போல இருந்தது...

தன் மகள் காலா காலத்தில் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாய் வாழ வேண்டும் என்கிற - ஒரு தாய்க்கே உரிய நினைப்புகள் பங்கஜத்துக்கு இல்லாமல் போய் விடவில்லை. இருந்தது. ஆனால், தன் மகளுக்குக் கணவனாக வரப் போகிறவன் இந்த ராஜாவைப் போல ஒரு வேலை வெட்டியில்லாத தண்டச் சோறாக இருப்பதை அவள் விரும்பவில்லை. மேலும் தனக்குப் பிடிக்காத, எந்தக்

காலத்திலும் ஒத்துப் போக முடியாத ஒருவன் தனக்கு மாப்பிள்ளையாக வருவதை அவளால் சகித்துக் கொள்ளவே முடியாது.

இது அனைத்தையும் விட, 'இப்ப இவளுக்குக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? இவளை ஒத்த பெண்கள் எல்லாரும் இன்னும் படிப்பையே முடிக்கலை. இப்பவே பிடிச்சுக் கல்யாணத்தைப் பண்ணிட்டு 'வசவச'ன்னு குழந்தைகளைப் பெத்துக்கணுமா? இல்லை. அப்படியாவது பெரிய இடத்துச் சம்பந்தம், மாப்பிள்ளைக்குக் கை நிறையச் சம்பளம் இதெல்லாமாவது இருக்கா? ஒண்ணுமில்லே. நாளைக்கே கல்யாணமானாக்கூட, மாப்பிள்ளையும் அவன் அம்மாவும் இங்கேயே உட்கார்ந்து மூணு வேளையும் மூக்கை பிடிக்கச் சாப்பிடற ஜென்மங்கள்தான் என்கிற எண்ணமே அதிகம். போதாக் குறைக்கு கல்யாணி வேறு அடிக்கடி குத்திக் காட்டுகிறாள்.

''அம்மா, உனக்கென்ன குறைச்சல் போ. ஆடிக்குன்னும் தீபாவளிக்குன்னும் மாப்பிள்ளைய வருந்தி வருந்தி அழைக்க வேண்டிய தேவையே இல்லே. மாப்பிள்ளைதான் வீட்டு மாப்பிள்ளையாப் போயாச்சே.''

''நான் பொறந்தகத்தோட இருக்கறதாச் சொல்லிச் சொல்லிக் காமிப்பாளே உன் பொண்ணு? இப்ப அவ என்ன செய்யப் போறாளாம்? தான மட்டும் உட்கார்ந்தது போறாதுன்னு தன் புருஷன், மாமியார் எல்லாரையும் சேர்த்து வச்சுட்டு இங்கேயே ஸ்திரமா உட்கார்ந்துடப் போறா.''

''இப்ப என்னமோ அத்தை கம்முனு இருக்கா. பார்த்துட்டேயிரு. உனக்குச் சம்பந்தியா ஆனதுக்கு அப்புறம் அவ என்ன துள்ளல் துள்ளப் போறான்னு...''

''குமாரைத் தண்டச் சோறும்பாளே! இப்ப, இவ பார்த்திருக்கற புருஷன் எப்படியாம்? பணமா அரிச்சுக் கொண்டு வந்து கொட்டப் போறாராமா?''

விசாலத்தின் செவிகளிலும் இந்த வார்த்தைகள் விழத்தான் செய்தது. ஆனால் அவள் இதையெல்லாம் லட்சியமே செய்யவில்லை.

'ஆனானப்பட்ட சாருவே தனக்கு இந்த அகமுடையான் போறும்கற மாதிரி நடந்துக்கறா. இவளுகளுக்கெல்லாம் என்ன வந்தது? என் பிள்ளைக்கு இருக்கற அழகு போதாதா? என் பிள்ளைக்கு இருக்கற சமர்த்து போதாதா? அவன் போறாத காலம். ஒரு உத்தியோகம் கிடைக்க மாட்டேங்குது. ஒரு வேலை மட்டும் கிடைச்சா என் மகனைக் கையில் பிடிக்க முடியுமா?'

'என்ன இருந்தாலும் என் பிள்ளையோட சாமர்த்தியம் யாருக்கும் வராது. பாரேன்... தனக்கு வேலையில்லைன்னாலும், தன் பெண்டாட்டிக்காவது ஒரு வேலை வேணும்னு எத்தனை முன் யோசனையோட இந்தப் பொண்ணை வளைச்சுப் போட்டிருக்கான்!'

'இந்தச் சாருவுக்கு இருக்கற வாய் கொஞ்சமா? நஞ்சமா? நாங்க ஊருல



இருந்து வந்த புதுசுல என்ன பேச்சுப் பேசினா! இப்ப எப்படித்தான் பெட்டிப்பாம்பா அடங்கினா? எல்லாம் ராஜாவோட முகராசி.''

சாருவிடம் விசாலம் இன்னமும் அதிகமாக ஈஷிக் கொள்கிறாள். என்னமோ இவளுக்காகத்தான் தான் இந்த வீட்டிலேயே அடியெடுத்து வைத்தது போல.

''பங்கஜம்... என்னடி காப்பிய இத்தனை கறுப்பா கலந்திருக்கே?''

''ஏன் தினம் போலத் தானே கலந்திருக்கேன்?''

''நல்லாத்தான் இருக்கு. தினமும் இப்படி டிகாஷனைக் கொட்டிக் காப்பி கலந்து கொடுத்தா, குழந்தை உடம்பு என்னத்துக்காகும்? வெய்யில்லே அலையறதே பித்தத்தைக் கிளப்பி விட்டிருக்கும். காப்பி வேற சேர்ந்தா பித்தம் இன்னும் அதிகமாகாதோ?''

''கல்யாணி...! மோர் கடையறதுக்கு முந்தி ஒரு கரண்டி தயிர் எடுத்து வை. பாவம், காலங்கார்த்தாலே சுடச்சுட ரசமும் குழம்பும் சாப்பிட்டுட்டு ஓடறது அது. ஜில்லுனு கொஞ்சம் தயிர் சாதம் சாப்பிடச் சொல்லேன்.''

''சாரு. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. வேலையிருக்கு... அது இதுன்னு சாக்குப் போக்குச் சொல்லக் கூடாது. நல்லா எண்ணெய் தேய்ச்சுக் குளி. உன்னால தேய்ச்சுக்க முடியலைன்னா சொல்லு. நான் தேய்ச்சு விடறேன்.''

''ஏண்டியம்மா, ராத்திரியெல்லாம் சாருவா இருமினா?''

பங்கஜத்துக்கும் கல்யாணிக்கும் தாங்க முடியாத எரிச்சல். ரங்குவிற்கு இதைப் பற்றிய கவலையே இல்லே. ஏன்... வீட்டுக்குள் நடக்கும் இந்தக் 'கசமுச' எதுவுமே அவர் வரையில் வராது. அப்படியே வந்தாலும் விசாலம்தான் ஏதாவது நச்சரிப்பாள்.

''ரங்கு, நம்ம ராஜாவுக்கு எப்போ கல்யாண பலன் வர்றது? கொஞ்சம் பார்த்துச் சொல்லேன்.''

''முதல்லே அவனுக்கு உத்தியோக பலன் வரட்டும். அப்புறம் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்.'' என்பார் அவர்.

''ஒரு சிலருக்கு, வரப் போற பொண் அதிருஷ்டத்தைக் கொண்டு வருவா.''

''ஆகட்டும், பார்க்கலாம்.''

''என்னடா பார்க்கலாம்? உனக்கும் வயசாச்சு, எனக்கும் வயசாச்சு. ஏதோ உடம்புல தெம்பு இருக்கறப்பவே நல்ல காரியத்தைச் செஞ்சு பார்க்கறதை விட்டுட்டு நாளைக் கடத்தறது முட்டாள்தான். 'சுபஸ்ய சீக்கிரம்'னு வேற எதுக்காகச் சொல்றது?''

''இந்தக் காலத்துல மனுஷ புத்தி எப்படி மாறும்னு சொல்லவே முடியாதுடா. இன்னிக்கு என் பிள்ளையாண்டான் வேலை வெட்டி இல்லாம இருக்கான். ஏதோ, 'உட்காருடா மனையில,'ன்னு ஒரு அதட்டல் போட்டா, 'ஆகா சரிதாம்'பான்.

நாளைக்கே அவனுக்குன்னு ஒரு அந்தஸ்து வந்துட்டதுன்னா நாம சொல்றதைக் கேட்பானோ?''

இப்படிப் பூடகமாய் தன் மகனுக்கென்று ஒரு தகுதி வந்து விட்டால் சாருவை விடவும் உசத்தியான பெண்கள் அவனுக்காக மாலையும் கையுமாய் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுவான்.

குமார், ராஜாவைத் தனியாகச் சந்திக்கும் பொழுதெல்லாம் ''என்னடா மாப்பிள்ளே, வேலை தேடி அலையறதைவிட ஒரு பொண்டாட்டி தேடிக்கறது சுலபம்னு முடிவு கட்டிட்டியாக்கும்? இந்த மொகரைக்குக் கல்யாணம் ஒண்ணு கேட்குதாக்கும்?'' இப்படி நிஷ்டூரமாய் ஏதாவது பேசுவான்.

ராஜா இத்தனையையும் பல்லைக் கடித்துச் சகித்துக் கொண்டான். சாருவிடமும் 'பொறுமையிழக்கக் கூடாது.' என்று உபதேசித்தான்.

''ஒரு வேலை மட்டும் கிடைச்சுடட்டும்-சாரு. அப்புறம் பாரேன்.''

சாருவும் சும்மா சொல்லக் கூடாது - தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் இவனது வேலைக்காகச் சொல்லி வைத்தாள்.

**அ**ன்று-

அவள், அவனிடம் மிக நம்பிக்கையோடு பேசினாள், ''ராஜா, அனேகமா இன்னும் ஒரு மாசத்துக்குள்ள உனக்கு வேலை கிடைச்சுடும்.''

''எப்படி? எப்படி சாரு?''

''நாலு மாசத்துக்கு முன்னாடி நான் எடுத்த பர்ஸ் சொந்தக்காரி மிஸ் ஷீலா தேவி வீட்டுக்கு நேத்திக்குப் போனேன். அவ பெரிய கம்பெனியில நல்ல வேலையில இருக்கறதாய்க் கேள்விப்பட்டேன். அவ வீட்டுக்குத்தான் இன்னிக்கும் போறேன்.''

''அங்கே உனக்கு என்ன வேலை சாரு?''

''அவளுக்கு ஏழு வயசுல ஒரு தங்கை. அத்தனை பெரியவளுக்கு அத்துனூண்டு தங்கையான்னு எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருந்தது. அப்புறம்தான் அவ சொன்னா, அந்தப் பொண்ணு அவ அப்பாவோட இளைய தாரத்துப் பெண்ணாம். அம்மாக்காரி, குழந்தையை விட்டுட்டு எங்கேயோ ஓடிட்டா. பெத்தவர் இரண்டு வருஷத்துக்கு முன்னாடி அவுட். பொண்ணு சரியா வளர்க்கப்படாம, படிப்புல மக்கா இருக்கு. ஸ்கூல் டீச்சரைக் கண்டாலே 'ஓ'ன்னு அலர்றது. அதனால் என்னைத் தினமும் வந்து டியூஷன் எடுக்கச் சொல்லியிருக்கா. காலம்பற போனா சாய்ந்திரம் நாலு, நாலரைக்கெல்லாம் வந்துடுவேன். அந்த ஷீலாவுக்கு நிறையப் பெரிய மனுஷர்களையெல்லாம் தெரியுமாம். ரொம்பவும் நல்லவளா இருக்கா. கேட்டுத்தான் பார்க்கலாமேன்னு



இருக்கேன்.''

''கேளு, கேளு. அவ மாத்திரம் எனக்கு ஒரு வேலை போட்டுத் தரட்டும். தினமும் அவளைச் சுத்தி வந்து நமஸ்காரம் பண்றேன்.''

''உதைப்பேண்டா, அவளை எதுக்கு நீ சுத்தி வரணும்?''

''ஏயேய், என்ன நீ 'டா' போடறே?''

''அப்படித்தான். மரியாதையெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறமாத்தான்'' அவள் சிரித்தபடியே கிளம்பினாள்.

''அப்பா வரட்டுமா?''

''ஆகா சரிம்மா. வரப்போ எனக்குக் கொஞ்சம் மாத்திரை வாங்கி வந்துடு. தீர்ந்து போச்சு.''

அவள் படியிறங்க, விசாலம் வேகமாய் வாசலுக்கு ஓடி வந்தாள். ''அம்மா, சாரு...''

''என்னம்மா இது... போறப்போ கூப்பிடறே?''

''நேத்து அரை முழம் மல்லிகைப் பூவை எடுத்து ஈரத்துணியில சுத்தி வச்சிருந்தேன். காலம்பற சாருவை வச்சுக்கச் சொல்லணும்னு இருந்தேன். மறந்தே போயிட்டேன். இங்கே வாடி கண்ணு வச்சு விடறேன்.''

''போறும் உன் கரிசனம். அதுக்காக கிளம்பினவளைப் போய்க் கூப்பிடணுமாக்கும்.''

ராஜா அம்மாவிடம் ரகசியமாய்க் கடிந்து கொண்டான்.

''ஆமாண்டா. நான் சொல்லிக் குழந்தைக்கு எதுவும் ஆயிடாது. ஊருல விசாலத்தம்மா எதிரே வந்தாலே லட்சுமி கடாட்சம்னு தெரு முழுக்கச் சொல்லுமே! அதுக்குள்ள மறந்துட்டியாக்கும்?''

''அது சரி. ஊருல இருக்கறவங்களுக்கெல்லாம் லட்சுமிகடாட்சத்தை இப்படி ஒரேயடியா நீ வாரி வழங்கியிருக்கவும் வேண்டாம். இன்னிக்கு நாம இப்படி சந்தியில நின்னிருக்கவும் வேண்டாம்.''

ராஜாவின் வார்த்தைகளைக் கேட்டு, தெருவில் இறங்கிய சாரு திரும்பிப் பார்த்து, 'களுக்'கிட்டுச் சிரித்து விட்டுப் போனாள்.

அதுதான் அவளின் முகத்தில் ராஜா பார்த்த கடைசி சிரிப்போ!

**மா**லை ஐந்து மணி ஆகியும் சாரு வராததால வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான் ராஜா.

''சாருவுக்கு இப்பவே புடிச்ச இட்லியா வார்த்து வைக்க வேண்டாம். ஆறி அவலாப் போயிடும். வரட்டும். வந்தவுடனே சூடா வார்த்துத் தரலாம்.'' உள்ளே விசாலத்தின் குரல்.

மணி ஆறு ஆகியும் சாரு வராதபோது ராஜா எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தான்.

"இன்னும் ஏன் குழந்தையைக் காணோம்?"

ரங்கு கையிலிருந்த பஞ்சாங்கத்தை மூடி வைத்துவிட்டு நெற்றி சுருங்கி, கவலையுடன் ராஜாவை ஏறிட்டுப் பார்த்தார்.

இரவு எட்டு மணிக்கு அந்த வீட்டுப் பிரஜைகள் அத்தனை பேருமே, வாசலில் வந்து நின்று விட்டார்கள். அத்தனை பேர் முகத்திலுமே கவலை - கனமாக அப்பியிருக்க, ராஜா அடி வயிற்றில் கிலி பரவ - தெரு முனைக்குப் போய் நின்று அவள் வரும் திசையையே வெறித்தான்.

## 8

**ரா**ஜா, இங்கே தவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், சாருவும் என்ன செய்வது என்று அறியாமல் பீதியில் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

இதுநாள் வரையில் எத்தனையோ திருட்டுகளை மிகச் சாமர்த்தியமாகச் செய்தவள் - இன்று செய்யாத குற்றத்துக்காகப் போலீஸ் லாக்கப்பில் இருந்தாள்.

'ஐயோ, என்ன அசட்டுத்தனம்.'

'வீட்டுல இத்தனை நேரம், அத்தனை பேரும் அலறிக் கொண்டிருப்பார்களே!'

'கடவுளே, கடவுளே... இது என்ன சோதனை...'

அவள், அப்படியே சுவரோடு சரிந்து உட்கார்ந்து பெரிதாய் அழத் தொடங்கினாள்.

ஷீலா, இவளை மிகப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

ஆமாம், சாரு மட்டுமில்லை. ஷீலாவையும் சேர்த்து மொத்தம் எட்டுப் பேர் - லாக்கப்பில்!

'எத்தனை அவமானம்! அப்பாவுக்குத் தெரிஞ்சா உசிரை விட்டுடுவாரே.'

சாரு, காலையிலிருந்து நடந்ததை நினைத்துப் பார்த்து மண்டையில் ஓங்கிஓங்கி அறைந்து கொண்டாள்.

"ப்ளீஸ்.... என்னை விட்டுடுங்க. சத்தியமா இந்த வீட்டுல என்ன நடக்கிறதுன்னே எனக்குத் தெரியாது. குழந்தைக்குப் பாடம் சொல்லித் தரப் போனேன்..."

சொன்ன வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லி நாக்கு உலர்ந்து போனதே தவிர. இவள் வார்த்தையை யாராவது கேட்டால்தானே?



"ஸாரி... தயவு செய்து என்னை மன்னிச்சுடும்மா... உன்னை இப்படியொரு இக்கட்டுல மாட்டி விடுவேன்னு நான் கனவுல கூட நினைக்கலே." ஷீலா உண்மையான தவிப்புடன் சொல்ல, சாரு அவளை எரித்து விடுபவள் போலப் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் தகிப்பு, ஷீலாவைத் தலை குனியச் செய்ய அவளுமே, காலை முதல் மாலை வரையில் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்துக் கையைப் பிசைந்தாள்.

உண்மைதான். இது போல ஒரு அசம்பாவிதம் எந்தப் பெண்ணுக்கும் நேரிட்டு விடக்கூடாது. அதுவும் சாருவைப் போன்ற குடும்பப் பெண் இந்த அவப் பெயரைச் சுமந்து கொண்டு எப்படி வாழப் போகிறாள்!

எத்தனை சந்தோஷமாக, பூஞ்சிரிப்புடன் ஷீலாவின் வீட்டிற்குள் நுழைந்தாள் அவள்.

"**கு**ட் மார்னிங்."

"குட் மார்னிங் தீபு. அக்காவுக்குக் குட்மார்னிங் சொல்லு."

'தீபு' என்கிற தீபா, 'அவள் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்க முடியாது' என்கிற அடம் முகத்தில் ஜொலிக்க, ஷீலாவின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

சாரு, ஷீலாவின் பால் வெளுப்பான இடுப்புப் பிரதேசத்தையும் பால் பாயசத்தில் தவறி விழுந்த கரப்பான் பூச்சியைப் போல தமக்கையின் இடுப்போடு தன் கறுப்பு முகத்தைப் பதிய வைத்திருக்கும் தீபாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

'இப்பேர்ப்பட்ட அழகிக்கு இப்படியொரு தங்கையா?'

வியக்காமல் இருக்க முடியவில்லை அவளால்.

ஷீலா வெறும் வெள்ளைத் தோல் மட்டுமில்லை. அபார அழகு. இன்ன வயதென்று கணிக்க முடியாத அழகு. ஏதோ ஒரு கோணத்தில் ராஜகுமாரியைப் போலத் தோற்றமளித்த அவள், இன்னொரு கோணத்தில் ஒரு சினிமா நடிகையைப் போல இருந்தாள். இதற்கு அவள் முகத்திலிருந்த கம்பீரமும் உடம்பில் இருந்த அசாத்திய கவர்ச்சியுமே காரணமாக இருக்கலாம். முகம் மட்டும் லட்சுமிகரமாய் வட்டப் பொட்டும், பதவிசான பார்வையும் - தேகம் பார்ப்பவர்களின் மோகத்தைத் தூண்டும்படி இருந்தது.

தன் அழகு தெரிந்து. அதைத் தனது அலங்காரத்தால் மேலும் எடுப்பாகத் தோற்றமளிக்கும் வித்தை கற்றிருந்தாள் ஷீலா.

'ஆபீஸ்லே வேலை செய்யறவளுக்கு இத்தனை அலங்காரம்

அவசியந்தானா?' சாரு, தனக்குள் ஒரு முறை கேட்டுக் கொள்ளாமலில்லை.

இருந்தாலும், இது அவரவர் ரசனையைப் பொறுத்த விஷயம் என்பதாலும், ஒரு பெரிய நிறுவனத்தின் வெளிநாட்டுத் தொடர்புள்ள அலுவலகத்தின் மானேஜிங் டைரக்டர் ஒருவரின் அந்தரங்க காரியதரிசி இப்படித்தான் கவர்ச்சியாக உடை உடுத்த வேண்டும் போலிருக்கிறது என்பதாலும் அவள் இதைக் கண்டு கொள்ளாமல், தீபாவைத் தன் பக்கம் இழுப்பதிலேயே தனது கவனம் முழுவதையும் திசை திருப்பினாள்.

''தீபா, அக்காவை ஆபீசுக்குப் போக விடு. இங்கே வா. உனக்குக் கதை சொல்லுவேன்.''

''ஊஹூம். நீ அடிப்பே.''

''தீபு... 'நீ' சொல்லக் கூடாது. 'நீங்க' சொல்லணும்னு எத்தனை தடவை, சொல்லியருக்கேன்?''

ஷீலா சிறுமியை மிரட்ட, ''பரவாயில்லே. இருக்கட்டும். எது ஒண்ணையும் குழந்தைங்க கிட்ட வற்புறுத்தாதீங்க. நாம, பலவந்த படுத்தினா, இன்னமும் முரட்டுத்தனமும், எதுக்குமே அசைஞ்சு கொடுக்காத கல்லுளி மங்கத்தனமும்தான் அதிகமாகும். அவ போக்குலேயே விட்டுடுங்க. நான் பார்த்துக்கறேன்...''

சாரு, ஷீலாவிடம் சொல்லிவிட்டுத் தீபாவிடம் மிகச் சாதுரியமாகப் பேசத் தொடங்கினாள்.

ஷீலா நொடிக்கொருதரம் தனது கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உங்களுக்கு நேமாச்சன்னா நீங்க கிளம்புங்க...''

அவள் ஷீலாவைப் பார்த்துச் சொல்ல, ஷீலா சினேகிதமாய்ச் சிரித்தாள்.

''தாங்க் யூ. இப்ப எங்க பாஸ் வருவார். அவரோட கம்பெனியில் ஒர்க் பண்ற இன்னும் நாலைஞ்சு பேர் வருவாங்க. வீட்டுலேயே சின்ன 'டிஸ்கஷன்' வச்சிட்டிருக்கேன். அதுக்குப் பிறகுதான் ஆபீஸ் போகணும்.''

''ஓ...''

''நீ ஒரு ஹெல்ப் செய்யேன் சாரு.''

''சொல்லுங்க.''

''மாடியிலே தீபாவுக்காக ஒரு ரூம் ஒதுக்கி வச்சிருக்கேன். அங்கே இவளை அழைச்சிட்டுப் போயிடேன். இங்கே நாங்க ஆபீஸ் விஷயமாப் பேசறப்ப இவ கத்தி ரகளை பண்ணுவாளோன்னு-பயமாயிருக்கு.''

''ஓ.கே. மேடம்.''

[redacted]வின் கையைப் பிடித்து இழுக்காத குறையாக மாடியிலிருந்த - ஷீலா



குறிப்பிட்ட அந்த அறைக்குச் சென்றாள்.

அறை மிக அழகாக, துப்புரவாக இருந்தது. இதுவரையில் சாரு வேலை செய்யப் போன இடங்களிலேயே ஷீலாவின் பங்களா மட்டும்தான் நாகரிக வசதிகளுடன் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் பணத்தின் பெருமையைப் பறை சாற்றியபடி இருந்தது.

அடையாறில் - இந்திரா நகரின் ஒரு மூலையில் - அதிக ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் லட்சக்கணக்கான பணத்தை விழுங்கி விட்டு, அந்த பங்களா ஏகப்பட்ட கர்வத்துடன் தலை நிமிர்ந்து நிற்பதே ஒரு தனி அழகாய் இருந்தது.

தீபாவின் அறையே போதும் - ஷீலாவின் ரசனையுணர்வுக்கு வேறு மாதிரி தேவையே இல்லை.

'அந்தச் சின்னப் பெண்ணுக்குப் போய் இத்தனை பெரிய அறையா?'

அறையிலே சின்னதாய் மேசை, நாற்காலி, கண்ணாடி பீரோ நிறைய வெளிநாட்டுப் பொம்மைகள், சின்னஞ் சிறு டிரெஸ்ஸிங் டேபிள், ஒரு மூலையில் - ஜன்னலை ஒட்டி ஒற்றைக் கட்டில், பக்கத்திலேயே அறையை ஒட்டினாற் போலக் குளியலறை. அலமாரி நிறையக் குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்கள், சுவரில் பதித்திருந்த கரும்பலகை.

சின்னஞ்சிறு உலகமே அந்த அறைக்குள் அடங்கியிருந்தது. சாரு, தீபாவைச் சமாதானப்படுத்த வேண்டும் என்கிற நினைப்பேயில்லாமல் சிறு குழந்தையைப் போல ஒவ்வொரு பொருளையும், தொட்டுத் தடவிப் பார்க்க, தீபா பெரிசாய் அழத் தொடங்க, ஷீலா மாடியேறி வந்தாள். ''சாரு...''

கையில் ஏதோ ஒரு பொம்மையை வைத்துக் கொண்டு, அதையே ஆச்சரியத்துடன் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சாரு, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''உம்?''

''தீபாவுக்கு சாப்பாடு, உனக்குத் தேவையான ஆகாரம் எல்லாம் மாடி ரூமுக்கே வரும். வேலைக்காரி கொண்டு வந்து தருவாள்.''

''எனக்கு எதுவும் வேண்டாம் மேடம். நான் கையில் டிபன் கொண்டு வந்திருக்கேன்.''

''இது உன் வீடு போல. உனக்கு எது வேணுமானாலும் நீ உரிமையோடு கேட்கலாம். ஆனா இவளைத் தனியா ரூம்லே விட்டுட்டு வந்துடாதே. அவ அடத்துல ரூமையே தலைகீழாப் புரட்டிடுவா. உனக்கு எது வேணுமானாலும் இதோ, இந்த பஸ்ஸரை அழுத்து. வேலைக்காரி மாடிக்கு வருவா. அவகிட்ட சொல்லி அனுப்பு.''

''சரி மேடம்.''

சாரு, அவள் போனதும், அறைக் கதவைத் தாழிட்டு விட்டுத் தீபாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

''இந்தா, இப்ப நான் உன்னை என்ன செஞ்சுட்டேன்? எதுக்காக இப்படி அழறே?''

''உன்னை எனக்குப் பிடிக்கல்லே.''

''ஆனா, எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கே.''

''என்னை எங்க அம்மா கிட்ட கொண்டு போய் விடு.''

''உங்க அம்மா எங்கேயிருக்காங்கன்னு எனக்குத் தெரியாதே கண்ணு. ஷீலா அக்கா, உங்க அம்மாவைத் தேடி அழைச்சிட்டு வர்றதுக்காகத்தான் போயிருக்காங்க.''

சிறுமி, கண்ணில் நீர் தளும்ப சாருவையே பார்த்தாள்.

''ஷீலா ஒண்ணும் எனக்கு அக்கா இல்லே.''

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாதும்மா. அவங்க உன் அக்காதான். பாரு, உனக்காக எத்தனை விளையாட்டுச் சாமான்கள் வாங்கித் தந்திருக்காங்க.''

''ஊஹூம். அவங்க எனக்கு அக்கா இல்லே.''

சிறுமி, விடாப்பிடியாய்த் தான் சொன்னதையே திருப்பிச் சொல்ல, ''அக்காவுக்கு உன் மேல எவ்வளவு ஆசை தெரியுமா?'' என்று சாரு தன் கருத்தை மறுபடியும் வலியுறுத்தினாள்.

''அவங்க என் அக்கா இல்லே. அம்மா!''

''என்னது!'' சாரு அதிர்ந்து விட்டாள்.

சிறுமி தான் எத்தனை பெரிய குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறோம் என்பதை அறியாமலேயே விசும்பித் கொண்டிருக்க, ''ஷீலா, உன் அம்மாவா?'' என்று திரும்பக் கேட்டாள் சாரு.

''உம்...''

''அப்பா யாரு?''

''தெரியாது.''

இதற்கு மேல் அவள் தீபாவிடம் எதுவும் கேட்கவில்லை. ஆனால், ஷீலாவைப் பற்றிய அவளது அபிப்பிராயம் மட்டும் கொஞ்சம் இறங்கித்தான் போனது.

'பெத்த குழந்தைய எவளாவது - தங்கைன்னு சொல்லுவாளா?'

'யார் கண்டது? எப்படிப் பெத்தாளோ, என்ன எழவோ...'

''சரி, சரி. அவ எப்படிப் பெத்திருந்தா நமக்கென்ன? ஒவ்வொருத்தி வாழ்க்கையிலேயும் ஆயிரம் ரகசியம் இருக்கும். அதையெல்லாம், தம்பட்டம் அடிச்சிட்டிருக்க முடியுமா?'



'மேலும், அதையெல்லாம் உன் கிட்ட வந்து சொல்லுவாளா? நீ பாடம் சொல்லித்தரவும், இந்தக் குழந்தையைப் பார்த்துக்கவும் வந்திருக்கே. உன் வேலையப் பார்த்துட்டுப் போவியா... வம்பு எதுக்கு....?'

சாரு தன்னைத்தானே அடக்கிக் கொண்டாள். குழந்தையிடம் இது பற்றியெல்லாம் பேசக்கூடாது என்கிற நினைப்பில் அவள் பேச்சை மாற்றப் பார்த்தாள்.

''அம்மா ஆபீசுக்குப் போக வேண்டாமா தீபா? நீ இந்த அக்காவோட சமத்தா இருப்பியாம். கொஞ்ச நேரம் பாடம். அப்புறம் கொஞ்ச நேரம் விளையாட்டு. அப்புறம் கொஞ்சம் நேரம் ரெண்டு பேரும் தூங்கலாம். நான் உனக்கு தேவதைக் கதையெல்லாம் சொல்லுவேனே...''

தீபா பதிலே பேசவில்லை.

குழந்தைகளிலேயே வடிகட்டின பிடிவாத குணங்களுடைய மொத்த உருவமாக இருந்தாள். இதற்காக, இவளைக் குறை கூறியும் பயனில்லை.

சராசரி குழந்தைக்குக் கிடைக்கக் கூடிய தாயன்பு, இவள் விஷயத்தில் பூஜ்யம். குழந்தைக்கு வேண்டிய தின்பண்டங்களும், விளையாட்டுப் பொருட்களும் இருந்தால் போதுமென்பது ஷீலாவின் அபிப்பிராயம். தீபாவுக்கு நேரம் தவறாமல் ஆகாரம், குளியல், வேளைக்கு மருந்து கொடுத்தல், அவளை ஸ்கூலுக்குக் கொண்டுவிட்டு அழைத்து வர கார், வேலையாள் - இவை போதுமா?

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த போதே சாரு, குழந்தையிடம் ஒரு விஷயத்தைக் கவனித்தாள்.

''தீபா, அம்மா சாயந்திரம் வந்துருவாங்க. வந்த உடனே, உன்னைத் தூக்கி வச்சுண்டு, 'தீபுக் கண்ணு - சமர்த்தா படிச்சயா?'ன்னு கேட்பாங்க. இல்லையா? நீ அதுக்குள்ள என்கிட்ட நிறையப் பாடம் படிச்சியானா அம்மா கிட்ட, பெருமையா, 'ஓ படிச்சேன்,'னு சொல்லலாமே. அம்மா உடனே உனக்கு நிறைய சாக்லெட் வாங்கித் தருவாங்க.

''உம். அப்புறமா கடையில புதுசா ஒரு பொம்மை வந்திருக்காம். ரொம்ப அழகா பேசிச் சிரிக்குமாம். அது கூட எங்க தீபாவுக்கு வாங்கித் தரப் போறேன்னு சொல்லிட்டிருந்தாளே! வேற என்னவெல்லாம் வேணும் கண்ணம்மாவுக்கு? புது ஃப்ராக்?''

தீபா வெறித்து முறைத்தது.

''வரப் போற ஞாயிற்றுக்கிழமை கார்ட்டூன் பிக்சர் ஒண்ணு இருக்கு அலங்கார்லே, அழைச்சிட்டுப் போகலாமா?''

தீபு முகத்தைத் திருப்பிக் கொண்டது.

''நிறையக் கலர் பென்சில் வாங்கித் தரச் சொல்லட்டுமா....''

தீபு தலையை உலுக்கியது.

''உன் கிட்ட சின்ன சைக்கிள் இல்லே போல இருக்கே. அம்மா கிட்ட சொல்லி, சைக்கிள் வாங்கித் தரச் சொல்றேன்.''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்.''

''அம்மா... அம்மாவை... என்னோட இதோ, இந்த 'பெட்'லே படுத்துக்கச் சொல்றயா?''

திறந்த வாயை மூடாமல், விழிகளை அகல விரித்து அந்தச் சிறுமியையே வெறித்துப் பார்த்தாள் சாரு.

''உங்க அம்மா, தினமும் உன் கூடத்தானே படுப்பாங்க?''

''இல்லே. நான் தனியாத்தான் படுக்கறேன். தூங்கற வரைக்கும் ஆயா என் பக்கத்துல படுப்பா. பாதித் தூக்கத்துல முழிச்சுக்கிட்டா, ஆயாவும் இருக்க மாட்டா. யாரும் இருக்க மாட்டாங்க. இந்த ரூம் கதவைச் சாத்தி, வெளில பூட்டிட்டுப் போயிடுவாங்க. எனக்குப் பயம்மா இருக்காதா? இப்ப இந்த ரூம் நல்லாயிருக்கேன்னு பார்க்கறயா? ராத்திரியில் வந்து பாரு. ரொம்பப் பயம்மாயிருக்கும். அதோ அலமாரியில் இருக்கற பொம்மைங்க எல்லாம் குட்டிப் பிசாசு மாதிரி கண்ணை உருட்டி முழிச்சுக்கிட்டு. கரடி பொம்மையெல்லாம் நான் பார்க்கவே மாட்டேன். யாருக்கு வேணும் இதெல்லாம்? நீ எடுத்திட்டுப் போ.''

தீபுவே சற்றுப் பொறுத்துக் கேட்டது. ''உன் வீட்டுல உனக்கு அம்மா இருக்காளா?''

''உம். இருக்காங்க. தீபு. நீ ரொம்பவும் பயந்து போயிருக்கே. கொஞ்ச நேரம் வேணா தூங்கறயா? அக்கா, உன் பக்கத்துலே படுத்துக்கறேன். இறுக்கமா கட்டிக்கறேன்.''

''உன்னோட அம்மாவை நீ அப்பிடித்தான் கட்டிப்பியா?''

''அது கிடக்கட்டும். நீ வாயேன். உனக்கு ராஜா ராணி கதை சொல்றேன். ஸிண்ட்ரெல்லா கதை தெரியுமோ? இங்கே வந்து படு. நான் சொல்லிட்டே இருப்பேனாம். நீ கேட்டுட்டே தூங்கிடுவியாம்.''

''ஸிண்ட்ரெல்லா கதை பிடிக்காதே. அம்மா, அப்பா கதை சொல்றியா?''

திணறி விட்டாள் சாரு. குழந்தைக்குத் தேவை தாய்ப்பாசம்தானே தவிர, டியூஷனும், மற்றப் பராமரிப்பும் இல்லையென்பதை நொடியில் புரிந்து கொண்டு விட்டாள். இத்தனை ஏங்கும் குழந்தையைக் கூடக் கவனியாமல், அதனுடைய விளையாட்டுக்களில் பங்கு கொள்ளாமல் ஷீலா அப்படி என்னதான் வெட்டி முறிக்கிறாள் என்கிற எரிச்சலும் எழுந்தது.

'இருக்கட்டும். சாயந்திரம் ஷீலா வந்ததும் இது பத்தி மனசு விட்டுப் பேசிப் பார்க்கணும்.'



சாருவின் மடியில் படுத்திருந்த சிறுமி, விடாமல் சிணுங்கினாள். ''அம்மா... அம்மா...''

''கொஞ்ச நேரம் தூங்கும்மா...''

''எனக்குத் தலைய வலிக்குது.''

''இது என்னடா தொந்தரவு! இதப் பாரு தீபு. கண்ணை மூடிட்டுத் தூங்கினா தலைவலி ஓடிப் போயிடும்...''

''உஹூம். எனக்குக் காய்ச்சல் வரும் போல இருக்கு.''

இந்த வார்த்தைகள் சாருவைத் தூக்கி வாரிப் போடச் செய்தது. பதறிப் போய் விட்டாள் அவள். குழந்தையின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தவள், கையை உதறினாள்.

நிஜம்தான். உடம்பு சுட்டது!

''இப்ப என்ன செய்யறது? ஏம்மா தீபு, அம்மா உனக்கு ஜுரம் வந்தா என்ன செய்வாங்க?''

''ஒண்ணும் செய்ய மாட்டா. ஆயாதான் மருந்து கொடுப்பா. கறுப்பும் பச்சையுமா ஒரு மாத்திரை கசப்பா, தொண்டையெல்லாம் எரியற மாதிரி ஒரு மருந்து.''

''அடிக்கடி உனக்கு ஜுரம் வருமா?''

''உம். இன்னிக்கு வந்தா, நாளைக்கு வராது. அதுக்கு அடுத்த நாள் வரும். கண்டிப்பா வரும்.''

''டாக்டர் கிட்ட காமிக்கலையா?''

''ஓ. காமிச்சதே. நான் இப்படியேதான் இருப்பேனாம். டாக்டர் சொல்லிட்டாங்க. நிறைய மருந்து எழுதிக் கொடுத்திருக்காங்க. அதையெல்லாம் ஒழுங்காச் சாப்பிடாட்டி நான் செத்துப் போயிடுவேனாம்.''

''யாரு சொன்னது?''

''ஆயாதான் சொல்லும். தினமும் நான் மருந்து குடிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறப்ப எல்லாம் இதைத்தான் சொல்லும். செத்துப் போறதுன்னா என்ன? உனக்குத் தெரியுமா? நீ செத்துப் போயிருக்கியா?''

''தீபா, கொஞ்ச நேரம் பேசாம இரு.''

சாரு அவளை மெள்ள அதட்டிப் பார்த்தாள். கேட்கிற வழியாயில்லை.

'ஒரு வேளை, இப்ப இவளுக்கு மருந்து ஏதாவது கொடுக்கணுமோ?'

சாரு. கட்டிலின் அருகிலிருந்த 'பஸ்ஸரை' அழுத்திவிட்டு, ஆயாவின் வருகைக்காகச் சற்று நேரம் காத்திருந்தாள். யாரும் வருகிற அறிகுறியே இல்லாததால் மீண்டும், அழுத்தினாள். கொஞ்சம் இடைவெளிவிட்டு, பிறகு

தொடர்ந்து... ஊஹூம். ஒருத்தரும் வரவில்லை.

'எல்லாரும் எங்கே போய்த் தொலைஞ்சாங்க?'

சாரு, குழந்தையைக் கட்டிலில் கிடத்திவிட்டு மெள்ள அறைக் கதவைத் திறக்க -

''நீயும் என்னை விட்டுப் போயிடாதே. எனக்குப் பயமாயிருக்கு.'' என்று தீபா அலற-

''இரும்மா, ஆயாவைக் கேட்டு மருந்து வாங்கி வந்துடறேன். இதோ இப்பவே வந்துடறேன்.'' என்று மளமளவெனக் கீழே இறங்கிய சாரு, கூடத்தின் பிரும்மாண்டமான சோபாவில் உட்கார்ந்திருந்த இரண்டு நபர்களைக் கண்டதும் சற்றுத் தயங்கினாள்.

''ஆயா... ஆயா!''

''ஆயா இல்லே. இப்பத்தான் சிகரெட் வாங்கிட்டு வர அனுப்பியிருக்கேன். நீங்க...''

சாரு, முன் பின் தெரியாதவர்களிடம், தன்னை எப்படி அறிமுகப்படுத்திக் கொள்வதென்று மென்று விழுங்கினாள்.

''ப்ளீஸ். உட்காருங்க.'' முதலில் பேசியவர், புன்னகை மாறாமல் எதிர் சோபாவைச் சுட்டிக் காட்டினார்.

'ஒரு கால் இவர்தான் ஷீலாவோட முதலாளியோ..' இந்த நினைப்பு தோன்றியவுடன், சாரு பவ்யமாகக் கைகட்டி அவர் சுட்டிக் காட்டிய சோபாவில் அமர்ந்தாள்.

ஷீலா இல்லாத நேரத்தில் வந்திருக்கிறாரே என்கிற பதட்டமும் ஒரு புறம் எழாமலில்லை.

''மேடம் இல்லை போலிருக்கே!''

''அப்படியா?''

அவரது சிரிப்பு, மேலும் காதளவுக்குப் பரந்து விரிந்தது.

''நான், புதுசா வேலையிலே சேர்ந்திருக்கேன்.''

''இஸ் இட்? என் கிட்ட சொல்லவே இல்லையே ஷீலா.''

''காலையில இருந்துதான் டியூட்டிக்கு வரேன்.''

''உம். இதுக்கு முன்னாடி அனுபவம் இருக்கா?''

''நிறைய. இல்லைன்னா இந்த வேலைக்கு வர முடியுமா? அப்பப்பா... ரொம்பவும் பொறுமை தேவை.''

''பொறுமை மட்டுமில்லே. புத்திசாலித்தனமும் வேணும். ஷீலா கெட்டிக்காரி. அவ செலக்ஷன் என்னிக்குமே சோடை போனதில்லே. உம். காலேஜ் கேர்ளா?''

''இல்லே. படிப்பை நிறுத்தி ரெண்டு வருஷமாறது. பி.யு.சி. வரைக்கும்



படிச்சிருக்கேன். அதுக்கு மேலே படிக்க வைக்க பேரண்ட்ஸால முடியலே.''

''இந்த வேலைக்கு இந்தப் படிப்பு போதும். என்ன மிஸ்டர் சுகுமார். என்ன நான் சொல்றது?''

முதலாமவர், தன் பக்கத்திலிருந்தவரிடம் கேட்டுவிட்டு, நமட்டுத் தனமாய்ச் சிரிக்க - கூட இருந்தவர், பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டு விட்டாற் போல விழுந்து விழுந்து சிரிக்க, சாரு, இவர்களது சிரிப்பின் காரணம் புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்த போதுதான், வாசற்புறத்தில் ஏகக் கூச்சல். ஜீப் வந்து நிற்கும் சத்தம். தொடர்ந்து போலீஸின் கனமான பூட்ஸ் காலடி ஓசை.

சிரிப்பு பாதியிலேயே நிற்க, அதிர்ந்து எழுந்தனர் அவர்கள். சாரு, எதுவுமே புரியாமல், தானும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள்.

இதைத் தொடர்ந்து வீட்டிலிருந்த ஒவ்வோர் அறைக் கதவும் போலீசார் இடித்த இடியில், உதைத்த உதையில் கிறீச்சிட்டபடி திறந்தன.

ஒவ்வோர் அறையிலிருந்தும் ஜோடியாய் வெளிவந்த ஆண், பெண்கள். அதில் ஷீலாவும் இருந்தாள்!

அலற வாய் திறந்த சாரு, பிரமை பிடித்து நிற்க, ''நீ ஏன் கீழே வந்தே?'' என்று ஷீலா தான் இவளைப் பார்த்து அலறினாள்!

## 9

இரவு பத்து மணிக்கு மேல் சாருவை எங்கே போய்த் தேடுவது? ராஜா திகைத்து நின்றான். எத்தனை நேரம்தான் நடுத்தெருவில் நிற்பது? வீட்டுக்குத் திரும்பியவன், வாசல் திண்ணையில், வெட்டிச் சாய்ந்த மரம் போலக் கிடந்த ரங்குவைக் கண்டு வெலவெலத்துப் போய்விட்டான்.

''மாமா...''

''ஐயோ! உங்க மாமா நம்மையெல்லாம் மோசம் பண்ணிடுவார் போல இருக்கேடா. இந்தப் பொண்ணை இன்னும் காணோமே. என் தெய்வமே, வெங்கடாசலபதி, உன் சந்நிதிக்குக் குடும்பத்தோட வரேம்பா...'' விசாலம்தான் பெரிசாய் அழுது. அண்டை அயலை வீட்டு வாசலில் கூட்டிவிட்டாள்.

பங்கஜம் நிலைகுலைந்து போய்க் கூடத்தில் சாய்ந்து கிடக்க, குமார் சட்டையை மாட்டிக் கொண்டு டாக்டர் வீட்டுக்குப் பறந்தான்.

''என்ன மிஸ்டர் ஆச்சு?''

''கொஞ்சம் நேரம் முந்திகூட ரங்கு மாமா நல்லாத்தானே இருந்தார்! என் பெண்ணோட ஜாதகத்தைக் கொண்டு வந்து காமிச்சேனே.''

''யார் சார்...? தினமும் காலம்பற ஒரு பொண் - மாநிறமா, துருதுருன்னு -

ஓட்டமும் நடையுமாய் போகுமே. அதையா இன்னும் காணோம்? த்சொ, ச்சொ...''

''என்ன வயசிருக்கும்? ஒரு இருபது இருக்குமா?''

''காலம் ரொம்பக் கெட்டுக் கிடக்கு. எங்கே பார், பலாத்காரம், கற்பழிப்புத்தான். தினமும் காலம்பற பேப்பர்ரைப் பிரிக்கறப்பவே கண்ணுல படற நியூஸ் இதுதான்...''

''பாவம், எங்கே எப்படித் திண்டாடறதோ...''

''நீர் ஒரு அப்பாவிங்காணும். இந்தக் காலத்துப் பெண்கள் அப்படியொண்ணும், சின்னக் குழந்தைகள் இல்ல - மிட்டாயைக் காட்டி அழைச்சிட்டுப் போறதுக்கு. இது ஏதாவது காதல், கத்தரிக்காய் விஷயமாயிருக்கும். பொண் மேஜரா இருப்பா. எந்தத் தடியனோடயாவது ஓடிப் போயிருப்பா. எல்லாம் புது மோகம் தணிஞ்சவுடனேயே தானா வந்து நிற்பா. பார்த்துட்டேயிரும்...''

வார்த்தைகள்... வாசல் முழுதும் சாக்கடை நீரை வாரி இறைத்தாற் போன்ற வார்த்தைகள். அந்தத் தெருவில் மிகவும் பழக்கமானவர்கள் உரிமையுடன் வீட்டுக்குள் இடித்துப் புடைத்துக் கொண்டு முன்னேறி பங்கஜத்தையும் கல்யாணியையும் தங்களது கேள்விக் கணைகளால் திணறடித்தார்கள்.

மற்றவர்கள், அறிமுகமே இல்லாத புதிய நபர்கள் எல்லாரும் தெருவில் சின்னச் சின்னத் தீவாய்க் கூடி நின்று, வாய் வலிக்க வம்பு பேசினர்.

பழக்கமேயில்லாத சாருவைப் பற்றி - எல்லாம் தெரிந்தவர்கள் போலப் பேசினர். சின்னப் பெண் வேலைக்குப் போவதால் என்னென்ன கஷ்டங்கள் வரும் என்பதைப் பற்றி ஒரு பட்டி மன்றமே நடத்தினர். அதே சமயத்தில் அவர்கள் வீட்டுப் பெண்கள் எத்தனை பத்தினித்தனமாய் நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றி மேடையில்லாமல் பிரசங்கம் செய்தனர். 'கல்யாணம் செய்து கொடுக்க வக்கில்லாத குடும்பத்துப் பெண்களின் கதி இதுதான்.' என்று கடைசியில் நீதி போதனைகளையும் அள்ளி வீசினர்.

''பல்ஸ் ரொம்ப அதிகமாயிருக்கு... நான் எழுதித் தர மாத்திரை மருந்தைச் சட்டுனு வாங்கிட்டு வரீங்களா...''

இத்தனைக் கூச்சலுக்கும் நடுவில், சுருதி சேராத சங்கீதமாய் டாக்டரின் குரல்.

''அம்மா, பணம் இருக்கா?''

''இல்லையேடா, எல்லாமே அவதானேடா இதுவரைக்கும் கவனிச்சிட்டிருந்தா? குழந்தையைக் காணோமே. மறுபடியும் அவளை நான் உசிரோட பார்ப்பேனா...''

பங்கஜம். பெருங் குரலெடுத்து அழ ஆரம்பிக்க, ராஜா, பாய்ந்து சென்று காமெரா அறையிலிருந்த சாருவின் பெட்டியைத் திறந்து சாக்லெட் டப்பாவிலிருந்து ஒரு நூறு ரூபாய்த் தாளை எடுத்துவந்து குமாரின் கையில்



கொடுத்தான்.

அவன் மருந்து வாங்கப் பறந்த அதே சமயத்தில் ராஜா, மறுபடியும் அந்தப் பெட்டியைத் திறந்து அவள் குறித்து வைத்திருந்த விலாசங்களில், ஷீலா தேவியின் விலாசத்தைக் தேடி எடுத்துக் கொண்டு, வெளியே வந்தபோது ஷீலாவின் கார் டிரைவர் இவர்களது வீட்டு வாசலில் கேட்டுக் கொண்டிருந்தான்.

''சாருலதாங்கற பொண்ணு வீடு இதுதானுங்களே?''

''ஆமாம்...'' கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னுக்கு வந்தான் ராஜா. மருந்தும் கையுமாய் நொடிப் பொழுதில் வீடு திரும்பிய குமார் இந்தப் பக்கம்; இவன் என்ன சொல்லப் போகிறானோ என்கிற திகிலில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நின்ற பங்கஜம் அந்தப் பக்கம்.

''சார், இதுல ராஜாங்கறது யாரு?''

''நான்தான்.''

ஓடி முன்வைத்த ராஜாவின் மார்பில் கைவைத்துப் பின்னால் தள்ளினான் குமார், ''டேய்.. இன்னொரு தடவை எல்லாத்துக்கும் முந்திரிக் கொட்டை மாதிரி முன்னால் வந்து நின்னே, தொலைச்சிடுவேன். நீ சொல்லுப்பா, நான் அவ அண்ணன்தான்.''

வந்தவன் ஒரு கணம் தயங்கினான்.

''அட சொல்லுப்பா, பொண்ணைக் காணோம்ன்னு அவங்க இத்தனை நேரமாத் தவிச்சிட்டிருக்கிறது தெரியலை?'' கும்பலில் ஒருவர் சத்தம் போட்டார்.

''அந்தப் பொண்ணு லாக்கப்புல இருக்குங்க.''

''ஐயோ! என்னாது?''

''ஆமாங்க. பிராத்தல் கேஸ். இன்னிக்கு ஷீலாம்மா வீட்டுல ரெய்டு. அத்தனை பேரும் உள்ளேயிருக்காங்க. இதோ. இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் காலைல வாங்க. ஷீலாம்மாதான் சீட்டுக் கொடுத்து அனுப்பினாங்க. எதுவும் கவலைப்பட வேணமாம். ஜாமீன் கொடுத்து வெளியே வர்றதுக்கு ஆளுங்களை ஏற்பாடு பண்ணி வச்சிருக்காங்களாம். அந்தப் பொண்ணு பாவம். அழுதுகிட்டேயிருக்கு. 'விஷயத்தை எங்க வீட்டுல யார்கிட்டேயும் சொல்ல வேணாம், எங்க அத்தை மகன் ராஜான்னு ஒருத்தர் இருப்பாரு. அவர் கிட்ட மாத்திரம் சொல்லு'ன்னு சொல்லிச்சு. நீங்க. அத்தனை பேருமா ஒன்னு சேர்ந்து மிரட்டற மிரட்டல்லே விஷயத்தை பப்ளிக்கா சொல்ல வேண்டியதாய்ப் போச்சுங்க.''

அவன் அதற்கு மேலும் அங்கு நிற்கவில்லை.

கூடியிருந்த கும்பல் ஒரு முடிவு தெரிந்த நிம்மதியில் 'நாங்கள் ஊகித்த முடிவு சரிதான்' என்பது போல, தங்களுக்குள் ரகசியமாய் பேசியபடி கலைந்தனர்.

டிரைவர் வந்ததோ. அவன் சொன்ன வார்த்தைகளோ எதுவுமே காதில்

விழாமல், மருந்தின் மயக்கத்தில் கண் மூடிக் கிடந்தார் ரங்கு.

ரவி, ராகவன் உட்பட, அத்தனை பேருமே கப்சிப் என்று அடங்கிப் போய்விட்டனர்.

குடும்பத்தினர் அனைவரும் வீட்டிற்குள் வந்தவுடன், கதவைச் சாத்தித் தாழிட்டான் குமார்.

''ஏண்டா ராஜா, பிராத்தல்னா என்ன?'' கனமான மௌனத்தில் கல் விட்டெறிந்தாற் போல் விசாலத்தின் கேள்வி.

''அம்மா, பொண்ணு சம்பாதிக்கறா சம்பாதிக்கறான்னு குதிச்சயே, இப்ப தெரிஞ்சுதா, அவ எப்படி சம்பாதிக்கறான்னு?''

''குமார், அசிங்கமாப் பேசாதே. அந்த ஆளை, அப்படி நடு ரோட்டிலே நிற்க வைச்சு விசாரிச்சதே தப்பு. நாலு பேருக்கு முன்னாடி தலைகுனிவாப் போச்சே.''

''நான் கண்டேனா அவன் இப்படி ஒரு நியூஸைச் சொல்லுவான்னு? ஏதோ ஆக்ஸிடென்ட்ல ஆள் அவுட்டாயிருக்கும்னு நினைச்சேன். பாவி, அப்படிப் போயிருந்தாலும் கூட நான் சந்தோஷப் பட்டிருப்பேன். அவ உடம்பை வித்துச் சம்பாதிச்ச பணத்துல நாம உட்கார்ந்து தின்னிருக்கோமே.''

''டேய், டேய் குமார், சத்தம் போடாதேயேன். அவ நீ நினைக்கிற மாதிரி இல்லேடா. ஏதோ, நேத்து அந்த ஷீலா வீட்டுல ஒரு பொண்ணுக்கு டியூஷன் சொல்லித் தரணும்னு சொல்லிட்டிருந்தா. இன்னிலேயிருந்து புது வேலையில் போய்ச சேர்ந்திருக்கா.'' ராஜா குமாரை அடக்க முயன்றான்.

''ஏன், அந்த சோப்பு கம்பெனி வேலை என்னாச்சு?'' பங்கஜம் அழுது கொண்டே விசாரித்தாள.

ராஜா, பதில் சொல்லும் முன்பு குமார் சீறி வெடித்தான். ''அவனை ஏன் கேக்கறே? என்னைக் கேளு. நான் சொல்றேன். அந்த சோப்புக் கம்பெனிய இழுத்து மூடி, வருஷக் கணக்காகுது. இவ அந்தக் கம்பெனியிலே தொடர்ந்து வேலை செய்யறதாச் சொன்னப்பவே நான் முழிச்சிக்கிட்டேன். டவுன்லே, இவ சொல்ற ஹெட் ஆபீஸைத் தேடிக் கண்டு பிடிச்சு, ரகசியமா விசாரிச்சுட்டேன். இவ, எத்தனை நாள்தான் வேலையில்லாம, மேலுக்கு வேஷம் போட்டுட்டு வீட்டிலே இருக்கறவங்களையெல்லாம் பொட்டை அதிகாரம் பண்ணிட்டிருக்கப் போறா.... அதையும்தான் பார்க்கலாமேன்னுதான் வாயை மூடிட்டு இருந்தேன்.''

''இதை ஏண்டா முன்னாடியே சொல்லலை?''

''சொல்லியிருப்பேம்மா. எப்படியும் வேலை போன ஒரு மாசத்துல இவ ரகசியம் அம்பலமாக வேண்டியதுதானேன்னு சும்மா இருந்தேன். இவளா, இவ வாயாலே வேலை போன விஷயத்தைச் சொல்லுவான்னு காத்துட்டிருந்தேன்.



ஆனா, வீட்டுக்காரன் வந்து வாடகைக்காகக் கத்தினப்ப, இவ மூணு மாச வாடகையை விட்டெறிஞ்சா இல்லே? அப்ப கொஞ்சம் அசந்து போயிட்டேன். இதுக்கு அப்புறமும் கல்யாணியைக் கொண்டு விட, ரெண்டாவது பிரசவத்துக்கு அழைச்சிட்டு வர, வீட்டு மளிகைச் சாமான்லேயிருந்து ரவி, ராகவனுக்கு பஸ் பாஸ் வாங்கறது வரைக்கும் அத்தனையும் அவ இழுத்துப் போட்டுட்டப்போ அப்பப்பா... அவ்வளவையும் நான் மனசுக்குள்ளேயே சொல்லவும் முடியாம துப்பவும் முடியாம எத்தனை அவஸ்தைப் பட்டிருப்பேன் தெரியுமா?''

''அடிப் பாவி! குடும்பத்தைக் காப்பாத்தறதாச் சொல்லிட்டு, குடும்ப மானத்தை முச்சந்தியிலே நிறுத்தி வச்சுட்டியேடி. அப்பா குமார், இத்தனையயும் இப்ப சொல்றியே. நாங்க ஒண்ணுமே தெரியாத அப்பாவிங்களா இருந்தோமே!'' விசாலம் பங்கஜத்தை இழுத்துக் கட்டிக் கொண்டு, 'ஓ'வென அழுதாலும் அவள் மனத்தில் பெருத்த நிம்மதி.

'அம்மாடி! நல்ல வேளையா அவ கண்ணிலே இருந்து என் மகன் தப்பிச்சான். யார் செஞ்ச புண்ணியமோ, என் நாட்டுப் பொண்ணு வர்றதுக்கு முன்னால இவளோட சொருபம் தெரிஞ்சது.'

பொழுது எப்பொழுது விடியும் என்பது போல அத்தனை பேரும் தூங்காமல் தலைக்குத் தலை சாருவை வசை பாடியபடியே இரவு முழுக்க உட்கார்ந்திருந்தார்கள்.

விடிகாலையில் ராஜா போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிளம்பியபோது, ''நான் வரலை. உனக்கு அவ மேல அத்தனை அக்கறை இருந்தா, நீ போயிட்டு வா, அவ முகத்துல விழிக்கறதே மகா பாவம்.'' என்று குமார் அனலாய் வார்த்தைகளைக் கக்கிவிட்டு வெளியேறினான்.

விசாலம், தன் மகனின் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துக் கொண்டு கிணற்றடிப் பக்கம் விரைந்தாள். ''என்னம்மா?''

''ஏண்டா, போனவளுக்குத் திரும்பி வர்றதுக்கு வழி தெரியாதா? நீ போய் அவளை மாலை மரியாதை பண்ணி, அழைச்சிட்டு வரணுமா?''

''அம்மா, அவ தப்பு எதுவும் செய்யலை. உனக்குத் தெரியாது அவளைப் பத்தி.''

''ஆமா, எனக்குத் தெரியாது. உனக்குத்தான் ரொம்பத் தெரியும். அதுதான் அவ அண்ணங்காரனே புட்டுப் புட்டு வச்சிட்டானே. போதாதா?''

''இதப் பாரு, இந்த விஷயத்துல நீ தலையிடாதே. அவ, இந்தக் குடும்பத்துக்காக ஓடிஓடி சம்பாதிச்சப்ப....''

''ஓடி ஓடிச் சம்பாதிக்கலைடா, நாலு பேரோட போய்ச் சம்பாதிச்சிருக்கா. இப்ப நினைச்சாலும், அவ அப்படிச் சம்பாதிச்சுப் போட்டுத் தின்னாவது இந்தத் தேகத்தை வளர்க்கணுமான்னு ஆத்திரம் மண்டறது. உடம்பெல்லாம் எரியுது.''

''போ, எரியுதுன்னா அதோ அந்தக் கிணத்துல குதி.''

''நீ அவளை அழைச்சிட்டு வர்றதுக்குப் போனே, திரும்பி வர்றப்ப என் பொணத்தைத்தான் பார்ப்பே.''

விசாலத்தின் இந்த வார்த்தைகள் அவனைச் சற்றுத் தயங்க வைத்தது என்றாலும் ஒரு வினாடி தாமதித்து விட்டு விருட்டெனக் கிளம்பி விட்டான்.

வாசல் வரையில் போனவன் என்ன நினைத்தானோ, கூடத்து மூலையில் படுக்க வைக்கப்பட்டிருந்த ரங்குவின் அருகில் வந்தான். ''மாமா...''

அவனது மெல்லிய அழைப்புக்குப் பதிலாக, அவரது இடுங்கிய விழிகள் மெள்ளத் திறக்க, கன்னத்தில் பரவிய கண்ணீர் சுருங்கிய சருமத்தில் பல கிளை நதிகளை உற்பத்தி செய்தது.

''மாமா... நான் போய் அவளை அழைச்சிட்டு வரேன்.''

''எவளை?''

''சாருவை.''

''அவளுக்கும் இந்த வீட்டுக்கும் என்ன சம்பந்தம்?''

''மாமா!''

''அவளை இந்த வீட்டுப் படியேறச் சொல்லாதே. அப்படியே போயிடச் சொல்லு.''

''அவ எந்தத் தப்பும் செய்யலை மாமா.''

''அப்படின்னா சோப்புக் கம்பெனி வேலைய விட்டதுக்கு அப்புறம், சுளை சுளையா இந்த வீட்டுக்காகச் செலவழிச்சாளே, அந்தப் பணம் எப்படி வந்தது? எங்கேயாவது கொள்ளையடிச்சாளா?''

பேச்சே எழும்பாமல், ஸ்தம்பித்து நின்றான் ராஜா. 'ஆமாம், கொள்ளைதான் அடித்தாள்.' இப்படிப் பளிச்சென்று சொல்லிவிட்டால் என்ன?

சொல்லலாம்தான், எப்படிச் சொல்வது? பாம்பு வாய்க்குப் பயந்து புலி வாயில் அகப்பட்டது போல இதை எப்படிச் சொல்லுவான்?

''ஒண்ணு மாத்திரம் சத்தியம் செய்வேன் மாமா. அவ லாக்கப்புல இருந்தாலே உடம்பை வித்தவ இல்லே...''

''ராஜா, உனக்கெதுக்கு வம்பு? நீ சும்மாயிரு.'' புழக்கடையிலிருந்து வந்த விசாலம், மறுபடியும் மகனிடம் கெஞ்சாத குறையாக வேண்டினாள்.

''அப்ப, இவ இத்தனை நாள் எங்கே போயிட்டு வந்தா?''

குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்த கல்யாணி, உட்கார்ந்த இடத்திலிருந்தே மிக ஆவேசமாய் இருந்தாள்.

''வேலைக்குப் போனா, இந்த சோப்புக் கம்பெனிய விட்டா வேற வேலையே கிடைக்காதா?'' ராஜா பதிலுக்குச் சத்தம் போட்டான்.



''அதுதான் எங்கே வேலைக்குப் போனா? அங்கே இவளுக்கு எத்தனை சம்பளம் கொடுத்தாங்க? இவளை வேலைக்கு வச்சிட்ட மனுஷனைக் கொண்டு வந்து நிறுத்து பார்க்கலாம்.'' கல்யாணியின் இரைச்சல், தெரு முழுதும் எதிரொலிப்பது போலிருந்தது.

''அம்மா, இனிமே இந்த வீட்டிலே ஒரு க்ஷணப் பொழுதுகூட இருக்க மாட்டேன். உன் மாப்பிள்ளை கோபக்காரர்தான். ஆனா, மானஸ்தர். அவருக்கு மட்டும் இந்த விஷயம் தெரிஞ்சது... என்னை ஆயுசுக்கும் திரும்பிப் பார்க்கவே மாட்டார். இன்னிக்கு ராத்திரியே நான் ஊருக்குப் போறேன். அவர் காலுல விழுந்தாவது என்னைச் சேர்த்துக்க...'' வார்த்தைகளை முடிக்காத கல்யாணி வாசற் பக்கம் வெறித்துப் பார்த்தாள்.

இவளது பார்வை ஓடிய திசையில், குடும்பத்தினர் அனைவரும் பார்வையைச் செலுத்தினர்.

''சாரு...'' ராஜாதான் துக்கம் தாளாமல் கூவினான்.

ஷீலாவுடன் காரிலிருந்து இறங்கி வந்தாள் சாரு. குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.

கார் இந்தத் தெருவில் திரும்பிய போதே, சத்தமிடாமல் இவள் வீட்டு வாசலில் குலுங்கி நின்றபோதே, ''வந்துட்டா... வந்துட்டா...'' என்று அக்கம் பக்கத்தினரின் சலசலப்பு.

ஆவலை அடக்க மாட்டாமல் எட்டிப் பார்த்த பெண்கள், சிறுமிகள், 'அவளை என்ன பார்வை?' என்று கணவர்களை அடக்கித் தங்களது முதுகுக்குப் பின்னால் தள்ளிவிட்டு தாங்கள் மட்டும் ஜன்னல் இடுக்கு வழியே எட்டிப் பார்த்த மனைவிகள். 'இந்தாடா. இந்த வயசுல வம்பென்ன வேண்டிக் கிடக்கு?' இப்படி தங்களது புத்திரர்களை அதட்டி, வீட்டுக்குள் கழுத்தைப் பிடித்துத் தள்ளியாவது ஓரப் பார்வையால் காரை வெறித்த தகப்பன்மார்கள்.

இதுவரையில், சாருவை ஒரு மனுஷியாக நினைத்துத் திரும்பிப் பார்க்காதவர்கள்கூட இன்று சில நொடிப் பொழுது நின்று கவனித்தார்கள்.

''சாரு...'' ராஜாவின் அலறல்.

படுத்துக் கிடந்த ரங்கு, தன் தெம்பு அனைத்தையும் ஒன்றுதிரட்டி, எழுந்து உட்கார்ந்து வாசற் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

''அப்பா...!''

திருவிழாவில் தொலைந்து போன குழந்தை, பெற்றோரை மீண்டும் சந்தித்தால் ஏற்படும் துக்கத்தை விடவும், அதிக துக்கத்துடன் சாரு அலறிக் கொண்டே வாசற் படியில் கால் வைக்க, அது நேரம் வரையில் திண்ணையில் அமர்ந்து, புகைபிடித்துக் கொண்டிருந்த குமார் சிகரெட்டை வீசியெறிந்துவிட்டு,

அவள் முன் வந்து நின்றான்.

''எங்கேடி வந்தே?''

சாரு தலைகுனிந்து நின்றாள்.

''உன்னைத்தான் கேட்கிறேன், எங்கே வந்தேன்னு?'

''மிஸ்டர், தயவு செஞ்சு உள்ளே போய்ப் பேசுவோம். தெருவுல எல்லோரும் வேடிக்கை பார்க்கறாங்க பாருங்க.'' ஷீலா, குமாரிடம் பரிதாபமாய்க் கெஞ்சினாள்.

''நீங்க ரெண்டும் பேரும் இப்படியே திரும்பிப் போயிடுங்க. எங்க அப்பா, உசிருக்காகப் போராடிட்டிருக்கார்.'' குமார், வாசற்படியில் கை வைத்து மறைத்தான்.

''அப்பா...'' அவனது கையைத் தள்ளிவிட்டு, உள்ளே நுழைய முயன்ற சாரு, அப்பாவின் மூர்த்தண்யமான தோற்றத்தைக் கண்டு அப்படியே பிரமித்து நின்றாள்.

''வெளில போ!'' ரங்குவுக்கு எப்படி இத்தனை வலிமை வந்தது? கண்கள் சிவப்பேற எண்ணமாய்க் கத்துகிறார் அவர்.

''நான் இவங்க பொண்ணுக்கு டியூஷன் சொல்லித் தரப் போனேன்டா.'' என்றாள் அவள் குமாரிடம் அழுதபடி.

''நேத்தியிலேருந்து அது- அதுக்கு முன்னாடி என்ன செஞ்சுட்டிருந்தே? எப்படி சம்பாதிச்சே?''

''உழைச்சு சம்பாதிச்ச பணம்தான்.''

''அதுதான் எப்படி உழைச்சே?''

குமாரின் கேள்வியை, அதற்கு மேலும் தாங்க முடியாத ராஜா, ஓடிவந்து அவனது சட்டையைப் பிடித்து, ''ஈவு இரக்கமில்லாம பேசாதே குமார்.'' என்றான்.

''ஷட் அப். நீ யாரு என்னைக் கேட்க? அன்னிக்கு இவ சம்பாதிக்கற திமிர்லே என்னவெல்லாம் பேசினா? அதுக்கெல்லாம் பதிலடி கொடுக்க வேண்டாமா? ஏண்டி, இப்படிப் போய்ச் சம்பாதிக்கற பெருமையிலதான் அன்னிக்கு என்னை அந்தப் பேச்சு பேசினே? வெறும் பி.யு.சி. படிச்சவ, கேட்டப்ப எல்லாம் நூறு நூறு ரூபா நோட்டா எடுத்து வீசினப்பவே நான் சந்தேகப்பட்டேன். உன்னை மாதிரி திமிர் எடுத்தவளுக்குத்தான் இது காலம். நான் ஒழுங்கா காலேஜ் படிப்பை முடிச்சுட்டு, எம்பிளாய்மெண்ட் ஆபீஸ் வாசல்லே தினம் தபஸ் கிடந்தும், வேலை கிடைக்காம உன் வாயாலே திட்டு வாங்கிட்டு... த்தூ... செய்யறது முழுக்க அசிங்கம். இதுல வாய் வேற உனக்கு.''

''குமார், அநாவசியப் பேச்சு எதுக்கு? அவளைப் போகச் சொல்லு.'' ரங்கு அழுத்தமாய்ச் சொன்னார்.

சாரு, அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



''போடி...''

குமாரின் இத்தனை கோபமும் நேற்றைய சம்பவத்தால் மட்டும் தோன்றியதில்லை. நாட்கணக்காய், மாதக் கணக்காய் நெஞ்சுக்குள்ளேயே இதுநாள் வரையில் அடைத்து வைத்திருந்த கோபம் - இன்று சரியான சந்தர்ப்பம் கிடைத்தவுடன், சீறி வெடித்தது.

பங்கஜம், பெண்ணின் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல், முந்தானையில் முகத்தைப் புதைத்து அழுது கொண்டிருந்தாள்.

''ராஜா, நீ இப்படி வா சொல்றேன்.'' விசாலம் ஒரு மூலையில், நின்றபடி. மகனை அடிக்கொரு தரம் அழைத்துக் கொண்டே இருந்தாள்.

சாரு என்ன நினைத்தாளோ, ''வாங்க, போகலாம்.'' என்று ஷீலாவின் கையைப் பிடித்தபடி திரும்பி விட்டாள்.

காரில் ஏறப் போனவளை, ராஜாவைத் தவிர வேறு யாருமே தடுக்கவில்லை. ''எங்கே போறே சாரு? ப்ளீஸ்... அப்பா கிட்டே எல்லாத்தையும் சொல்லிடு. நான் சொல்லிடட்டுமா?''

''வேண்டாம் ராஜா. இனிமே எதைச் சொன்னாலும் இவங்க காதுல ஏறாது. நான் போறேன்.''

''நானும் வரேன்.''

''எங்கே? நான் ஷீலாவோட போறேன். அவ வீட்டுலதான் இனிமே தங்கப் போறேன். உனக்கு அங்கே வந்தா கௌரவம் குறைச்சலாயிடும்.''

''சாரு...''

''என்னை வற்புறுத்தாதே ராஜா. நாம ரெண்டு பேருமா வெளியே போனா யார் நமக்குச் சோறு போடுவா? வா. ரெண்டு பேருமா சமுத்திரத்திலே குதிச்சடலாம்ன்னு நீ சொல்லுவே. எனக்குத் தற்கொலை பிடிக்காது ராஜா. எதுக்காகச் சாகணும்? இன்னிக்கு என் குடும்பம் என்னை வெறுத்து ஒதுக்கினதாலே எனக்கு உலகமே இருண்டு போயிடலே. இவங்களுக்கு இன்னிக்குக் கோபம். பைத்தியக்காரத்தனமான கோபம். இந்தக் கோபம் எத்தனை நாளைக்குச் சோறு போடும். அப்படியே இவங்களுக்கு ஒரு ரோஷம் வந்து, உழைச்சுச் சம்பாதிக்கட்டும். எனக்கும் சந்தோஷம்தான். அவங்க அவங்க சம்பாதிக்கத் தொடங்கினா, பத்து ரூபா காசுக்காக நாயா அலைஞ்சால் அப்பத்தான் தெரியும் இந்த சாருவோட அருமை.''

''இவ பூசிட்டிருக்கிற சேற்றை நீயும் பூசிக்கப் போறயா சாரு?''

''நோ. இவ வீட்டுலே இருக்கற குழந்தைக்கு ஒரு செவிலித் தாயாகப்

போறேன். ஷீலாவோட வீட்டுல இருந்தாலும் நான் சேறு படாம இருக்க முடியும் ராஜா. வெளியிலே யார் என்ன பேசினாலும் எனக்கு இனிமே கவலையில்லே. அவங்க பேசறதுக்கு இனிமே எதுவும் பாக்கியில்லே.''

''நான் உனக்காகத்தான் இங்கே இருக்கேன் சாரு.''

''எங்கே இருந்தாலும் நான் உன்னோட சாருதான். என்னையே நினைச்சிட்டு நீ கல்யாணம் பண்ணிக்காம அத்தையோட வயித்தெரிச்சலைக் கொட்டிக்காதே. நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ.''

சாரு படக்கெனக் காரில் ஏறி உட்கார, ஷீலா இதற்கு மேலும் என்ன செய்வது என்று புரியாமல், தயங்கித் தயங்கி காரில் ஏற, கண்ணிமைக்கும் நேரத்தில் கார் அந்தத் தெரு முனையில் சென்று மறைந்துவிட்டது.

ராஜா, கார் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இன்னும் ஏண்டா வாசல்லேயே நிக்கறே? உள்ளே வா..''

விசாலம்தான் மகனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

இதற்குப் பின் குமார் வேலை தேடிக் கொண்டதும் கல்யாணி புகுந்த வீட்டுக்குச் சென்றதும் நமக்குத் தேவையில்லாத விஷயங்கள்.

சாரு வீட்டை விட்டுப் போனவுடனேயே ரங்குவின் தலை சாய்ந்துவிடும் என்று பரவலாகப் பேசப்பட்ட வதந்தியைப் பொய்ப்பித்து அவர் சிங்கென்று எழுந்து உட்கார்ந்து விட்டார்.

விசாலம்தான் ஒரு நாள் கிணற்றடியில் வழுக்கி விழுந்து பிராணனை விட்டாள். அவள் காரியம் முடிந்த பின் ராஜா அந்த வீட்டில் தங்க விரும்பவில்லை.

''நான் நாளைக்குக் கிளம்பறேன்.''

''எங்கே போவே?'' ரங்குதான் கேட்டார்.

''எனக்கென்ன... எங்கே போனாலும் பிழைச்சுக்குவேன்.''

வாயில் சொன்னானே தவிர, எப்படிப் பிழைப்பது என்கிற முன்யோசனை எதுவுமேயில்லை.

ஷீலாவின் வீட்டுக்குத்தான் முதலில் போனான்.

''அவங்க இந்த வீட்டைக் காலி பண்ணிட்டுப் போயிட்டாங்களே!''

''எங்கே போனாங்க?''

''எனக்குத் தெரியாது சார்.''

இந்தப் பதிலில் அப்படியே உடைந்து போய்விட்டான் அவன்.






தீவிரமாய்த் தேடியபோது கிடைக்காத வேலை, இவன் அசிரத்தையாய் இருந்தபோது கிடைத்திருக்கிறதே... அதுதான் ஆச்சரியம்.

எதையுமே அவன் தேடிப் போகவில்லை. எல்லாமே அவனைத் தேடி வந்தது. வேலை, பெண்டாட்டி, எல்லாமே...

முதலில் வேலை கிடைத்ததும் பழைய நன்றி விசுவாசத்தை மறக்காமல் ரங்கு மாமாவிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை மணியார்டர் செய்து வந்தான் அவன்.

பெரிய வேலை எதுவுமில்லை. ஒரு மருந்துக் கடையில் சிப்பந்தி வேலை. அங்கு போன நேரம் மருந்துக் கடை முதலாளியின் மகள் கல்யாண வயதைத் தாண்டிக் கன்னியாகவே நின்று கொண்டிருந்தாள்.

முதலாளிக்குப் பெண் ஒரு சுமை. இவளுக்கு அடுத்து வரிசையாய் இதுபோன்ற சுமைகள் காத்திருந்தன.

ராஜா போன ஒரே மாதத்தில் தன் பெண்ணுக்கு அவனை வளைத்துப் போட்டுவிட்டார்.

ராஜாவின் விருப்பு வெறுப்புக்கு இதில் இடமே இல்லை. ரங்கு மாமாவின் வீட்டை விட்டு வெளியேறிய சில நாட்களிலேயே அவன் பசியை நன்கு உணர்ந்து விட்டான். அதைவிட மனிதர்களின் சுபாவங்களையும் நன்கு அறிந்து கொண்டான். சாருவைத் தேடி அலைந்த நாட்களில் - வயிறு 'ஓ'வென ஓலமிட்ட நாட்களில், அவனும்கூட ஐந்து பத்து திருடிப் போலீசிடம் வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறான்.

வயசாக ஆக காதல் நினைப்புகள் அடி மனதில் வண்டலாய்ப் படிந்து, நிகழ்காலப் பொறுப்புக்கள் தலைமீது கனமாய் அழுத்திற்று.

ராஜா இன்று சம்சாரி. இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பன். விசாலம் இருந்தால் சந்தோஷப்படுவாள். அதே சமயத்தில் மருமகளின் பாவத்தைக் கண்டு வருத்தப்படவும் செய்வாள்.

சரோஜினி அத்தனை வாயாடி. பாவம் ராஜாவால் ஒருசேர இரண்டு வாயாடிகளைச் சமாளிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டதாலோ என்னமோ, கடவுள் விசாலத்தை முன்கூட்டியே தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டான்.

திருமணமானதும், முதல் வேலையாக சரோஜினி தன் கணவன் அவனது

மாமாவிற்குப் பணம் அனுப்பி வருவதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினாள். ஐந்தாறு மாதங்கள் இந்த விஷயத்தில் மிகப் பிடிவாதமாக இருந்த ராஜா அதற்கு மேலும் தாக்குப்பிடிக்க இயலாமல் பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டான்.

கட்டிய மனைவியிடம் சத்தியமாகக் காதல் கிடையாது அவனுக்கு. இது ஒருவகை ஒப்பந்தம். இவளை மணந்தால் சோற்றுக் கவலை இல்லை அவனுக்கு. இருப்பதற்கு இடம் கிடைத்திருக்கிறது. இதற்குப் பதிலாக அவள் அவனுக்கு இரண்டு குழந்தைகளைக் கொடுத்திருக்கிறாள்.

மூத்த மகளுக்கு சாருவின் பெயர்தான். அது ஒன்றுதான் அவனால் செய்ய முடிந்தது. மகளைக் கூப்பிடும் போதெல்லாம் அந்த சாரு - ராணி மேரி கல்லூரியின் எதிரில், கல்யாண முருங்கை மரத்தடியில் அமர்ந்து அவனிடம் தன் ரகசியங்களைப் பகிர்ந்து கொண்ட சாரு - அலை மோதுவாள்.

'அவ எங்கே இருக்காளோ..'

''இந்தாங்க, மருந்துக் கடைக்குப் போறதுக்கு முன்னாலே குழந்தையோட யூனிபார்மை அயர்ன் பண்ணி வச்சுட்டுப் போங்க.''

சரோஜினியின் அதட்டலில் அவனது சாரு நெஞ்சுக்குள் அமிழ்ந்தே போவாள்.

கடைத்தெருவில் நீண்ட பின்னல் இடுப்பருகில் குதிக்க, எவளாவது நடந்து போனால், ராஜா ஒரு கணம் பரபரத்துப் போவான்.

'இது அவதானோ...'

''அங்கே என்ன பார்வை? இவனைக் கொஞ்சம் பிடியுங்க. நான் அந்தக் கடையிலே கொண்டை ஊசி இருக்கான்னு விசாரிச்சுட்டு வரேன்.''

அவன், கையில் இரண்டாவது மகனுடன், இதயத்தில் தாங்க முடியாத தவிப்புடன், தொலைவில் செல்லும் அவளையே வெறித்துக் கொண்டிருப்பான்.

குமார் கல்யாணத்துக்கு ரங்கு மாமா இவனுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்.

ஒருவேளை பழசெல்லாம் மறந்து சாருவை அவர்கள் அழைத்திருப்பார்களோ என்கிற நப்பாசையில் இருநூறு ரூபாய் செலவழித்துக் கல்யாணத்துக்கு ஓடினான்.

சாரு வரவேயில்லை. அவளுக்குப் பத்திரிகையே அனுப்பவில்லையோ? இல்லை, அவள் எங்கிருக்கிறாள் என்பதே இவர்களுக்குத் தெரியாதோ?

கல்யாணம் விமரிசையாக நடந்தது.

அப்பேர்ப்பட்ட வடிகட்டின சோம்பேறிக்குக் கூடப் பெண் கொடுக்க, இந்த நாட்டில் பெற்றவர்கள் இருக்கிறார்கள். பங்கஜத்தைத் தவிர, மற்ற எல்லோருமே சாரு என்கிற ஆத்மாவை மறந்து விட்டது போலத்தான் நடந்து கொண்டார்கள்.



''கடைசியில அவ எங்கே இருக்கான்னே தெரியாதா மாமி?''

அவனது கேள்விக்கு பங்கஜத்தின் விழிகளில் பொட்டாய் உதிர்த்த கண்ணீர்தான் பதில்.

''சும்மா சொல்லக் கூடாதுடா. அவ எப்படி சம்பாதிச்சாளோ என்னமோ. இந்தக் குடும்பத்து மேல அதீத பாசம் வச்சிருந்தாடா அவ. தனக்காக ஒண்ணு செஞ்சுக்கலை. ஒரு ஆம்பிளை மாதிரி குடும்பத்தை நிர்வகிச்சா. இந்தக் குமார், வேலைக்குப் போகணும்னும் இந்தக் கல்யாணி புக்ககத்துக்குப் போய் வாழ்க்கை நடத்தணும்னும் அவ பட்ட பாடு கொஞ்ச நஞ்சமில்லே. ஏணியில ஏறி, மேல் படிக்கு வந்ததுக்கு அப்புறம்தான் இவங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கு ஏணி மண்ணுல நிக்கலை. சாணியிலே புதைஞ்சிருக்குன்னு. உதறி விட்டுட்டாங்க. என்னால அப்படி முடியுமோ? எல்லோரும் புதுசு கட்டிக்கறப்போ எனக்கு என் குழந்தையில்ல என் கண் முன்னாடி நிக்கறா? எல்லோருக்கும் கல்யாண பட்சணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கறப்போ, எனக்கு என் குழந்தை சோறு கூட வேண்டாம்னு வேலைக்கு அவதி அவதியா ஓடின கோலம்தான் நினைப்புக்கு வர்றது!''

பங்கஜம் அழுத போது, ராஜாவும் சேர்ந்து அழுதான்.

இதற்குள், பங்கஜத்தைக் கல்யாணப் பந்தலில் யாரோ கூப்பிட்டார்கள். இவன், இரவு ரயிலுக்கு ரிசர்வ் செய்ய ஓடினான். மனசுக்குள் சாரு அடித்தளத்தில் அமுங்கிப் போனாள்.

அன்று சரோஜினி, குழந்தைகளுக்குத் துணி எடுப்பதற்காகக் கடைத் தெருவுக்குப் போய் விட்டு, ஹேண்ட் பாக்கை இழந்து வெறும் கையுடன் திரும்பி வந்து கத்திய போது கூட ராஜாவின் மனத்தில் சாருதான் வந்து நின்றாள்.

''எடுத்தவன் நல்லா இருப்பானா? அவன் கையைக் கருநாகம் பிடுங்க.''

''நீ ஜாக்கிரதையா இருக்கறதைவிட்டுட்டு, எடுத்தவனைத் திட்டாதே சரோஜி. அவனை எடுக்கத் தூண்டினது உன்னோட அஜாக்கிரதைதான்.''

''சொல்லுவீங்க. என்னைத்தானே சொல்ல முடியும்? ஐயய்யோ, இருநூறு ரூபா போச்சே.''

சரோஜினியின் கத்தலைப் புறக்கணித்துத் தனியே வந்து அமர்ந்த ராஜா சாருவின் நினைவில் ஆழ்ந்து போனான்.

அவளை மறுபடியும் பார்த்தாக வேண்டும்.

'இந்தப் பணத்தை அவள்தான் எடுத்திருப்பாளோ...'

'எதுக்கு? இப்பதான் விலாவோட பாதுகாப்புல போயிட்டாளே. அவகிட்ட இல்லாத பணமா?'

'ஒருவேளை, இதைச் சாரு எடுத்திருந்தா மறுபடியும் இந்தக் கடனை அடைக்க வருவாளோ?'

'எப்போ வருவா?'

அன்று முதல்தான் அவனை அந்த வியாதி பிடித்தது.

மருந்துக் கடையில் தன் வேலையில் ஈடுபட முடியாமல் அலறி அடித்துக் கொண்டு வீட்டுக்கு வருவான்.

''என்ன, இந்த நேரத்துல?''

''ஒண்ணுமில்லே. யாராவது வந்தாங்களா?''

''இல்லையே! ஏன், என்ன விஷயம்?''

''நத்திங், சும்மாத்தான் வந்தேன்.''

அவன் மறுபடியும் தன் வேலையைக் கவனிக்கப் போவான். கடையை மூடுகிற வரையில் பரபரப்பு அடங்காது.

''வீட்டுக்குப் போகணும்.''

''இப்பத்தானே மப்பிள்ளே போயிட்டு வந்தீங்க?''

''போனேன். யாராவது வந்திருப்பாங்களோன்னு தோணுது.''

''யாரை எதிர்பார்க்கறீங்க?''

''யாரை? யாரையும் இல்லையே...''

மாமனார்காரர், இவனை ஒரு மாதிரியாகப் பார்க்கத் தொடங்கினார்.

வீட்டுக்கு வந்ததுமே, ராஜா மனைவியிடம் கேட்கும் கேள்வி இதுதான்.

''இன்னிக்கு யாராவது வந்தாங்களா?''

''யாரும் வரவில்லையே!''

''இதப்பாரு. உன்னையோ என்னையோ தேடிட்டு யாராவது வந்தா உடனே எனக்குக் கடைக்குச் சொல்லி அனுப்பு.''

''ஆகட்டும். அப்படி யார் வரப் போறாங்க?''

''வருவாங்க. இன்னிக்கு இல்லைன்னாலும் என்னிக்காவது ஒருநாள் வருவாங்க.''

''அதுதான் யாருன்னு கேக்கறேன்.''

''யாரோ. அதைப்பத்தி உனக்கென்ன?''

அவனது பேச்சும், வார்த்தையும் சரோஜினியைக் கதிகலங்க செய்தது.

இன்று இவனுக்கு நாற்பது வயது இருக்குமா? இருக்கும். இன்னமும் இவன், அவள் மறுபடியும் வருவாள் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.



வீட்டு வாசற் கதவு தட்டப்பட்டால், ஓடிச் சென்று திறப்பவன் இவன்தான்.

வீட்டில் புதிதாய் வேலைக்காரி ஒருத்தியை நியமித்திருப்பதாய் சரோஜினி சொன்னால், பரபரப்புடன் புழக்கடைப் பக்கம் போய்ப் புது வேலைக்காரியைத் தரிசனம் பண்ணிவிட்டு வருவதும் இவன்தான்.

''வேலைக்காரியைப் பார்க்க ஓடினீங்களே?''

''இல்லைடி.''

''என்ன இல்லே?''

''இது அவளோன்னு பார்த்தேன். அவ இல்லே.''

''யார் அவ?''

இதற்குப் பதில் வராது. மிக நீளமான மௌனம். இவனது இந்தப் பேதலிப்புக்காக, சரோஜினியின் தந்தை எத்தனையோ சிகிச்சைகளைச் செய்து பார்த்து விட்டார். ஒன்றும் பயனில்லை.

''அவர் மனசுல யாரையோ நினைச்சு, எதிர்பார்க்கறார்.'' மனோதத்துவ டாக்டர்களின் பதில் இது.

''அதெல்லாமில்லை. மனுஷனுக்குப் பெண் சபலம் அதிகமாயிட்டது. அதான் இப்படி.'' இது சரோஜினியின் வாதம்.

ராஜாவின் ஆயுசுக்குள் ஒரு தடவை - ஒரேயொரு தடவை சாருவைப் பார்த்து விட்டால் போதும்.

அவள் -

வருவாளா?

**முற்றும்.**